உ

சிவமயம்.

நகுலேச்சர

விநோத விசித்திர கவிப் பூங்கொத்து.

(விளக்கக் குறிப்புரை சித்திரகோட்டங்களுடன்.)

நகுலேச ஸ்தோத்திரம்.

யாழ்ப்பாணத்து வலிகாமம் வடக்குப்பகுதிப் பிரசித்த நொத்தாரி
மயிலிட்டி
க. மயில்வாகனப்பிள்ளை
இயற்றியன.

இலங்கை இராஜாங்க சாசநாத்தியக்ஷநும்,
கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியுமாகிய
கௌரவ ஸ்ரீமாந்:
பொ. அருணாசலத்துரை அவர்கள்
திராவிட பாஷாபிமான ஞாபக சின்னமாகச்
சமர்ப்பித்துப்
பிரகடனஞ் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம்
"நாவலர்" அச்சுக்கூடம்.
1911.

WITH KIND PERMISSION

TO

THE HON'BLE

Mr. P. ARUNACHALAM, M.A. (Cantab), C.C.S.,

REGISTRAR-GENERAL, CEYLON,

THIS WORK IS,

In Recognition of His Services

For the Revival of Tamil Literature,

RESPECTFULLY DEDICATED

BY

THE AUTHOR.

நகுலேச்சர

விநோத விசித்திர கவிப் பூங்கொத்து.

சிவமயம்.

முகவுரை.

சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதாநந்த சிவாநுக்கிரகத்தினாலே தமியேன் ௧௯௦௬ம்௵ பங்குனிமீ வலிகாமம் மேற்குப் பகுதிப் பிரசித்த "நொத்தாரி" ஆய் அமர்ந்து உத்தியோகம் நடாத்தும் அதிகாரம் பெற்றனன். எனது உத்தியோக ஸ்தானத்தில் எனக்குத் தொழில்விருத்தியும் பணவருவாயுந் தேகாரோக்கியமும் மிகக் குறைவாயிருந்தமையால், இயல்பாகவே தன்மாட்டு வலித்திழுக்கும் ஆற்றல் சான்ற ஜென்ம ஸ்தானமானது பின்னும் பன்மடங்கு வலியுற்று என்னைத் தன்மாட்டு நாட்ட முறுவித்தது. அதனால் என்னை என் சுயவூருக்கு மாற்றிவிடும்படி காருண்யம் நிறைந்த ராஜாங்கத்தார்க்குப் பலமுறை விண்ணப்பித்துநின்றேன். நீதிநெறி பிறழாக் கடப்பாடுடைய ராஜாங்கம் ஒருவர்க்குத் தாக்ஷிண்யங் காட்டுவதெங்ஙன்! அற்றாக, யான் என் விதியை நொந்து கொண்டிருப்பேனாயினேன். அவ்வாறிருந்துழி, மிறைக் கவி பாடல் செயற்கருஞ் செயலென்று யான் இளமையிற் கொண்டிருந்த அபிப்பிராயம் என் ஞாபகத்திற்கு வருவதாயிற்று. வரவே, அவ்வருஞ் செயலைச் செய்து நகுலேசுவரரைத் துதித்துச் சத்காலக்ஷேபஞ் செய்வது நலமெனக் கருதி அவ்வழிப்பட்டேன். அவ்வழிப்பட்டு, அரை வழி முக்கால் வழி போகையில் அரசினரது சுப மங்கல நல்லநுமதிக்குக் காரணமான விண்ணப்பமொன்று அனுப்புமாறு திருவருள் கூட்டிற்று. அம் மங்கலாநுகூலமான செய்தி ௧௯௦௭ம்௵ பங்குனிமீ எட்டியதாக, அதற்கு ஒருசில நாட்கட்கு முன்னர் யான் எண்ணிய செயற்கருஞ் செயலும் ஒருவாறு பூர்த்தியெய்திற்று. அப் பூர்த்தியே இன்று **நகுலேச்சர விநோத விசித்திர கவிப் பூங்கொத்து** என்னும் பெயரோடு வெளிவரும் இந்நூலாகும்.

சித்திர கவிகள், பொருட் சித்திரம் சொற் சித்திர மூறப் பாடுவன. இப் பிரபந்தம் அவ் விரு வகைக் கவிகளானும் பெரும்பாலும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அர்புத விசித்தி ராலங்காரம் அமைய இயற்றப்பட்டது. கவிகளின் மாத்திர மன்று; சொல் சீர் அடி தொடைகளிலும் ஆங்காங்குச் சில விநயங்கள் தோன்ற யாக்கப்பட்டமை ஊன்றி நோக்குமிடத்துப் புலனுகும். இதிலே "கோமூத்திரி" முதலாகத் தமிழில் வந்து வழங்குஞ் சித்திர கவிகளும், "வியஸ்த சமஸ்த சாதி"முதலாகச் சம்ஸ்கிருதத்திலுள்ள வினு வுத்தரக் கவிகளுட் பலவகையினவும் பிறவும் வருவதோடு நவீன சித்திர கவிகளுஞ் சில வருகின்றன.

இந் நூலைப் பல குணுதிசயங்கள் நிறைந்த ஒரு பெருந்தகைக்குச் சமர்ப்பணஞ் செய்யவேண்டு மென்ப தோர் பெரு விருப்பம் உற்பவ மாயிற்று. அக்கணமே மனமானது அதன் சுபாவப்படி அப் பெருந்தகையாளர் யாவரென்று ஆராயுந் தொழிலிற் றலைப்பட்டது. அதன் காரியமாய் என் சிற்றறிவிற்கு எட்டியவர்கள் யாவரெனின்; அவர்கள் தாம், செவ்விய நீதியுஞ் செழுந் தமிழ்ப் பாஷாபிமானமுஞ் சீர்வழிக கொடையுஞ் சிவனடிப் பத்தியுஞ் சிறியேன் போன்ற உத்தியோகத்தர்க் கெல்லாஞ் செழுந் தலைமை யுடைமையுஞ் சிறந்து பொலிந்துள்ள கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணி **கௌரவ ஸ்ரீமாந்: பொ. அருணசலத்துரை** M. A. (Cantab), C. C. S., அவர்களென்பேன். அவர்கட்கு இந்நூலைச் சமர்ப்பிக்க வேண்டி யான் எழுதிய விண்ணப்பத்திற்கு அவர்கள் அனுமதி செய்தருளிய தண்ணளி எந்நாளும் என்னுற் கொண்டாடப் படுவதாக.

இந் நூலை யாக்கியபோழ்து விசேஷ கருவிகளா யமைந்து எனக்குப் பெரிதுஞ் சகாயஞ்செய்தவை, கைம்மாறு கருதாது மழை பொழியும் மேகம் போலக் கர்பவரிடத்துச் சிறிதுஞ் சகாயம் பெறுது மலர்ந்த முகமுங் குளிர்ந்த மொழியுஞ் சிறந்து விளங்கக் கற்றற்குரியவற்றைக் கற்பித்துத் திசை யெங்கும் இசை நிறுவிநிற்கும் என் செந்தமி ழாசிரியர் வித்துவ சிகாமணி யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் **ஸ்ரீலஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவர**

வர்கள் இயற்றி வெளிப்படுத்திய "விநோத சித்திர வினு வுத்தரக் கவிக" ளென்னும் ஒரு சிறு நூலும், அவர்கள்தாமே புதுக்கிப் பதிப்பித்த "தண்டி யலங்கார வுரை" யுமாம். அக்காரணத்தானும் பிறவாற்றானும் ஆசிரியரவர்கள் எக்காலத்தும் அடியேன் மனத்தை விட்டு அகலப் பெறுர்கள்.

இந் நூல் தமிழகத்திற்குப் பெரிதும் பயன்படும்வண்ணம் இதிலுள்ள செய்யுட்களை எளிதில் விளக்கவேண்டி அவ்வச் செய்யுட்கு இயைந்த வகையான் உரையெழுதி அஃததன் கீழ்ச் சேர்த்திருக்கின்றேன். அன்றி, வேண்டிய சித்திர கவிக் கோட்டங்களும் வேண்டியாங்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அக் கோட்டங்கள் ஐக்கிய மலாய் நாட்டுச் செறம்பானிலே சித்திர லிகித (DRAFTSMAN) உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் எனது சகோதரர் க. சுப்பையபிள்ளை கையாற் றீட்டிய மூலக் கோட்டங்களுக்குச் சிறிதும் பேதமின்றிச் சென்னைபுரியிலுள்ள MESSRS. OAKES & Co., ஆராற் புதுவதாக அமைத்தனுப்பப் பட்ட அச்சிற் பதிக்கப் பெற்றவை. அக் கொம்பனியார் கைச் சாதுரியம் யாவராலும் நன்கு வியக்கற்பாலது.

அவ் வச்சுக்களைச் செய்வித்தற்கு மாத்திரம் ரூபா எழுபதுவரையிற் செலவாயிற்று. அது பற்றிக் காலந் தாழ்த்தாது இந் நூலை விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்துமாறு அடிக்கடி தூண்டி என்னை ஊக்கப்படுத்தியதோடமையாது ரூபா பதினைந்து தந்து திரவியோபகாரமும் புரிந்த நொத்தாரி தெல்லிப்பழை ஸ்ரீமத். தே. ச. துரையப்பா அவர்களை யான் எக்காலத்தும் மறவேன். அன்றியும் நொத்தாரிமார், உடுவில் ஸ்ரீமத். ச சபாபதிப்பிள்ளையவர்கள், வண்ணார்பண்ணை ஸ்ரீமத். வை. குமாரசுவாமியவர்கள், வட்டுக்கோட்டை ஸ்ரீமத் அ. சிதம்பரநாதபிள்ளையவர்கள், சுழிபுரம் ஸ்ரீமத். K. சுப்பிரமணியம் அவர்கள் தனித்தனி ரூபா பத்தும், சுதுமலை ஸ்ரீமத். கு. ஆறுமுகமவர்கள் ரூபா ஐந்தும் உபகரித்தமையின், அவர்கட்கு என் மனதுவந்த நன்றி கூறுகின்றேன்.

மேற்கூறிய கொம்பனியாரிடம் சித்திர கவிக் கோட்ட அச்சுகளைச் செய்வித்தும், இதன் நூல முத்திரிதங்களை (Proof Sheets) அவ்வவ் வமயங்களிற் பரிசோதித்தும் இங்ஙனமே பேருதவி புரிந்த எனது ஆப்தநண்பர் ம. ா. ா. ஸ்ரீ. ஆ. **முத்துத்தம்பிப்பிள்ளையவர்கட்கு** யான் என்றும் நன்றிபாராட்டக் கடப்பாடுடையேன்.

இந்நூலை அன்பாய்ப் பார்வையிட்டுக் கழிபேருவகையோடு சிறப்புப்பாயிரந் தந்து சிறப்பித்த அரும்பெரும் புலவர்க்கெல்லாம் யான் என் மனப்பூர்வமான வந்தனம் அளிக்கின்றேன்.

என்னு லியற்றப்பட்ட நகுலேச ஸ்தோத்திரமுஞ் சம்பந்தம் நோக்கி இந்நூன் முடிவிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம்,
மயிலிட்டி,
விரோதிகிருது ஹூ
ஆனிமீ உசவ

இங்ஙனம்,
க. மயில்வாகனப்பிள்ளை.

உ
கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

(செய்யுட்கள் கிடைத்த காலக்கிரமப்படி அச்சிடப்படுகின்றன.)

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

ம. ா. ா. ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

நிலைமண்டிலஆசிரியப்பா.

திருமலி மயிலைச் செழுநகர் வாசன்
மருமலி குவளை மாலைசேர் மார்பன்
ஆங்கில பாஷையு மருந்தமிழ்ப் பாஷையும்
பாங்குற வுணர்ந்து பயில்வுறும் பாவலன்
நொத்தா ரிசென்று நுவலதிகாரி
வித்தா ரமாக்கவி விளம்பிடும் புலவன்
திண்மைசே ரவையிற் சிவமதம் பெரிதென
வண்மையி னாட்டும் வாக்கினில் வல்லோன்
காண்பெருஞ் சீர்த்திக் கணபதிப் பிள்ளை
மாண்புறு தவத்தில் வந்திடும் புதல்வன்
பெரும்பொரு ளாயும் பெற்றியி னின்று
வரும்புகழ் பெறுமயில் வாகனப் பிள்ளை
உத்தமர் பணியு முயர்நகு லாசல
வித்தகன் மீது விநோத விசித்திர
கவிப்பூங் கொத்தெனக் கழறிடு மொருநூல்
புவிப்புல வோர்களும் புத்தமு தாகக்
கொள்ளுமா றியற்றிக் கொழும்புமா நகர்சேர்
வள்ளல்பொன் னம்பல மாப்பெரு முதலியார்
மாதவப் புதல்வன் மன்னவர் சிகாமணி
ஓதுசெந் தமிழோ டுயர்ந்த வாங்கிலம்
ஆதிய பாஷை யடைவுடன் கற்றோன்
பேதமி னீதிமான் பிரபு சிகாமணி
புண்ணிய புருடன் பொன்கிழார் வாசி
விண்ணிழி கற்பகம் வித்தியா விநோதன்
நுண்ணிய விவேகி நொதுமலர் பகைவர்
எண்ணுறு முறவின ரென்றிவர் திறத்தும்

கோட்டமில் சிந்தை கொண்டிடு முரவோன்
ஈட்டிய செல்வத் திருநிதிக் கோமான்
உலகெ லாம்பரந் தோங்கா நின்ற
அலகிலாக் கீர்த்தி யமைந்தவங் கிலேயர்
இலங்கை யரசி லிணையிலா முதன்மை
இலங்கதி கார மெய்தியே பற்பல
பதிவுகட் கெல்லாம் பண்புற நடாத்தும்
அதிபதி யாகிய வருணா சலத்துரை
தன்மன மகிழச் சமர்ப்பணஞ் செய்து
வின்மலி கீர்த்தி மேவின னென்பவே.

புன்னாலைக்கட்டுவன், பண்டிதர்

ப்ரஹ்மஸ்ரீ. சி. கணேசையரவர்கள்

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

திருமருவுங்கொழும்பமர்பொன்னம்பலமாமுதலியெனுஞ்செம்மறன்பா
கருமருவுமுயிர்களையீன்றளித்தழிக்குமயனரிமுக்கண்ணனென்னு [ற்
முருமருவுமுதல்வர்களைநிகரெனவந்தவதரித்தவுயர்மகாராந்
தருமருவுகொடையாளர்மூவருளும்பின்பிறந்ததலைமையாளன்.

அருளேறுமகத்தோன்பொன்னம்பலவாணேசனமராலயத்தின்
பொருளேறுதருமநனிபுரந்திடுகொர்த்தருளொருவன்பூமிபாலன் [ரே
தெருளேறுகலைகள்பலவடமொழிதென்மொழிகளினிற்றெளியக்கற்
னிருளேறுமதியொழிக்குமாங்கிலமுற்பாஷைகளுமினிதுணர்ந்தோன்.

மாதவனல்லங்கையினிற்சங்கொடுசெக்கரமேந்துமரபினாலே
மாதவனின்மருவியுளான்காவிரிகையுறுமியல்பின்மலயமேவு
மாதவனினுறுதோன்றலிறைவனடிபரவிமிகுமகிழ்வினென்னான்
மாதவநற்கதியடையவருளென்றுநிதம்பணியும்வழிபாடுள்ளோன்.

உலகுதனிலுயர்வுறுபொன்கிழாரெனுமாளிகைவசிக்குமுரிமைபூண்
னலகில்புகழ்பெறுமெம்மேப்பட்டமுளான்சீர்பலவுமார்ந்தலங்கை[டோ
யிலகுதனியிராசாங்கபதிவுகாரியமுதல்வனெழிலார்பூவிற்
றிலகமெனநிலவுமொருபிரபுசிகாமணிவரையிற்றீபமன்னான்.

நீதிமான்புவிபரவுங்கீர்த்திமான்மலமொழிக்குநீள்சிவாநு
பூதிமான்பகையடக்குந்திறலரிமான்புவனமெல்லாம்போற்றுமீசன்
பாதிமான்றருசெவ்வேற்பெருமானையுளங்கொண்டுபணியுங்கோமான்
சாதிமான்கவிஞர்நனிபுகழருணாசலத்துரையாந்தகைகொள்சீமான்.

அன்னவனங்கீகாரம்புரிந்திடமாநகுலையமரரவோடிந்து, துன்னியசெ
ஞ்சடையமலன்மீதுமிகுமன்பினொடுதுகளுறாமே, இன்னியல்கொள்வி
நோதவிசித்திரகவிப்பூங்கொத்தென்றொரெழில்கொணாலை, மன்னிய
பொற்பொடுசெய்துசமர்ப்பித்துமற்றவன்றன்மகிழ்வும்பெற்றான்.

யாவனெனின்மயிலையெனும்பதியினிடையுற்பவித்தோனிதஞ்சேர்வாக்
பூவிலுயர்நிதிபடைத்தகணபதிவேளீன்றதவப்புதல்வன்வாய்மை [கான்
மேவுதயைபொறைதகுதிமுதலாயகுணங்களெலாம்விளங்கநின்றோன்
வாவியுறுங்குவளைமலர்மாலையெழில்புரிந்திலகும்வரைசெய்மார்பான்.

இந்துபரிபாலனசங்கந்தனிலக்கிராசனனாயிருக்குமேலோன்
சந்திரனைமுடிமருவுகோபுரஞ்சேரெயில்சூழுந்தகையமாவை
சுந்தரநன்மாளிகைகள்விளங்கினாவைமயிலைமுதற்சொல்பதிக்க
ணந்தமிலின்னருளொடமர்கடவுளர்மேற்பாமாலையநந்தஞ்செய்தோன்.

தருமத்தின்முதிர்குணத்தோனுயிர்க்கினியசெயல்களெலாந்தகவிற்செ
கருமத்தன்புவனிதனின்முனிவர்மொழிமிருதிமுதற்கலைகளோதி [ய்யுங்
நிருமித்தவழியொழுகுமாசாரமுறையுடையோனிமலைபாத
மருமத்தமணிபெருமான்கழலினொடுபரவிநிதம்வணங்குகின்றோன்.

காவலர்கள்போற்றிடநொத்தார்சுத்தியோகஞ்செய்கனம்பூண்டுள்ளோ
நாவலர்கள்குழுமியிடுஞ்சங்கமதிற்பிரசங்கநன்றுசெய்வோன் [ண்
மேவலர்கடலைவணங்குந்திறலுடையோனீதிநெறிவிரும்புதோன்றல்
பூவலருங்கீர்த்தியினானிரவலர்கணிரப்பொழியப்பொழிபொற்கையான்.

ஆரியர்கள்புகழ்ந்திடுமொருங்கிலமுமினிதுணர்ந்தவறிவின்மிக்கோன்
சீரியசெந்தமிழ்மருவுமிலக்கணலக்கியமெல்லாஞ்செவ்விதோர்ந்தோன்
நேரியமெய்ந்நெறியாகுஞ்சித்தாந்தவழியொழுகிநிற்கும்பண்பான்
கூரியநன்மதியுடையபுலவன்மயில்வாகனப்பேர்க்குரிசின்மாதோ.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, வித்துவான்

ப்ரஹ்மஸ்ரீ. நா. சிவசுப்பிரமணியசிவாசாரியரவர்கள்

இயற்றியது.

நேரிசைவெண்பா.

கீரிமலை நாயகற்குக் கேள்கிளர்வி நோதசித்ர
மாரோர்கவி மஞ்சரிநா லாக்கினான்—பாருலகோர்
துங்கமயி லைக்கணப திப்பிள்ளை சூனுதமிழ்ச்
சங்கமயில் வாகனவே டான்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்

ம. ா. ா. ஸ்ரீ. வி. இராமலிங்கபிள்ளையவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திங்களஞ் சடையோன் தேவர்கள் பெருமான்
அங்கணன் புராரி யமர்ந்துவீற் றிருக்குந்
திவ்விய தலமாஞ் சிறந்தகே தீச்சரம்
எவ்வமில் கோண மென்னு மாமலை
இரண்டும் விளங்கிய வீழ நாட்டிற்
திரண்ட தந்திரி சேர்ந்து விளங்கும்
யாழ்ப்பாட் டிசைகேட் டினிது கொடுத்த
யாழ்ப்பா ணத்தி லெழினகு லேச
வித்தகன் மீது விசித்திர கவிப்பூங்
கொத்தெனு நாமங் கொடுத்தொரு பெருநூல்
அரிதினி லியற்றி யரசியல் வாழ்க்கை
விரிதரு கொழும்பு வியனகர் வாசன்
நிதியினிற் குபேர னிகர்த்தபொன் னம்பல
முதலியா ரீன்ற முழுத்தவப் புதல்வன்
அங்கிள பாஷையு மருந்தமிழ்ப் பாஷையுஞ்
சிங்கள பாஷையுந் திறம்படக் கற்றோன்
அங்கிள பாஷையி லரசின ரீந்த
பங்கமி லெம்மேப் பட்ட வர்த்தனன்
இனம்பெறு மிலங்கை யிராசாங் கத்திற்
கனம்பெறும் பதிவுக் காரிய கர்த்தன்
பேருப காரி பிரபு சிகாமணி
ஆரிய தரும மன்பொடு புரப்போன்
சத்திய வாசகன் சகல சலாபதி
வித்தியா விநோதன் வீர வாழ்க்கையன்
இறைமையி னீதியில் யாவரு மெச்சி
நிறைகோ லெனச்சொலு நீதி யாளன்
பாவுறு பொன்னம் பலவா ணேசர்
கோவி லாதீனங் குலவிய தலைவன்

அருணு சலத்துரை யகமிக மகிழ்ந்து .
பொருணு டிப்பல புகன்று கைக்கொளச்
சமர்ப்பணஞ் செய்து தான்புகழ் படைத்தான்
அமைப்புறு சோலை யணிமயி லிட்டிக்
கணபதிப் பிள்ளை காதல்சேர் புதல்வன்
இணுவையந் தாதி யியலுறு மாவைப்
பதிக நல்லைப் பதிக முதலா
அதிக நூல்க ளாக்கிய கவிஞன்
செந்தமி ழங்கிளந் திருந்தக் கற்றுச்
சந்ததம் படிக்குந் தருகலை விநோதன்
மங்கல விந்து மதபரி பாலன
சங்கமிங் கொருசில தாபனஞ் செய்தோன்
அங்கவற் றக்கிர வாசனம் வகித்துச்
சிங்கலி னல்லுப தேசஞ் செய்வோன்
பயில்வுறு மொழுக்கம் பற்றும்
மயில்வா கனப்பெயர் மன்னிய புலவனே.

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

ம. ா. ா. ஸ்ரீ. பூவை-கலியாணசுந்தரமுதலியார்

அவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

மன்னியபொற் கயிலைச்செந் தமிழ்க்கடலி
        னிற்றிளைத்து மதியின் மிக்கோர்
மகிழ்ந்துகொண் டார்டிமிக வியந்திடவே
        பன்னூல்கள் வழங்கு வித்த
மகிபனற் சைவசித் தாந்தவரோ
        தயனென்ன வாழ்மே தாவி
மயிலிட்டி நகர்வந்த மயில்வாக
        னப்பெயரை வகித்த மேலோன்,

தன்னிகரிற் கீரிமலைச் சிவபெருமான்
        றிருத்தாளைச் சதுரி னேத்தித்
தக்கவலங் காரகற் பனைநயங்க
        ளாங்காங்குச் சமைந்தி லங்கத்

தனித்தபர்ற் கற்கண்டை நிகர்த்தசுவைச்
சொன்மலிவு சார்ந்து மேவச்
சரளமுறு விநோதவிசித் திரகவிப்பூங்
கொத்ததனைத் தகவாச் சாற்றிப்,

பன்னரிய கொழும்புப்பொன் னம்பலவே
டவத்தில்வரு பால ளுகிப்
படராங்கி லேயத்தி லெம்மேப்பட்
டந்தன்னைப் பரித்துத் தக்கோர்
பகரிலங்கை யிராஜாங்கப் பதிவுகா
ரியத்தரெனும் பரிபா லிப்பிற்
பண்புற்றுத் தயைசாந்த மீகைகுண
முயர்நீதி பான்மை யேற்றுக்,

கன்னனென வேயொளிரும் பிரபுசிகா
மணியாகிக் கருணை மேனி
கனிந்தசீ மானருணு சலத்துரைவள்
ளற்சீரைக் கருதிச் சூழ்ந்து
கவினுறத்தன் னூலையவற் குரிமையென
வேசெய்து களிப்பு வாய்ந்தான்
கண்ணுதலோ னருளாலிப் பனுவல்விற்
பனர்மனத்தே கமழ்க மாதோ.

பருத்தித்துறையைச் சார்ந்த தும்பைநகர், வித்துவான்

ப்ரஹ்மஸ்ரீ. ம. முத்துக்குமாரஸ்வாமிக்குருக்கள்

அவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீரேறு கீரிமலை மேவி வாழுஞ்
சிவமேறு நகுலேசர் மீது தெய்வப்
பேரேறு விசித்திரமாங் கவியின் கொத்தைப்
பெட்பேறு செந்தமிழி லிசைத்து ளானற்
பாரேறு மயிலிட்டிப் பேரூர் வாழும்
பண்பேறு மயில்வாக னப்பேர் பெற்ற
நேரேறு கவிவாணன் கவிஞர் யாரு
நிலையேறுங் கவியருமை வியக்கற் பாற்றே.

வியக்கவருங் கவிஞனிவ ஞெத்தார் சென்னு
மேலாழுத் தியோகமுடன் சைவ நூல்க
டயக்கமுற வாய்ந்துணர்ந்து சபையொன் ருக்கித்
தருமக்கி ராசனத்து மேவி யாரு
முயக்கடவ போதனைகள் செய்வோ ஞளு
மோதுகலை விஞேதனருங் கவிக ளின்னு
நயக்கவரு துதிரூபப் ப்ரபந்த மாக
நம்பனரு ளாற்பாடு மன்பு பெற்முன்.

வேறு.

பெற்றபுகழ்க்கவிஞனிவனகுலேசர்கவிக்கொத்தைப்பெருஞ்சீர்பெற்ற
கொற்றவனற்கொழும்புநகர்ச்சீமானுதாரகுணக்குன்றமன்ஞன்
செற்றமிலாராஜாங்கவதிகாரிபலபாஷைதெரிந்தசெல்வ
முற்றவருஞசலப்பேர்த்துரையவர்கள்சமூகத்திலொப்பித்தானே.

ஒப்பித்தவிக்கவிதைநகுலேசருளாலுமுயர்ந்தகீர்த்தி
மெய்ப்பித்தசிரருஞசலத்துரைநலுதவிபுரியுதாரத்தாலுஞ்
செப்பித்தகைப்புலவன்மயில்வாகனப்பிள்ளைசெய்தபுண்ய
மர்ப்பித்தபயனுலுநீடூழிவாழுகவிங்கவனிமீதே.

யாழ்ப்பாணத்து அல்வாய்

ம. ஶ. ஶ, ஸ்ரீ. இ. ஆறுமுகநொத்தாரிசு அவர்கள்

இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

மயிலைப் பதிவளர் நொத்தார் செனுமயில் வாகனவேள்
எயிலைப் பொடித்தடித் தொண்டரைக் காத்தரு ளெந்தைபிரான்
கயிலைக் கிறைவ னகுலேசர் மேற்செய் கவிக்கொத்திலே
பயிலப் பயில வெழுதரு மானந்தம் பாவலர்க்கே.

பருத்தித்துறை சார்ந்த புலோலி

ம. ஶ. ஶ. ஸ்ரீ. வ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

நிலைமண்டிலஆசிரியப்பா.

நீருறு மிலங்கை நீள்வட கடலிற்
பேருறு தென்கரை பிறங்கிய நகுல

மலையூற் றருவி வான்கடற் கலந்துவ
ரலைதீர்த் தாடினோ ரரும்பவந் தீர்க்கும்
புண்ணிய தீர்த்தம் பொருந்திய தீரத்
தெண்ணிய சுரர்நர ரெய்தியே வழிபடத்
தாய்நகு லாம்பிகை சமேதரா யருட்கட
லாய்நகு லேச ரனுதின மமர்ந்து
தேடிவந் தேபணி செய்யடி யவர்க்கும்
பாடிவந் தேதுதி பகர்பத் தருக்குந்
தாங்கரும் பிணிமிடி தமையெலாந் தீர்த்தருள்
பாங்கறிந் தவர்மேற் பகர்தமிழ்ப் பாஷையாற்
சக்கர பேதந் தருவிளு வுத்தர
மக்கர சுதக மணியெஃக பந்தஞ்
சதுரங்க பந்தஞ் சர்வதோ பத்திர
மதிரத பந்த மணிமாலை மாற்றுப்
பொருமுர சபந்தம் பூகஞ் சபந்த
மிருநா கபந்த மெண்ணு கபந்தந்
துவிதிரி பங்கிமுன் சோர்வறு சித்திரக்
கவிதைகள் விசித்திர கவிப்பூங் கொத்தென
வியப்புறு மொருநூல் விளம்பினன் வளங்க
ணயப்புறு மயிலை நற்பதி வாசன்
மேலாங் குலத்துள் விளங்கிய மதிப்புடை
நாலாங் குலத்தி னற்பெருங் குடியினன்
பேருறு கணபதிப் பிள்ளைசெய் புண்ணியச்
சீருறு புதல்வனுச் செனித்துமுற் பிறப்பிற்
றவசம் பந்தத் தாற்றமிழ்க் கல்வி
திவசம் பற்பல தெரிந்தபாண் டித்தியன்
மாதன முற்றசீர் மன்னர்பாற் பெற்ற
சாதன மெழுதுநொத் தாரிசுத் தியோகமும்
விரித்துரை யாத மேன்மைகள் பலவுந்
தரித்துடை யவன்சிவன் றாளிணை துதிக்குங்
கனமுறு மயில்வா கனக்கவி ராசன்
றினமுறு மதிநிதி சிறந்துவா ழியவே.

யாழ்ப்பாணத்து நீர்வேலி

ம. ா. ா. ஸ்ரீ. சிவசங், சிவப்பிரகாசபண்டிதரவர்கள்

இயற்றியது.

நேரிசைவெண்பா.

செய்யமயி லிட்டிநொத்தார் சீர்கொண்மயில் வாகனப்பேர்
ஐயனகு லேசர்தமக் காற்றினனே—மெய்கொள்கவி
உத்தியின்வி சித்திரங்கொ ளுத்தமமா மெய்த்துதிகள்
பத்தியினு லித்தரையிற் பார்.

யாழ்ப்பாணம் ஹிந்துக்கல்லூரித் (தலைமைத்) தமிழ்ப்பண்டிதர்

ம. ா. ா. ஸ்ரீ. ஆ. மு. சோமாஸ்கந்தப்பிள்ளை

அவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

பொன்மலி மேருக் குன்றிற் பொலங்குவ டொன்று வீழ்ந்து
வின்மலி விபுதர் மேனு டொத்தலின் விலஃகி வீங்கிச்
சென்மலி விலங்கல் சாலச் செம்மைசெய் தேய மான
மன்மலி யீழ நாடு மறிகட னடுவ ணுக.

அப்பெரு நாட்டி னுன்கு திசையினு மரனுர் மன்னுஞ்
செப்பருந் தகைய தான தெய்விக தலங்க டம்முண்
மைப்படி கண்ணுள் பாகன் மகிழ்ந்துவீற் றிருக்கப் பெற்ற
வொப்பகன் றிட்ட தான முதீசியி னகுல வோங்கள்.

சான்றவர் தம்மின் மிக்க தாபத னகுல னென்னு
மான்றமை கேள்வி மேன வருந்தவ முனிவ னின்னும்
வான்றவ மியற்று மோங்கல் வையகம் வழுத்து மாற்ரு
லேன்றது நகுலை யென்ன வேதுவங் கதனுன் மன்னே.

செம்பியர் பெருமான் பெற்ற தெரிவைமா ருதப்பேர் வல்லி
யம்புவி யெங்கு மான வாலய மனைத்து மண்மி
யும்பர்நா யகரைப் போற்றி யூழ்வினை முன்னை யுய்ப்ப
விம்பரார் புகழு மீழ நாட்டினை யெய்தி னுளால்.

ஈழமா நாட்டின் மேய விருந்தலம் பலவு நண்ணித்
தாழுநீள் சடையான் பாதந் தலைக்கொண்டு தாழ்ந்து போற்றி
யாழிசைப் பாணர்க் கீந்த விரும்புவி யாழ்ப்பா ணத்தி
ஞழிவா யருவி பாயு மகன்கிரி நகுலை சார்ந்தே.

தம்பலை நகுலை வாழுந் தற்பர னருளைப் போற்றிக்
கம்பலை யுடனே கண்ணீர் கான்றெழ வணங்கிப் பல்கா
லெம்பெரு மானே யென்ற னிவுளிமா முகமு நீக்கென்
றம்புதி யதன்கட் செல்லு மருவியிற் படிந்து மூழ்கி.

குடைந்திடு குன்மத் தோடு குதிரைமா முகமு நீங்கி
யடைந்துதன் ருதை தேய மறுமுகப் பெருமான் றன்னை
வடந்திகழ் முலையா ரோடு மாவிட்ட புரம தன்கண்
மடந்தைமா ருதப்பேர் மின்னு மாபிர திட்டை செய்தாள்.

ஆங்ஙன மவடான் போற்று மருமறை யறியா வண்ண
லீங்ஙனம் வருநர்க் கீயு மின்பினுக் களவை யின்றே
யூங்ஙன மருளைப் பெற்ற வும்பரு முலப்பி லாரா
லேங்ஙன மியம்பு வாம்யா மிறைவளர் நகுலை வீறே.

அத்தகு நகுலை தன்னி லமர்ந்திடு மரனுர் மீது
மெய்த்தகு கல்வி சான்ற மேலவ ரெவரும் போற்றப்
பத்தியி னினிய வாய பஃறுதி பலவி னோத
சித்திர கவிப்பூங் கொத்துச் செய்தவன் யாவ னென்ருல்.

கயிலைவாழ் கடவுட் போற்றுங் கணபதிப் பிள்ளை யென்னும்
மயிலைவாழ் குவளை மார்பன் மகன்மயில் வாக னன்ருன்
பயில்வுறு நோன்பு மிக்கோன் பரம்பரற் பணியுஞ் சீலன்
சயிலமே ரென்னத் தக்கோர் சாற்றிடுந் தகைமை சான்ருேன்.

செந்தமி ழியனூ றன்னைத் தேக்கிடத் தெளிவி னேடு
மந்தமி ழாசான் சுன்னை யமர்ந்திடுங் குமார சாமி
தந்திடத் தெளிந்த செம்ம றமியனே னிடத்துந் தேர்ந்தாங்
கிந்துக்கல் லூரி தன்னி லினியவாங் கிலமுங் கற்ருேன்.

மாவையே நகுலை தானே மயிலையே யிணுவை மேய
தேவையே சிந்தித் தேத்துந் திறனுடைச் செம்மை வாய்ந்த
பாவையே பலவாய்ப் பாடிப் பற்பகற் றெருகுதி செய்த
கோவையே கோவை யாகக் குவித்திடுங் கொள்கை மிக்கோன்.

இத்திரு வீணு கான விசைப்பெயர் கொண்ட நாட்டிற்
சித்திர மொடுவித் தாரஞ் சீராசு மதுரஞ் செய்யு
முத்தர வினுவி னுனே * னுறுதிக ளுலகின் மேவப்
பத்திரம் பதியச் செய்வோன் பதியமர் தலைவன் பாங்கர்.

பசித்திரா வந்தோர் யார்க்கும் பாத்துணும் பண்பி னுனேன்
நசித்திரா பவத்தை நீக்கு நகுலேசன் மேன வின்ற
விசித்திர கவிப்பூங் கொத்தை வேண்டிட விரும்பி யேற்ற
நிசித்திரண் மயங்குஞ் சோதி நீதிமன் னவன்யா ரென்னின்.

வேறு.

கன்னனறுஞ் சாறனைய கவித்தீந் தேனைக்
கற்றவர்க ளிதயத்துங் கருத்தின் மீதுஞ்
சொன்னயமும் பொருணயமுந் தோன்ற வாக்குந்
தோமில்பல கலையுணர்ந்த தோன்ற றுரல்சீர்
மன்னவர்கள் மதிக்கவரு மதியின் மிக்கோன்
மாநிலத்தி லாங்கிலமு மகிழ்ந்து கற்றோ
னெந்நலமு முடையனிவ னென்றே சாற்று
மெழிலுடையோ னெஞ்சாத குணநே ருள்ளோன்.

பொன்னுலகாள் புரவலனே யனைய பூபன்
பொன்கிழார் வாசிமிகு புனித வாக்கான்
செந்நெலொடு கன்னல்புடை சூழ்கொ ழும்பிற்
றேவர்பிரான் சிவாலயமே சிறப்பக் கண்ட
மன்னவன்பொன் னம்பலமா முதலி யார்தம்
மாதவத்தால் வந்துதித்த மணியா யுள்ளோன்
றென்னிலங்கை நகராளும் பதிவாங் கந்தோர்த்
திருத்தலைவ னென்றுரைக்குஞ் சீர்த்தி வாய்ந்தோன்.

சீர்மைநகர் செறிவித்யா விநோத னென்னுந்
திருந்தியசீர்ப் பட்டமது சிறக்கப் பெற்றோன்
நேர்மையமை நியாயதுரந் தரனென் றோது
நீதியுள துரைமன்ன னுவலுங் காலே
கார்நிகர்வண் கையனெனுங் கற்றோர் யார்க்குங்
கனகமழை பொழிந்திழியுங் கருணை மேகம்
பார்புகழும் பொறுமையுளான் பத்தி யுள்ளான்
பன்னிருகைப் பிரான்மேய பதிக டம்பால்.

---

* சிலேடை.

மூவரிவ ருளரென்ன முறையி ஞனே
 மூதுணர்ந்தோர் சோதரர்க ளிருவர் முன்னோர்
தேவரிவர் நிகரென்னத் தவங்கள் செய்யுந்
 திறலுடையோர் சீருடையோர் சிவன்பா லன்ப
ரேவரிவர்க் கொப்பாவா ரிப்பார் தன்னி
 லெப்பாரி லுள்ளாரு மப்பா லாவர்
பாவரிவர்க் கண்டிடினும் பழியை வீக்கும்
 பண்ணியமெய்ப் புண்ணியத்தின் பயனு யுள்ளோர்.

அன்னவரை முன்னவராக் கொண்ட வைய
 னருந்தவரி லகத்தியனை யனைய சீல
னின்னிலையி லிவனெப்பா னில்லை யென்றே
 யாவருமேத் திடுகின்ற வியல்பான் மிக்கோன்
சொன்னவையில் சோதனையிற் சோர்வே யில்லான்
 றுடுசெடல்சூ ழிலங்கைநகர் சூழ்ந்து பார்க்கும்
பன்னவுள வோவிவன்றன் பெற்ற பேறு
 பார்மீதிற் புத்திரர்தம் பேற்றி னலே.

எந்நிலமுஞ் சர்வகலா சாலைச் சங்க
 மேய்ந்திருக்க வெவ்வெவரு மேக்கற் றுய்வ
ரந்நிலத்தி லுறைவார்க்கே யஃது சாலு
 மதுவன்றி யயனிலத்தோர்க் கண்மைத் தன்றன்
மன்னிலவு மண்டலங்கள் பலவின் மேய
 மந்திரர்கண் மற்றதனை மறுர்க ளென்றே.
யிந்நிலத்துஞ் சர்வகலா சாலைச் சங்க
 மியல்பினுற் றுபிக்கு மிதயமுள்ளோன்.

பொருளுளு முளவாகப் போற்று வாரிற்
 பொற்பொதுவி னின்றுடும் புனிதன் றுளே
மருளாளு மறிவகற்றி மலக்ன் மங்கண்
 மாய்ந்தொழிய மற்றவற்றை மறித்து வீட்டி
யொருநாளு மோவாத வின்ப மீயு
 மொப்பகன்ற பொருளென்றே யுளத்தின் மீதி
னருணுடு மறிவனரு ளுச லப்பே
 ராராத வன்புடைய வரசன் றுனே.

கொழும்பு அரசினர் ஆசிரியகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்

தென்கோவை ம. ரா. ரா. ஸ்ரீ. ச. கந்தையபிள்ளை

அவர்கள் இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் மருமத் துருவளர்ந் தோங்கிய
தாஅமரைக் கண்ணனுந் தாஅமரைக் கண்ணனும்
உடலக் கண்ணனு மும்பரும் பிறரும்
தம்பத மொரீஇ நொந்துநின் றழுங்கிய
ஒன்பதிற் றுக்கிய வொருபன் னீருகம்
தெறுவலி தாங்கி யுறுபல் லண்டமும்
ஒருவனு யாண்ட பெருவலிச் சூரொடு
போருடன் றிடுவான் புலவர் குழாத்தொடு
மகேந்திரத் திறுத்த வடியிலை நெடுவேல்
வலன்றிரி யியவுள் மகிழ்ந்துமன் னுயிர்கள்
வழிபடன் முறைமையை விழுமிதி னுணரியர்
வாசமா மலர்கொடு பூசனை புரிந்து
திருவுளம் பற்றிய சிறப்பினின் வழாஅ
மூர்த்தியுந் தலமும் முழங்கிடு சாகர
சங்கம மாகச் சார்ந்து பேரன்பின்
விதியுளி மூழ்குநர் கதிபெறுந் தீர்த்தமும்
மன்னிய சிறப்பிற் றன்னிக ரிலாத
நகுல கிரியமர் நகுலாம் பிகையெனும்
நங்கைபங் குறையு மங்கண னடிக்கீழ்,
வடமொழி யோடு வயங்குதென் மொழிகளில்
வழங்கு மலங்கார வகைபல வவற்றுட்
கற்றற் கரியவா யுற்றிடு மாலை
மாற்றே யெழுத்து வருத்தநங் நாக
பந்தஞ் சருப்பதோ பத்திர முதலாம்
சொல்லணி பல்ல புல்லுபு பொலிதரப்
பொருளணி மலிந்த புலஞ்சால் சிறப்பின்
விழுமிய சொற்பொரு டழுவுசெந் தமிழால்
காப்பு முதலாக யாப்புறு கவிகள்
ஈரைம் பஃதுட னிருபா னெட்டென்
அளவினொ டமைந்த வளவிய விசித்திர

கவிப்பூங் கொத்தெனக் கருதுபெயர் கொளீஇ
விளங்குநூன் மாலையை யுளங்கொளப் புனைந்து;
விண்ணம் பொலிந்த தண்ணென் கதிர்கால்
மதிய மேக்கற்று மயங்குமா ளிகைகளும்
வரம்பிலாப் பாடை மாந்தர்கள் குழீஇ
இருநிதி மலிந்து பெருவளஞ் சுரத்தலின்
அளகை புறங்காட்டு மாவண வீதியும்
பொருந்திய சிறப்பிற் றிருந்திய செங்கோன்
மன்னவர் கோவிலாய் மன்னிய விலங்கையின்
தலைநக ராகிக் குலவிய கொழும்பெனுந்
திருநக ருறையும் பிரபு சிகாமணி,
பொன்னம் பலப்பெயர் மன்னிய பெருந்தகை
செய்தவப் பயனுத் திகழ்ந்திடு செம்மல்,
ஆங்கில மென்னுந் தேங்குபே ருததியை
ஒருங்கு குடித்த பெரும்புய லனையான்,
ஆரிய மொழியுட னரியசெந் தமிழும்
ஆய்ந்துணர் கேள்வி வாய்ந்திடு மறிஞன்,
மண்ணவர் மதிக்கும் மாண்புடைக் கோமான்,
அறிவினி லுயர்ந்தாங் கரசருத் தியோக
நிலையினு முயர்ந்து தலைமைமிக் குடைய
சாசனுத் தியட்சனுச் சார்ந்திடு பெரியோன்
வள்ளன்மை மலிந்த வொண்ணிதி படைத்தலின்
முன்னு ளிலங்கையின் மன்னுய் நிலவிய
பொன்கிழா ரென்னப் பொலிந்து "பொன்கிழார்
மாளிகை வதியும் மன்னர் சிகாமணி,
பூதி கண்டிகை புனைந்துபே ரன்பொடு
சிவனடி பரவுஞ் செவ்விய நீர்மையிற்
சைவநெறி பழுத்த திவ்விய நிலையினன்"
கருணையொடு பொலிந்த பரமா னந்த
நான்மறைக் கெட்டா ஞானமே வடிவாய்க்
கதிர்கா மத்துறை கந்தவே ளடிமலர்
கனவினு மறவா மனமுறு தியான
மோனநன் னிலைவழா ஞாஅன நெறியினன்,
சட்ட நிரூபண சபையுறு முதுவருட்
டலைவனுய் நீதி நிலைதிறம் பாதோன்,
தன்றிருப் பெயர்தான் தகுமியற் பெயரொடு

காரண மாகவுங் கருதுமா நின்ற
மலர்க்கணை யில்லா மதனெனும் வடிவான்,
அருணு சலப்பெய ராண்டகை தனது
தமிழ்க்கலை யிறைமைக்குச் சான்ற திறையாகத்
தாழ்வுறு நீர்மையிற் சமர்ப்பணஞ் செய்தே;
புலவர்பே ரணியெனத் தலைமிசைக் கொண்மார்
ஆய்ந்து மணங்கொளீஇ யருஞ்சுவை பெறீஇயர்
எழுதா வெழுத்தின் வழுவின் றமைத்து
வெளிப்படுத் துதவி மிகுபுகழ் கொண்டனன்;
செந்தமி ழணங்கு திருநடம் புரியும்
திருவநீ ளரங்கென மருவியாழ்ப் பாண
நன்னக ரதனிற் பொன்னக ரிஃதென
மன்னுபல் வளஞ்சான் மயிலையம் பதியான்;
நள்ளார் போற்று நலமுறு கணபதிப்
பிள்ளைமுன் னுஞற்றிய பெருந்தவத் துதித்தோன்;
மங்குல் கண்படுக்கும் பொங்குபூந் தருக்களின்
விண்மணி வெயில்புகாத் தண்மணி நிழற்கீழ்ச்
செந்தார்ப் பொலிந்த சிறுபசுங் கிளிகள்
மேவிய காதலிற் பூவைகட் கென்றும்
செந்தமிழ் மொழிகளைச் செவ்விதிற் பயிற்றல்
தம்பயன் கருதாத் தன்மையின் மரீஇ
மாணவர் தமக்குப் பேணியே நாளும்
கலையமு தளிக்கு நிலைமையின் வழாஅ
ஆன்றமை புலத்திற் சான்றோர் செயலென
இறும்பூது பயக்கு நறும்பொழி லுடுத்த
சுன்னை மா நகரின் மன்னுபே ரறிஞன்,
எல்லார்க்கு நன்றாம் பணித லவருளும்
செல்வர் தமக்கே செல்வமென் றுரைத்த
பொய்யில் புலவன் பொருளுரைக் கிலக்கிய
மாகப் புகலுஞ் சோகமில் பெரியோன்,
வடமொழி தென்மொழிக் கடனிலை கண்ட
இத்தலம் புகழும் வித்துவச் சிரோமணி,
அளியனேன் மனமா மணிநீர்ப் பொய்கையில்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்,
துங்கமார் குமார சுவாமிப் புலவனைக்
குரவனாக் கொண்ட கொள்கையி னுயர்ந்த

செந்தமிழ்க் கலைபல செவ்விதிற் கற்றோன்;
ஆங்கில பாடையு மாய்ந்தநுண் மதியினன்;
இணுவையம் பதியி னணியசெவ் வேற்கரப்
பண்ணவ னடிக்கீழ்ப் பதிற்றுப் பத்தெனும்
அந்தாதி மாலையு மழகுறு மயிலை
மும்மணி மாலையு முன்னுறு மிரட்டை
மணிமாலை யூஞ்சல் வயங்கு திருநீல
கண்டர் விலாசமுங் கொண்டபல் வகையிற்
பதிகமும் பாடிய மதிமிகு புலவன்;
நியாயநூற் பரப்பா நெடுங்கடன் முழுகி
மன்னவ ரளித்த மாண்புமிக் குடைய
சாசன மெழுதுந் தலைமைகைக் கொண்டோன்;
பிள்ளைமதி முடித்த வெள்ளியங் கிரியமர்
முக்குணங் கடந்த முன்னவ னடிமலர்ப்
பரிவின் பண்பே யுருவுகொள் பான்மையன்;
பயிலுநண் புடைய பண்பின்
மயில்வா கனப்பெயர் மன்னுபா வலனே.

சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகரும், உதயபானு
பத்திராதிபருமாகிய நல்லூர்

ஸ்ரீமத். சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

ஆசிரியப்பா.

உலகெலா மதிக்கு மலகிலாச் செல்வத்
தோங்குதண் டலைசூழ்ந் தேங்குமஞ் சடரு
மண்டல மளத்தலிற் கொண்டல்கண் படைகொண்
டெழுந்திருண் டிடியாப் பொழிந்திடு மழைப்புன
லிழிந்துகுன் றருகாக் கழிந்துநின் றொழுகிக்
கூனல் வானரம் வானுறப் பாய்தலிற்
றேங்கிரு மதியெனத் தூங்கிரு லுடையாப்
பெருகுறு தேறலோ டருகுறு மறுபத
முழக்கவிண் டலரு மொழுக்கறு மலர்த்தே
னுறக்கலந் தெறிமணி சிறைக்கலந் தெறிதர
வலைபொரு நதிகளி னிலைதிரி முறைபாய்ந்

தெவ்வித வளங்களுஞ் செவ்விதின் விளங்கிப்
பொலிந்திடு மிலங்கைத் தலந்தனக் கொருதலை
யென்னச் சிறந்தே மன்னித் துறக்க
நகரினை நவமணி நிகரினி னொளிகளி
னாணச் சிரிக்கு மாணச் செறிந்த
தூவண மாகிய வாவண வீதியு
நிரையினிற் பொலிந்து வரையினைப் பொருமுயர்
மாட கூடமு நீட வாடுறு
கொடிநிரை யுயரிய முடிபெறு மரச
மாளிகை களுமுறை யாளுகை புரியு
மடைவீ டாகிய படைவீ டுகளும்
வாயுத் தீபிகை தேயுத் தீபிகை
யிரவினைப் பகலென வரவினைப் புரிய
விசைசெறி யந்திர விசைதிரி ரதநிரை
புடைபெய ரிடமற விடைதிரி வீதியுஞ்
சேமபூ தம்பொரு தூமபோ தம்பொலி
கடலொலி முழக்கோ டடலிடு முரசதி
ரிடிமுழ வெதிரொலி கடிமண மறையொலி
திசைசெவி டடைதர விசைதரு நகரா
யிலங்கி விளங்கு நலங்கெழு கொழும்புக்
காருயி ராகிய சீருய ரிறையா
மன்னம் பலமருள் பொன்னம் பலவா
ணேசுர னாலய மீசுரற் காக்கிப்
பண்ணிய பயிரினற் புண்ணியந் தெரியுமென்
றிருந்திரு வுளத்துப் பெருந்தவ ருரைத்த
வரிய மூதுரைக் குரிய விலக்கிய
மிவனலா திலையென வவனியோ ரேத்திய
பொன்னம் பலவர சுன்னும் பலதவப்
பேற்றா லுதித்த மாற்றா லுயர்ந்தோன்,
முன்னே யாங்கில பன்னூ லாய்ந்து
பின்னே பலவா மன்னோர் பாடைக
டெரியக் கற்றே யுரிய விலங்கைச்
சட்ட நிரூபண முட்டறு சங்கத்
துதிதரு பிரதி நிதியென வாய்ந்து

சங்கத் தெழும்பிர சங்கசிங் கேறெனப்
பரம்பிய விசைபுடை நிரம்பி[illegible] பெற்றெழு
மரசிய னகரா யுரைசெயிங் கிலாண்டு
சென்றுவிக்ற் ரேறியா மன்றம ரரசி
மதித்துப சரிக்கத் துதித்தவ ணமர்ந்தாங்
கிலநிறை பாடையி னலமுற வியற்றிய
வலங்கா ரம்பல துலங்கரிச் சந்திர
நாடக மரசினர் கோடக முறைகொள
வரசரங் கேற்றியவ் வரசியேற் றளித்த
சேறெனும் பட்ட நேருறப் பெற்றுப்
பின்னரன் னவளா னன்னரோர்ந் தளித்த
முத்திரை தரித்தே யித்தரை யேத்த
விருநிதி யவனிகர் பெருநிதி யுறவாழ்ந்
திசைதிசை நிறுவிய வசையறு பெருமையி
னேமிதாழ் குமார சாமியாங் குரிசிலைத்
தனக்கொரு மாதுல னெனக்கொளும் புகழோன்,
வடமொழி தென்மொழி திடமொடு பயின்று
தெளிவுறு மாங்கில மெளிதுறக் கற்றுப்
பரிந்திடு நியாய துரந்தர னாகி
வழக்குகள் வாதித் திழுக்கற முடிக்கு
முரம்பெறு மாற்றல் வரம்பறப் பெற்றுப்
பலதிறத் தவர்க்கு மிலகுறத் துணையே
புரிதயா நிதியாய் விரிதரு வெருவர
மழைபோற் பொழியு மொழியாக் கொடையு
மருந்தமிழ்ப் புலவர்க் கிருந்தவப் புரவு
மழுக்கா றில்லா விழுக்கறு மொழியுங்
கொண்டுபே ரறிஞர் மண்டுசீ ரவையி
னேறுமா றில்லா வீறுசிங் கேறுந்
திட்டஞ் செய்திடு சட்ட நிரூபண
சங்கந் தனக்கொரு துங்கப் பிரதி
நிதியென வாய்ந்து துதிகொளு மதிபன்
சங்கநூல் சமயத் துங்கநூல் பலவு
மெனையுசாத் துணையா முனையுறக் கொண்டும்
பற்பல வறிஞரை முற்புகக் கொண்டும்
பன்னூ லாய்ந்த செந்நாப் புலவன்

றிடமொழி யாகிய வடமொழி யாகம
மலைவற வாய்ந் லைபெறு மறிஞன்
மறைந்திடு செல்வ நிறைந்திடப் பெற்றும்
நிறீஇய தலையொடு கறீஇய திரியும்
பிணநேர் மாந்தர் குணநே ராது
கலந்தெவ ரோடு மலந்திடா மகிப
னெத்தொழில் புரியினு மத்தழ லேந்திய
வுத்தம னிருகழல் வைத்துள மதியின
ளுமெனுங் குமார சாமிமன் னனையும்
இளமையி லாங்கில மூளமுறக் கற்றெழின்
மன்னரி னீதிநூல் பின்னரிற் பயின்றிங்
கேற்றமா மற்வக் கேற்றெனச் சிறந்து
துட்ட முரூதமை சட்ட நிரூபண
சங்கத் துக்கொரு சிங்கப் பிரதி
நிதியென விருந்து விதியொடு மெவரையு
மடக்குதன் னுரையே விடுக்குதிண் டிறலோ
னிலைமையி னுயர்ந்த தலைமை நியாய
வாதியுத் தியோகப் பூதியி லுயர்ந்தோ
னவைகளி லெழுந்து சுவைதரு மிசையாஞ்
சாலத் தெவரையு நாலத் தனதுளப்
பாங்கே யிழுக்கு மோங்குநா வலியான்
மறையா கமங்களை முறையா வுணர்ந்த
மூதறி வோரொடு கோதுறு பூதலம்
விட்டறத் துறந்த பட்டணத் தடிகளு
மடியனே னுடைய கடியநெஞ் சகமா
மடுக்கலி னீங்கா திடுக்கண் களைய
நின்றுல வுறுகழ னன்றுல கருளிய
சமய குரவரு மமையுநூ லருளிய
சந்தான குரவரு முந்துநேர் வழியாய்
நச்சுவே தாந்தத் துச்சியிற் பழுத்த
கனியது பிழிந்த வினியநற் சார
மென்னச் செந்தியின் மூன்னைக் குரவ
குமர னருள்பெறு குமர குருபர
முனிவனும் புகழ்ந்த வினியநல் வழியாய்
முத்தி பயத்தற் குத்தம வழியா

யுள்ளமெய்ஞ் ஞானக் கள்ளமில் வழியாஞ்
சுத்தாத் துவித சித்தாந்த சைவத்
தேறுமேற் படியாக் கூறுசெய் துள்ள
பேணுசோ பானமா ரேணிநேர்ந் தமைந்த
வேதாந்த நூலிப் போதாய்ந் துணர்ந்து
மேலைத் தேயத் தாலத் துயர்ந்த
வாங்கில பண்டிதர் தேங்குறு சபைதொறு
மோங்குறு சமயத் தீங்கறு வழினயப்
பொங்குறச் செயும்பிர சங்கசிங் கேறு
கோயின் மடாலய மேயுமிக் கால
மிகையென விடுத்துத் தகைபெறு கலையே
யியல்வுற நாளு முயல்வுறு மறிஞன்
சமயநூ லறிவி னமையுமே லறிஞர்
மலியியாழ்ப் பாணமே தலையென வுணர்ந்து
நிலையுறு கழக மலைவற நிறுவிப்
பரிபா லனஞ்செயப் புரிவரு நிபுணன்
புன்னகை பொருந்து நன்னகை வதனன்
றிக்கெட் டுஞ்செல மிக்கெட் டிசையன்
ஜேன்றிற் புகழொடு தோன்றுக வெனுமுன்
வள்ளுவன் றெளிந்து விள்ளுந லுரையினுக்
கிலக்கிய மிவனலா திலக்கிலை வேறென
விரும்புவி போற்று பெரும்பெயர் பூண்ட
விருபெருஞ் செல்வத் தொருபெரும் பிரபு
வாகிய விசைதிசை போகிய ராம
நாத கலைஞனும் போதமே லோனையுந்
தனக்குமுன் னவரா மெனக்கொளும் பெரியோன்,
வளமையி லாங்கில மிளமையிற் கற்றே
யாங்கில பூமியா வோங்குகேம் பிறிற்சாம்
புரியினை யடைந்தே யரியபன் னூலாய்ந்
தெக்கருங் கலையு மிக்கரி றபத்தேர்ந்
தெய்ம்மே பட்டஞ் செம்மே பெற்று
முட்டறப் பரிஸ்றர்ப் பட்டமும் பெற்றபி
ஞட்டிய டிஸ்திறிக் கோட்டினி னீதி
பதியென வமர்ந்து விதிபெறு நியாயங்

குசைநுதி யெனவோர்ந் திசைபெறு மதியோன்
பொன்கிளர்ந் தொழியாப் பொன்கிழார் மாளிகை
பொன்னுறு மு[illegible]வாளி மின்னுற வுறைவோ
னிலங்கையி லுள்ள நிலங்கள்யா வினுக்கு
மீசனு மெனத்தகு சாசனுத் தியட்ச
ஞங்கில நிலயத் தோங்கலை யடைந்து
நீங்கிடா நண்பு தாங்கிடு மகிபன்
சட்ட நிரூபண முட்டறு சங்கப்
புலவரு ளொருவனு நிலவுறு மறிஞன்
கால மெத்தனை சாலக் கழியினு
மேலத் தான்புகல் சீலத் தனிமொழி
வழுவறக் காக்கும் பழுதறு நெறியோ
னிழுக்கே தனக்கு வழுக்குற வரினு
மொழுக்கந் தவறா விழுப்பமிக் குடையோன்
நீறுகண் டிகைமீ தேறிடு பத்தி
பூண்டருட் பாக்களே யீண்டரு மருந்தெனத்
தமிழ்மறை யேதனக் கமிழ்தெனக் கொண்டோன்
விந்துமோ கினிமான் றந்துறு மூவகைத்
தத்துவங் கடந்த சத்துவ முத்தி
தன்னு லன்றி மன்னு நிலையுறு
சைவசித் தாந்த மெய்வழி தேர்ந்திங்
கவ்வழிச் சிவனை யுய்வழி தொழுவோன்
பழுதறச் சாசன மெழுதுவோ ரெவரையு
முயர்தமி ழறிவிற் பயிறரப் புரிவோன்
செந்தமி ழறிஞரை நந்துப சரிப்போ
னீறக லாதிங் கேறுசங் கத்தோன்
வீறக லாதங் கேறுசங் கத்தோ
னிருந்துமே லோங்கிய திருந்துமா சனத்தோன்
பிரிந்துறா நிழலெனப் பொருந்துமா சனத்தோன்
பத்தி பழுத்தொழு குத்தம நூல்களாந்
திருவா சகமுதற் குருவா சகங்களை
யாங்கில மொழியிற் பாங்குறப் பெயர்த்தலி
வினையிலா துயர்ந்திங் கணைதரு புலவோன்
பொன்னுறப் பொலிந்து மின்னுறு மெழிலா
லியற்பெயர் காரண வியற்பெய ராகி

யருணா சலனெனு மருணா சலநா
பதியுயர் கலையு மதிலுயர் பத்தியு
முரிமையிற் கொண்டே யரு[illegible]யி னமர்தலி
னமர்ப்பொரு மவற்கே சமர்ப்பணஞ் செய்து
நாமோர் தரவரு தேமா புளிமா
கருவிளங் கூவிளந் தருவள மிகவுறு
நீர்ச்சுவை கனிச்சுவை காய்ச்சுவை செறிந்து
மலிந்துசெந் தமிழே பொலிந்தசித் தாந்த
சைவ பூமியென் றெவ்வகை யோரும்
புகழியாழ்ப் பாணத் திகழிலுத் தரபாற்
றிரியா நகுல கிரிபா லமர்ந்து
புரிந்தருந் தவமுறை பொருந்தற முழுகி
நகுல முனியக நகுலனேர் முகமு
நல்லமா ருதப்பிர வல்லியாஞ் சோழ
மன்னன் மகள்வயின் மன்னுமா முகமு
நீங்குறப் பெற்றே யோங்குறு பெருமை
வாய்ந்துபற் பலருந் தோய்ந்திடு சங்கம
தீர்த்தமுஞ் சிறந்த மூர்த்தியும் பொருந்திய
பண்டைத் தலமெனக் கொண்டரு ணகுலேச்
சரந்தனிற் பின்னுட் சிரந்தரு குலமா
மாதி சைவத் தீதறு மரபினி
லுதித்தே சிவாகம மதித்திடு செந்தமிழ்
நிலைகண் டுணர்ந்து தலைபெறு மொழுக்க
மருக்காச் சபாபதிக் குருக்களு மனுசனுந்
தியாக ராச வியாகக் குருக்களுஞ்
சிவாகம விதிமுறை தவாவகை யமைத்தே
தடத்த வருவரு வெடுத்தள வுருவினுஞ்
சுத்த மாயா தத்துவத் துள்ளா
ரன்றியிங் குள்ளார் சென்றிட ரகலா
ரென்றே யருளது குன்றாச் சதாசிவ
வடிவாங் குறியைப் படிமீ தருளிய
விறைவன் விதியினைக் குறைவற வுணர்ந்து
கட்டி யேபிர திட்டை செய்த
வகிலே சுரரா நகுலே சுரர்மேற்
றந்திடு நாக பந்த மெழுத்து

வருத்தன மோடு ச[illegible]ப்பபதோ பத்திர
மாலைமாற் றுதி சீ[illegible]மார் கவிமலர்
சொல்லணி பொ[illegible]ளணி புல்லுறச் சமைத்த
வுனோதரு மழகமர் விநோத விசித்திர
கவிப்பூங் கொத்தெனுஞ் செவிக்கினி மாலையை
நாரார்ப் பிணித்து நேராய்ச் சூட்டினன்
குயில்வளர் சோலை மயிலைமா நகரிற்
குணமதி லெவர்களு மிணைதபு கணபதிப்
பிள்ளைமுற் புரிந்த விள்ளரு தவமே
யோருருக் கொண்டெனப் பாரினி லுதித்தோன்
என்னோ டிலக்கண முன்னே கற்று
வடதென் னூற்கட றிடமுறப் பின்னர்க்
கற்றுத் தெளிந்தே மற்றுத் தொன்னூற்
குரையொடு பன்னூல் வரைவுற வியற்றிப்
புலமையி லிணையிலாத் தலைமைபெற் றுயர்ந்த
மதுரையாழ்ப் பாண மதுரத் தமிழ்மொழிச்
சங்கப் புலவனென் றெங்கும் புகழ்பெறு
தன்னையொப் பவரிலாச் சுன்னைக் குமார
சாமிப் புலவனைத் தோமிலா சிரியனுக்
கொண்டுயர் கலையாந் தண்டமி ழாய்ந்துய
ராங்கில கலையுந் தீங்கறக் கற்றபின்
மாணவர்க் காங்கில மாணக் கற்பித்
தெளிதே சட்டந் தெளிவுற வாய்ந்து
பின்னர்ச் சாசன மன்னர்தத் துவங்கொண்
டெழுதுந் தலைமை பழுதறப் பெற்றோன்
கன்னலுங் கனியுஞ் சொன்னலம் பெற்றோ
றை துயர்ந்த ஞான விருத்தி
சலாவினோ தந்தர நிலாவிடு சங்க
மாதிய சபைகளுக் கோதிய வக்கிரா
சனாதி பதியெனத் தனாதுசீர் படைத்தோன்
மயிலை யூஞ்சன் மயிலை விருத்த
மயிலை மும்மணி மயிலை யிரட்டை
மாலை யிணுவைக் கோலப் பதிற்றுப்
பத்தந் தாதி யத்திரு நீல
கண்டர் விலாச மெண்டரு பலவா

255. நூல்புனைந் தியற்றிய மேல்வரு புகழோன்
சிவனடி யவரைச் சிவனெனப் பணியு
மெய்த்தவத் தால்வரு முத்தமிழ்க்கல்வி
பெற்றுய ரறிவு முற்றுறு மயில்வா
கனனெனப் பெயரிய கனபுல வோனே.

உத்தமமோனைக் கட்டளைக்கலித்துறை.

வாகநத் தானும் வருமனத் தானும் வழுத்திடப
வாகனத் தானை வளர்நகு லேசனை மந்திரியோ
வாகனத் தானை வளநயந் தானை மதித்துமயில்
வாகனத் தோன்றன் மலர்கவி மாலை வனைந்தனனே.

யாழ்ப்பாணம் நாவலர்கோட்டம்

ம. ா. ா. ஸ்ரீ. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்

சொல்லிய

வெண்பா.

சித்ரகவிப் பூங்கொத்துச் செய்தான் கணபதிவேள்
புத்ரன் மயில்வா கனப்புலவன்—வித்வ
அருணு சலதுரைநன் ருதரித்தா னென்ருற்
பொருணு டலென்ன பொருள்.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

நகுலேச்சர

விநோத விசித்திர கவிப் பூங்கொத்து.

விநாயகர் காப்பு.

கட்டளைக்கலித்துறை.

கங்கா தரோத்துங்கர் மாலிம வான்றரு கன்னியிடப்
பங்கார் சிவாநந்த நாதர் நகுலைப் பழம்பதிமேற்
கொங்கார் விநோத விசித்ர கவிமலர்க் கொத்தியற்ற
விங்காந் தவாத்துணை யைங்கரத் தேவ னிணையடியே.

நேரிசைவெண்பா.

பூமருவு மாது பொலிமயிலை வாவியரு
காமருது மேவுமெழி லானைமுகா—நேமருவு
மாதா வெனதுபிதா மாகுருதே வாருமா
நீதா னருளே நிறை.

உபாசநா மூர்த்தி காப்பாகிய இஃது, ஒற்றெழுத்தில்லாச் செய்யுளென்றறிக.

கடவுள்வாழ்த்து.

சிவபெருமான்.

முன்மடுதேவெண்பா.

பொங்குறுந்த ரங்கநங்கை பொன்வடங்கி டந்தகொங்கை
யுங்கருங்க ணும்வயங்கு மொண்பரைதாம்—பங்கொடுமே
தன்சிரத்தை மேவத் தகையோற் றொழுவனடி
யென்சிரத்தை மேவ வியைந்து. (க)

தரங்கம்-அலை. தரங்கமங்கை-கங்கை. கொங்கையுங் கண்ணும் வயங்கும் பரையெனமுடிக்க. பரை-பார்ப்பதி. சிரத்தை-[1] சிரசின்மீது, [2] அன்பு. பொங்குறுந்.............. தகையோனென்பது, கங்கை சிரத்

திலேயும் பார்ப்பதி பாகத்திலேயும் மேவிய அந்தத் தகுதியுடையானை யெனப் பொருள் கொள்ளக் கிடத்தலின், எதிர்நிரனிறையாமென்க. சிவபிரானை அன்போடு அடிகளை வணங்குமவனென்பது இதன்கருத்து.

சிவசத்தி.

பின்முடுகுவெண்பா.

ஆரணங்கெ மம்பிகைபொன் னம்பதங்க ளன்றொழுவே
னாரணங்கி னீக்கியெனை யாண்டிடுமவ்—வாரணங்கொள்
செஞ்சிலம்ப லம்புஞ்செம் பஞ்சியுண்டி லங்குஞ்செங்
கஞ்சமஞ்சுஞ் செஞ்சரண்கள் காண். (உ)

ஆர் அணங்கு-[1] அரியதெய்வப்பெண், [2] நிறைந்த வருத்தம். ஆரணம் கொள் சிலம்பு-வேதச்சிலம்பு. அம்பிகையின் பாதங்களை யான் தொழுவேன்; அப்பாதங்கள் என்னை ஆரணங்கினின்று நீக்கி ஆண்டருளுமென்பது இதன்சாரம். அப்பாதங்கள், சிலம்பொலிக்கின்ற பாதங்கள், செம்பஞ்சூட்டப்பட்ட பாதங்கள், செந்தாமரைமலரும் அஞ்சுகின்ற பாதங்கள், எனத தனித்தனி முடிக்க. காண்-அசை.

விநாயகக்கடவுள்.

கட்டளைக்கலித்துறை.

ஒதாரு கொம்பன் மிகுமூன்று கண்ணன் வியன்சுளகுக்
காதன்கை மூக்கன் கழிதொங்கு வாயன் கரிமுகத்தா
னோதும் பெருவயிற் றோன்மலை நீலி யுதவுமைந்த
னேதொன்று மற்றவன் சப்பாணி குட்டுணிக் கென்றுதியே. (ங)

கையும் மூக்குமாய்த் தொழில்புரிதலின், துதிக்கை கைம்மூக்கு எனப்பட்டது. கழிதொங்குவாய்-மிகத்தூங்குகின்றவாய். கரிமுகம்-யானைமுகம். நீலி - நீலநிறத்தினள். ஏதொன்றுமற்றவன் - ஊர் பேர் குணம் குறி முதலியவற்றுள் யாதுமில்லாதவன். சப்பாணி குட்டுணி-அன்பர் தமது கரங்களைக் கொட்டிச் சிரமிசைக்குட்டி வணங்கப் பெறுவோன். என்துதி-எனது துதி. ஒற்றைக்கொம்பன் முக்கண்ணன் சுளகுக்காதன் கைம்மூக்கன் தொங்குவாயன் கரியமுகத்தன் பெரியவயிறன் நீலிமைந்தன் ஒன்றுமற்றவன் சப்பாணி குட்டுணியாகிய இவனுக்கு என்ன துதியென்று பழிப்பதுபோல ஒருதொனியர்த்தம் புலப்படலுங் காண்க.

வைரவக்கடவுள்.

நேரிசைவெண்பா.

அஞ்சுதலை நஞ்சிவனுக் கஞ்சலுறுக் கஞ்சவய
னஞ்சிரங்கி ளஞ்சனநற் கஞ்சுகனுர்—செஞ்சரணை

யஞ்சுதலை நீக்கியெனக் காறுதலை யீந்திடுமோ
றஞ்சலிப்ப னெஞ்சக[illegible]லா தன்பு. (௬)

நல் அஞ்சனக் கஞ்சுகன்-நல்ல கருநிறச்சட்டையணிந்தவன். சிவபெருமானையிகழ்ந்த பிரமனது உச்சித்தலையைக் கிள்ளிய வைரவக்கடவுளுடைய பாதங்களை எனக்குத் தேறுதல் தரும்பொருட்டுப் பூரண அன்போடும் வணங்குவேனென்பது இதன் தாற்பரியம். இது நான்கடியும் ஒரெழுத்தாற் தொடங்கி அடிமோனைத்தொடை பெற்றதன்றி மூன்றாமடியொழிந்த மற்றைய அடிகள் முற்றெதுகைத் தொடையுறவும் பெற்ற செய்யுள்.

வீரபத்திரக்கடவுள்.

கலித்துறை.

பரன்ராமன் சோதரனாய்ப் பகராகஞ் சொர்ண மாகிச்
சொரிபசுவெண் பால்பலாவாய்த் தோய்கனங்க போல மாகி
வரம்வைதாம் வேண்டிடுமோ மற்றவற்றிற் றேன்று வோன்செய்
பெருமகமன் றழித்தோனைப் பிரார்த்தனைசெய் தேத்து வேனே.()

'பரன்' இராமன்சகோதரன்பெயராகியபரதனாக, த, என்னுமெ[illegible]
'ஆகம்' சொர்ணத்தின்பெயராகிய ஆக்கமாக, க், ,, ,,
'பால்' பலாவின்பெயராகிய பாகலாக, க, ,, ,,
'கனம்' கபோலத்தின் பெயராகிய கன்னமாக, ன், ,, ,,
வேண்டியன. அந்நான்கெழுத்தானுமாகும் பதம் "தக்கன்" என்பது. தக்கன் செய்த யாகத்தைச் சங்கரித்த வீரபத்திரக்கடவுளைப் பிரார்த்தித்துத் துதிப்பேனென்பது இவ்விசித்திரகவியின் கருத்து.

சுப்பிரமணியக்கடவுள்.

எண்சீர் (க்கழிநெடிலடிஆசிரிய) விருத்தம்.

காரானைக் கிளையானைக் கணியா னானைக்
கண்ணொருநான் மூன்றானைக் கைவே லானை
யீரானை யுரியானை விழிவந் தானை
யிருமூன்று முகத்தானை யெதிர்த்த தீயர்
போரானை யிமையோருக் கருளி னானைப்
பொன்மயின்மே லானைமிகப் பொல்லார் நெஞ்சில்
வாரானைக் குறமானைத் தெய்வ மானை
வரைந்தானை யிருதாளை வணங்கு வேனே. (௬)

கரிய யானைமுகனுக் கிளையவரை, வேங்கைமரமானவரை, பன்னிருவிழிகளையுடையவரை, வேலாயுதகரத்தவரை, உரித்த யானைத்தோல் போர்த்த சிவபெருமானது அழகிய கண்ணினின்றும் அவதரித்தவரை, ஆறுமுகங்களையுடையவரை, எதிர்த்த கொடியோராகிய அசுரரது போரால் வருந்திய தேவரைக் காத்தருளினவரை, அழகிய மயில்வாகனரை, மிக்க பொல்லாதவரது நெஞ்சகத்தெழுந்தருளாதவரை, வள்ளி தெய்வயானைக்கு நாயகரை இருபாதங்களையும் வணங்குவேனென்பது இதன் பொழிப்புரை. இது பெரும்பாலும் இயைபுத்தொடை வரப்பாடிய செய்யுள்.

திருமால்.

அறுசீர்விருத்தம்.

பாம்பின்வா யுற்றுச் சாய்ந்தோன் பருந்தெடுத் தகலப் பெற்றோன்
பாம்பின்மேற் கிடந்த மண்ணைப் பரிவுட னிரந்த ளந்தே
யாம்பெண்ணிற் புணர்ந்து நுங்கி யளித்துமேற் சுமந்து நின்றோ
னம்பலைக் கராவின் மீட்டோ னடியிணை பணிகு வேனே. (எ)

[illegible]கிசேடசயனம், கருடவாகனம், பூமியையாசித்தல், அளத்தல், [illegible]தல், விழுங்கல், காத்தல், சுமத்தல், ஆனையை முதலையினின்று [illegible]ட்டலாகிய பல சரிதைகள் இவ்வொருகவியில் அமைந்துகிடக்கின்றன. இதில், முதலாமடிக்குப் பாம்பின்வாயில் அகப்பட்டு அதனால் மூர்ச்சையுற்று வீழ்ந்துகிடந்து பின்னர்ப் பருந்தொன்று தூக்கி அம்மூர்ச்சை தெளியப் பெற்றவனெனப் பிறிதோர் தொனியர்த்தந் தோன்றல் இக்கவிக்கோர் வனப்பாகும்.

இலக்குமி.

கலிவிருத்தம்.

சேதாம்பல்சண் பகத்தோடிரு செழுநீர்கொளுற் பலமு
மீதாம்மரை மலர்போன்ம்மென மிளிர்வாண்முக முடையா
டதாங்கலி யெனுநோயறு திருவாமருந் தருள்வாள்
பாதாம்புய மலராந்துணை பணிவேன்மிக நணியே. (அ)

இங்கே, ஆம்பல் வாயையும், சண்பகம் நாசியையும், உற்பலம் கண்களையும் குறித்து நிற்கின்றன. ஆம்பல் முதலியவற்றைத் தன்மீதுள்ள தாமரைமலர்போலுமென்று சொல்ல மிளிரும் ஒளிபொருந்திய முகத்தினளென்க. இஃது உவமையணி. கலி-வறுமை. திரு-செல்வம். கலியாகிய நோயை அறுக்கின்ற திருவாகிய மருந்தை அருள்பவளெனக்

கலி நோயாகவும், திரு மருந்தாகவும் உருவகிக்கப்பட்டன. முகத்தையுடையவளும் மருந்தையருள்பவளுமாகிய இலக்குமியினுடைய பாதாரவிந்த யுகளங்களை நண்ணிப் பணிவேனென்பது கருத்து. இது பதினேழு எழுத்தடியால் வந்த அத்தியட்டியென்னும் சந்தக்கலிவிருத்தம்.

அரிகரபுத்திரப்பிள்ளையார்.

நேரிசைவெண்பா.

வரைவில்லா ராயரில்லில் வாழ்வுரியா ராய
வரியோ ரரிவையுரு வாயே—வரவிரவி
யேயவரு ளேயுருவா வீய வருவாரை
யோய்விலவாய் வாயே யுரை. (கூ)

வரைவில்லார் - குன்றவில்லியாகிய சிவன். இடையர் மனையில் வளர்ந்த விட்டுணுவானவர் பெண்வடிவு தாங்கிவர அவரைச் சிவபெருமான் மருவி அருளையே உருவாகத்தர அங்ஙனம் வந்தவதரித்த ஐயனை எனது வாயே ஓயாமல் வாழ்த்து என்பது இதன்பொருள். இஃது எல்லாவெழுத்தும் இடையினத்தால்வந்த செறிவணிச்செய்யுள்.

பிரமதேவர்.

நேரிசைவெண்பா.

நான்முகமு நாற்றிசையு நான்மறையு நாவறையத்
தேன்மகிழுந் தேனிரையுந் தேன்மலரின்—மேன்மருவித்
தோற்றியுயிர்த் தோற்றமெலாந் தோற்றுவிக்குந் தோன்றறனைச்
சாற்றிமிகச் சார்வனடிச் சார்பு. (கo)

நான்குமுகங்களும் நான்குதிக்குகளிலேயும் நான்குவேதங்களையும் நாவாலோதத் தேன் விரும்பும் வண்டுகள் ஒலிக்கின்ற இனிய தாமரைமலர்மீது உற்பவித்திருந்து சமஸ்த உயிர்த்தோற்றங்களையும் சிருட்டிக்கும் பிரமதேவரைப் புகழ்ந்து அவர் பாதச்சார்பை மிகப் பெறுவேனென்பது இதன்பொழிப்புரை. இஃது அடிதோறும் (கூன் மாத்திரம் நீக்கி) முற்றுமோனைத்தொடை வரப்பாடிய சொல்லின்ப வணிச்செய்யுள்; அன்றி, எதுகைத்தொடையும் செறியப்பெற்றது.

சரசுவதி.

கட்டளைக்கலித்துறை.

பூவேய் திருமுகப் பூவேய் திருவிழிப் பூநிகர்வாய்ப்
பூவேய் திருமுலைப் பூவேய் திருக்கரப் பூவெனுந்திப்

பூவேய் திருவல்குற் பூவே திரு னை பூமனில்லைப்
பூவே கரங்கொண்டு பூவேய் திருப்ப ம் போற்றுவனே. (கக)

பூப்போலும் முகத்தையும், பூப்போலும கண்களையும், பூப்போலும் வாயையும், பூப்போலும் முலைகளையும், பூப்போலும் கைகளையும், பூப்போலும் நாபியையும், பூப்போலும் அல்குலையும், பூவாகிய வீட்டையுமுடைய பிரமதேவரது மனைவியைப் பூக்களைக் கையிலேகொண்டு பூப்போலும் பாதங்களைத் துதிப்பேனென்பது இதன் திரண்ட பொருள். இக்கவி இன்பமென்னுங் குணலங்காரத்துக்கும், உவமப்பின் வருநிலையென்னும் பொருளலங்காரத்துக்கும் இலக்கியமாகும். இதில் மோனை எதுகை இயைபு என்னுந் தொடைகள் சிறந்துவந்தன.

சமயகுரவர், திருத்தொண்டர்.

நேரிசைவெண்பா.

றிவிட்டுப் போய்க்குளத்தி னாய்ந்த வற்குமெச்சிற்
டித்து மாறேச்சப் பட்டவற்குஞ்—சூற்பிணிநோக்
கொண்டவற்கும் வெஞ்சிறைநோக் கொண்டவற்கு மற்றறுபொய்த்
தொண்டருக்குஞ் செய்திடுவேன் றெண்டு. (கஉ)

சுந்தரர் சம்பந்தர் அப்பர் மாணிக்கவாசகரென்னும் சமயகுரவருக்கும் மற்றைய உண்மைநாயன்மாருக்கும் தொண்டு புரிவேனென்பது இதன் தாற்பரியம். அப்பரும் மாணிக்கவாசகருமாகிய இருவரும் சிறையகத்திருந்தாராயினும், அப்பரைச் சூற்பிணி விதந்துகாட்டலின், இங்கே சிறைநோக்கொண்டவரென்றது மாணிக்கவாசகரை யென்பது இனிது புலப்படும். இது வணங்கற்குரியரல்லாரை வணங்கியதுபோல் மாறுபாடு தோன்றச் செய்தகவி.

குரவர்.

கட்டளைக்கலித்துறை.

வாக்கு வளமா வுரைதர வெஞ்சா வலிகெழுமி
யாக்க நறுங்கவி யாக்கிவைத் தானெனை யாமுதலைஞ்
சீர்க்கட் கடையெழுத் தாற்பெயர் பூண்ட செழும்புலவன்
பார்க்க ணவன்றனை மற்றென் குரவரைப் பாடுவனே.

வாக்கு வளம்பொருந் துரைத்தற்குக் குறையாத திறமையை யான் அடைந்து நலுங்கவிபாடவும் என்னை வல்லவனுக்கி வைத்தவன், இச்செய்யுளின் முதலைந்து சீர்களினுமுள்ள இறுதியெழுத்துக்களா னுய பெயரைப் பூண்ட செழும்புலவன். (அவ்வெழுத்துக்கடாம் முறை யே கு, மா, ர, சா, மி, என்பன. எனவே, குமாரசாமிப்புலவனென்ற வாருயிற்று.) அவனையும் எனது மற்றைய குரவரையும் புகழ்ந்து பாடு வேனென்பது இவ்விநோதகவியின் பொருள்.

அ வை ய ட க் க ம்.

நேரிசைவெண்பா.

தாமரைபூப் பூத்ததென்று தண்ணும்பல் பூத்திலதோ
சோமனயற் றாரகைகள் சூழ்ந்திலவோ—காமர்பொருட்
சொற்சுவைதோய் பாப்புலவர் சொன்னகவிக் கஞ்சிவெள்கி
யெற்பொருவார் பாடிலரோ விங்கு.

இது, காமர்பொருட் சொற்சுவை தோய் பாப்புலவரெ... ஞர் கவிப்பெருமை கூறுமுகத்தானே, ஆக்கியோன் கவிச்சிறுமை ... படுத்தி அவையடக்கமாயிற்று.

சமர்ப்பணம்.

கட்டளைக்கலித்துறை.

அருணு சலநே ரசையாத நீதியொ டன்பளைந்தே
யருணு சலநீங் கமிழ்தத் தமிழ்விருப் பார்ந்துவறி
யருணு சலமேற்க வீந்ததி காரியு மாஞ்சிறீமா
னருணு சலவண்ண றீகீது சமர்ப்பித மாக்கியதே.

(பொ—ரை.) அண்ணுமலையை யொத்த அசையாத நீதியோடு அன்புகலந்து, அருளையுடைய நாவானது மாறுபாடு நீங்கிய அமிர் தத்தையொத்த தமிழ்மொழியில் விருப்பம் மிகுந்து, வறிஞர் சோ றும் தண்ணீரும் யாசிக்கக் கொடுத்து, அதிகார புருஷனுமான ஸ்ரீமாந். அருணசலத் துரையவர்கட்கு இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது. இஃது யமகச்செய்யுள்.

சிவமயம்.

நூல்.

நேரிசைவெண்பா.

உலக முழுது முதவி யவைக
ணிலவ வருளி நிலைமை—விலக
விரவு நகுல விமல விருடி
பரவு பரம பதி. (க)

(க—ரை.) உலகங்களைப் படைத்துக் காத்து அழித்து நிற்பர் நகுலமுனிவராற் துதிக்கப்பட்ட கடவுளென்க.

எழுவாய்-பதி. பயனிலை-விரவும். நகுலமுனிவராற் துதிக்கப்பட்ட சுவாமிபெயர் - நகுலேஸ்வரர். அம்மைபெயர் - நகுலாம்பிகை. இஃது ஒருமாத்திரையெழுத்துகளான்முடிந்த செய்யுள்.

ஆறு தலைசேர்ந்தா ராறு தலையீந்தா
ராறுதலை யார்தந்தை யைந்தலையார்—மாறினகர்
நங்கை தகுதி நரலை முதலிடையோ
டங்கடையி னென்று ரறிந்து. (உ)

(பொ—ரை.) கங்காநதி தலைமீது தங்கப்பெற்றவரும், நமக்கு ஆறுதலைத் தருபவரும், ஆறுதலைகளையுடைய கந்தசுவாமிக்குத் தந்தையுமாகிய ஐந்துதலைகளையுடைய சிவபெருமானது மாறற்றநகரமானது, நங்கையும் தகுதியும் நரலையுமென்ற சொற்களிலே முறையே முதல் இடை கடையிலே (யுளது) என்று அறிந்து சொன்னர் அறிவுடையோர்.

நங்கையின் முதல்—ந, தகுதியின் இடை—கு, நரலையின் கடை—லை, எனவே அவரது நகரம் நகுலையெனக் கூறியவாறுயிற்று.

மேவினியர் தம்மிடத்தும் விண்ணார் மலையகத்து
நாவிநய நாறும் நகுலையே—தாவிமல
ரஞ்சிலம்பு சூழ்ந்தா னவற்பொடித்த தூயமறை
யஞ்சிலம்பு சூழ்ந்தா னகம். (ங)

(ப—ரை.) மேவு-பொருந்திய, இனியர்தம்-இனியவரது, நா இடத்து-நாவினிடத்து, விநயம்-பணிவான வார்த்தை, நாறும்-தோன்றுகின்ற, விண்-ஆகாயத்திலே, ஆர்-பொருந்திய, மலையகத்து-மலையினிடத்து, நாவி-நாவியின், நயம்-பயன் (புளுகு), நாறும்-கமழுகின்ற, நகுலையே-நகுலேச்சரமே, தாவி-தாவி, மலர்-பூ, அஞ்சில்-ஐந்தை, அம்பு-

கணையாக, சூழ்ந்தான் - உபாயத்தெடுத்த (மன்மத) னாகிய, அவன்-அவனை, பொடித்த-சாம்பராக்கிய, தூய-பரிசுத்தமாகிய, மறை-வேதமென்னும், அம்-அழகிய, சிலம்பு-சிலம்பு, சூழ்ந்தான்-அணிந்துள்ள (சிவபெருமா) னுடைய, அகம்-வீடாகும். இஃது இரண்டாமடி முதலிரு சீரிற் சிலேடையும், மூன்றும் நான்காம் அடிகளில் முதலிருசீர் மடக்காயும் வந்த செய்யுள்.

மாதவத்தர் தாழ்தலினால் வண்போத மிக்குறலாற்
பூதலமுஞ் சூழும் பொலிவதனான்—மாதுமையா
ளண்ணனகு லேசர்பதிக் காங்கயலிற் சூழ்கடலங்
கண்ணுமலைக் கொத்திடுமே யாம். (ச)

தவத்தர் கடலின் மூழ்கியும் மலையிற் தங்கியுமிருத்தலும், கடலிற் தோணிகளும் மலையில் ஞானமும் மிக்கிருத்தலும், கடல் பூமியைச் சூழ்ந்தும் மலையைப் பூதலத்தார் வலம்வந்தும் பொலிதலு முண்மையின், நகுலேச்சரத்துக் கடலும் மலையும் ஒன்றையொன்றொக்கும். இது சிலேடை.

மேனிகளம் பூசுபொடி மேவுமனை பச்சைவெள்ளை
யானகறுப் போடுசிவப் பாநகுலைக்—கோனுடைமை
முந்துபவ ளந்நீல முத்து மரகதமுந்
தந்தநிறம் போக்குந் தவிர்த்து. (ரு)

நகுலேசரது மேனி சிவப்புநிறம்; கண்டம் கறுப்புநிறம்; பூசுபொடி வெள்ளைநிறம்; மனைவி பச்சைநிறம். அந்நிறங்கள் முறையே பவளம் நீலம் முத்து மரகதமென்பவற்றின் நிறங்களையும் மழுங்கச்செய்யுமென்பது இதன்கருத்து. இஃது எதிர்நிரனிறை முறைநிரனிறைப் பொருள்கோள்கட்கும் விரோதவணிக்கும் இலக்கியமாதல் காண்க. பின்வரும் நான்கு செய்யுளும் நிரனிறையணிக்கு உதாகரணங்களாம்.

நாரணன்கொள் கூர்ம நவைமீனம் பன்றிகுற
ளாரசிங்க மாம்வடிவை நன்கழித்தே—சாரகந்தை
வீடத் தரித்தவைகள் வேதநகு லேசபிரா
னேடுவிழி கொம்பென் புரி. (சா)

இச்செய்யுளிலும் அடுத்தசெய்யுளிலும்ஈற்றடிகளைஉற்றுநோக்குக.

விட்டுணுவின் அகந்தையொழியுமாறு சிவபெருமான் அவ்விட்டுணுவெடுத்த,

கூர்ம அவதாரத்தை அழித்துத் தரித்தது—ஓடு.
மற்ச ,, ,, ,, —விழி=கண்.
பன்றி ,, ,, ,, —கொம்பு.
வாமன ,, ,, ,, —என்பு=எலும்பு.
நரசிங்க ,, ,, ,, —உரி=தோல்.

ஓங்குநகு லேசபிரா னுள்ளுரியீர் மாவுங்கைத்
தாங்குவதும் பூணுய்த் தரிப்பதுவு—மாங்கிடக்கை
தேங்கி யிரைகுவதுந் தேரினவை தாருவன
வேங்கையரி நாகமிரு கம். (எ)

சிவன் உரியீர்த்தவிலங்கு	... ...	வேங்கை=புலி.
,, கைத்தாங்குவது	... ...	அரி=நெருப்பு.
,, பூணுய்த்தரிப்பது	... ...	நாகம்=பாம்பு.
,, இடக்கையிலிரைகுவது...	...	மிருகம்=மான்.

தொல்லுயிர்கட் காவர்முடிச் சூடுவார் தாங்குவார்
நல்லடியர் சொல்ல நனிபெறுவா—ரொல்லையவர்க்
கீவர் பமநதுக வெய்து திதிதிதிதி
தேவநகு லேசபிரான் செப்பு. (அ)

"ப ம ந து க" என்னும் எழுத்துகளோடு "தி" என்னும் எழுத்தைத் தனித்தனி கூட்டி,

சிவன் உயிர்கட்குப்	... ...	பதி, ஆவர்;
,, முடியில்,	... ...	மதி, சூடுவர்;
,, முடியில்,	... ...	நதி, தாங்குவர்;
,, அடியார்,	... ...	துதி, சொல்லப்பெறுவர்;
,, அடியார்க்கு,	... ...	கதி, ஈவர் எனமுடிக்க.

ஈஓதா நாவா விவைக்குப்பின் மம்மைவைத்துத்
தீயார் கரநகுலேத் தேவற்குத்—தூயவுமை
பாண்டரங்கன் கொன்றை பழமறையோர் செய்வதுநற்
றாண்டவஞ்செய் தானமெனச் சாற்று. (௯)

சிவனுக்குத் தாண்டவஞ்செய்தானம்	... ...	ஈமம்.
,, பழமறையோர்செய்வது	... ...	ஓமம்.
,, கொன்றை	... ...	தாமம்.
,, பாண்டரங்கன்	... ...	நாமம்.
,, உமை	... ...	வாமம்.

வாகனமே தேவி வரைக்குயிலே யாயுதநீள்
வேகமுறஞ் சூலம் விறற்கொடியா—மேகவண்ணச்
சேமகனும் யானைத் திருமுகத்தான் சீர்நகுலைக்
காமர்பதி யாளர்தமக் கான். (க0)

நகுலேஸ்வரருக்கு ஆன் வாகனம்; தேவி வரைக்குயில்; ஆயுதம் சூலம்; கொடி சே; மகன் யானைமுகனெனப் பொருள்கொள்க. இச் செய்யுளின் முதலிறுதிமொழிகள் தம்முள்ளே பொருளை நோக்கி நிற்றலின், பூட்டுவிற்பொருள்கோளாம். இன்னோரன்ன செய்யுட்களைத் தனுவெண்பாவென்று வழங்குவாருமுளர்.

"நகுலைப் பரமசிவ நாயகனே யாதி"
தகுமிப் பதினைந்திற் றானே—மிகுபெரிய
வைந்தாறு பன்னிரண்டு மப்பாற் பதினைந்தும்
வந்தாற லென்றோ வழுத்து. (கக)

முதலடியிலுள்ள பதினைந்தெழுத்துகளில் ஐந்தாம், ஆறும் பன்னிரண்டாம், பதினைந்தாம் எழுத்துக்கள் சேர்ந்து பரகதியெ... ஆகவே, பரகதி கிடைப்பதும், அடியேன் பிறப்பு இறப்பின்றி ஆறிய...ப்பதும் என்றைக்கு என்பது இதன் சாரம்.

முதலக் கரப்பொருளை மோகித் திரண்டா
வதன்பொருளின் மேலேறு மைந்தா—வதன்பொருளா
யெண்ணகுலை வாழ்வே யெனக்காறின் மெய்வேண்டாம்
பண்ணுகொன்பா னைய பயன். (கஉ)

க. ம் அக்கரம் அ=விஷ்ணு (விஷ்ணுவை மோகித்து)
உ ,, ஆ=இடபம் (இடபத்தின்மேலேறும்)
ங ,, உ=சிவன் (சிவனுகிய நகுலேசரே) [டாம்)
சு ,, ஊ=இறைச்சி (இறைச்சியாலாய தேகம் எனக்கு வேண்
கூ ,, ஐ=கடவுள் (கடவுட்டன்மையாகிய அழகிய பேற்றினைத் [தந்தருளும்)

காவிஞெடு மாரி கரியசூல் போகுமதர்
மேவுமன்பு செய்யவெரு மெல்லியமான்—ருவறுமிவ்
வேழு பெயருமுறை யேபுணர்க்கி ஞெண்ணகுலை
வாழுமரன் முப்பெயரா மற்று. (கங)

கா, மாரி, சூல், அதர், அன்பு, [illegible]ரு, மான் என்னும் எழுபெயர்ச்சொற்களையும் முறையானே புண[illegible]திவிடின், காமாரி சூலதரன் பெருமானென்றாய்ச் சிவனுக்குரிய முப்பெயராதல் காண்க.

கட்டளைக்கலித்துறை.

அதிதி பதிகை திரிகையிம் மூன்றனி னந்தமிடை
முதறர வாயின் னிருமொழி யீற்றுன் முறைதொழுவேன்
றதிமுதற் சொன்முன் கடைச்சொலிடை நடுச்சொன் முதன்முன்
வதிசொல் லிடையாய்கின் றேனே நகுலை வரோதயனே. (கச)

அதிதியின் அந்தமும், பதிகையின் இடையும், திரிகையின் முதலும், தி-தி-தி என்பன; அவை சேர்ந்து முத்தியாகும். பதிகை திரிகையின் ஈறுகள், கை-கை என்பன; அவை சேர்ந்து இருகையாகும். முதற்சொல்லின் முன்னும், கடைச்சொல்லின் இடையும், இடைச்சொல்லின் முதலும், முதற்சொல்லின் இடையும், அ-ரி-ப-தி என்பன; அவை சேர்ந்து அரிபதி யென்றாகும். ஆகவே அரிபதியே! இருகைகளையுங் கூப்பிமுறையாய்த் தொழுவேன்; முத்திதந்தருளவந்தருளுமென்பது இச[illegible] பொருள். அரிபதி-விஷ்ணுவுக்குத் தலைவர்.

அத்தியிற் பின்னிரண் டோடு தனித்தனி யாய்முதலில்
வைத்த சிபுமுவெம் பாசப் பசுக்கட்கு வாய்த்திடுமா
லெத்தக வுள்ளுரை மெய்ச்சுத்தி கூடு மிகரமொரு
பத்து நகுலைப் பதிவாழ் பதியிற் பதித்திடினே. (கரு)

அத்தியிற் பின்னிரண்டு—த்தி. இவற்றோடு தனித்தனியாய் முதலில் வைத்த சி, பு, மு,—சித்தி புத்தி முத்தியென்பன. உள் உரை மெய்ச்சுத்தி—மனம் வாக்கு காயமென்னும் முக்கரணசுத்தி. இகரமொருபத்து—பத்து + இ= பத்தி. நகுலேசரிடத்து முக்கரணசுத்தியோடு பத்திசெய்யின், ஆன்மாக்கட்குச் சித்தி புத்தி முத்தியென்பன கிடைக்குமென்பது இதன்சாரம்.

கங்கையை மாலைக் கவுரியை நாடிக் கருத்துறவே
கங்கையி னுன்கி னொருகூறு மாலிற் கருதுமிரு
பங்கினெர் கூறுங் கவுரியின் மூன்றுநற் பங்கினிரு
பங்குங்கொள் கீரி மலைவதிந் தானெம் பரசிவனே. (சகூ)

கங்கை-பாகீரதி, இந்நான்கெழுத்துள் இங்கு எடுத்தஒன்று—கீ.
மால்-அரி, இவ்இரண்டெழுத்துள் ,, ,, ஒன்று—ரி.
கவுரி-விமலை, இம்மூன்றெழுத்துள் ,, ,, இரண்டு—மலை.
எனவே, கீரிமலை யென்பதாயிற்று.

ஏந்திய மோதகத் தாலைங் கரனை யெலியிழுக்க
வாய்ந்தவக் கந்தனைச் [சா]மியென் றுங்கு மயில்பொறுக்கக்
காய்ந்த வடுகனற் பி[ள்]ளையை நாயொன்று காவவுமாச்
சேர்ந்துமை பாகத் திருந்தா னகுலைத் திகம்பரனே. (கஎ)

ஐங்கரனுக்கு எலியும், கந்தனுக்கு மயிலும், வடுகனுக்கு நாயும், சிவனுக்கு ஆவும், ஊர்திகளாமென்பது புராணசம்மதம். இனி. மோதகம் காரணமாக ஐங்கரனை எலி இழுக்கவும், சாமி (இது சாமைக்குக் கிராமியச்சொல்) என்றெண்ணிக் கந்தனை மயில் பொறுக்கவும். வடுகனாகிய பிள்ளையை நாய் காவவும், (தான் சிறிதும் சிந்தைசெய்யாது) உமையாள் வாமபாகத்தே சேர்ந்திருந்தான் சிவனென ஓர் தொனியர்த்தம் புலப்படலும் காண்க.

செய்யார் நகுலைப் பதியாள னெந்தை செவிக்கிதமீந்
தையாறு மூன்றக் கரமொழி யாகி யதன்கடைபோ
யுய்வாக்கும் பிள்ளை யிடைகெடச் சோம னுறாமுதல்போய்
மெய்வாழ்வு மோக்கந் தருதவ தொண்முனி வீணையதே. ()

முனியென்றது நாரதமுனியை. சிவனுடைய செவிக்கு இ[illegible]ந்து, மூன்றெழுத்து மொழியாகி, நாரதன் வீணையுமாயுள்ளது, [illegible] அது கடைகெட 'மக' எனவும், இடைகெட 'மதி' எனவும், முதல்கெ[illegible]டக் 'கதி' எனவும் நின்று முறையே பிள்ளை, சோமன், மோக்கமெனப் பொருள் தருமாறு காண்க.

மனையாட்டி தக்கன் மகள்சூனு செட்டிதன் மைத்துனனே
முனின்மாட் டிடையன் மருமகன் பார்ப்பானெண் மூங்கில்பெறு
மனைகாட்டு வேடிச்சி யாகு மருமக ளாகிலவற்
கெனநாட்ட வோர்சாதி யில்லை நகுலை யிருப்பவற்கே. (க௯)

இது, சுற்றத்தினர் பலரும் வேறுவகைப்பட்ட பலசாதியினராயிருத்தல்பற்றிச் சிவனுக்குச் சாதியென ஒன்றில்லையாயிற்றென்று, உண்மையை ஒழித்துப் பிறகாரணம் கற்பித்துக் கூறியவாறு.

செம்மான்கைக் கொண்டவ னம்பட்டன் வண்ணான் செலுத்தும
றம்மான் குயவன்பி ளுன்கச் சிடையன் றபக்கரையா [ள்ளன்
னம்மாண் டடிநற் பறையனோர் வேட னணிநகுலைப்
பெம்மா னெனத்துதி யாய்நமைப் பார்ப்பான் பெரிதுவந்தே. ()

(இ—ள்). செம் மான் கைக்கொண்டவன் - செவ்விய மானைத் திருக்கரத்திலே தரித்தவர், அம் பட்டன்-அழகிய பட்டு வஸ்திரத்தையுடையவர், வண ஆன் செலுத்து மள்ளன்-அழகிய இடபவாகனத்தைச் செலுத்துகின்ற வீரர், தம் மான் குய அன்பினன்-தமது சத்தியின் தனங்களிடத்தே அன்புடையவர், கச்சு இடையன்-கச்சணிந்த இடையையுடையவர், தபக் கரையான்-தபமாகிய துறையிலுள்ளவர், அம் மாண் துடி நல் பறையன்-அழகிய மாட்சிமைபொருந்திய துடியாகிய நல்ல பறையையுடையவர், வேடன்-வேடங்களைக் கொள்ளுபவர், அணி நகுலைப் பெம்மான் எனத் துதியாய்-அழகிய நகுலேச்சரத்துப் பெருமானென்று சொல்லித் துதிக்கக்கடவாய்; பெரிது உவந்து நமைப் பார்ப்பான்-(அவர்) மிகவும் மகிழ்ந்து நம்மீது (கிருபாகடாக்ஷ) வீக்ஷணம் புரிந்தருளுவார். இச்செய்யுளிலே சாதிப்பெயர்கள் தொனித்தல் காண்க.

ஆய்ந்தவம் மல்லிகொண் மஞ்சற கடுகுழ லாணகுலை
வாய்ந்தவள் பங்கவிங் குள்ளிநின் றேத்திடு வாமிளகா
மேய்ந்தவெங் காயங்கள் 'சுக்கா'கி வெந்தயர்த் தேபிறகுஞ்
சார்ந்த பெருங்காய மாற்றநற் சீரகந் தந்துதவே. (உக)

(பொ—ரை.) ஆய்ந்த அழகிய அல்லிகளைக் கொண்ட, மேகத்தையும் இருளையுமொத்த, கூந்தலையுடையவராகிய நகுலாம்பிகை பாகரே! இவ்விடத்தே (தேவரீரை) நினைத்து நின்று தோத்திரிப்போம்; (தேவரீர்) மனமிளகி (அடியேம் இதற்குமுன்) பொருந்தியிருந்த வெய்ய சரீரங்கள் சுக்காகி வெந்துபோக (அவற்றை) மறந்து பின்னரும் சார்ந்த பெரிய சரீரத்தை நீக்கும்பொருட்டு நல்ல சிறப்பாகிய மனதைத் தந்தருளும். இச்செய்யுளிலே சரக்குப் பெயர்கள் தொனித்தல் அறிக.

அணியா வடைமலர்த் தேன்குழற் றேய்ப்பன் னகவணியான்
றணியா திடர்மோ தகம்பரிப் பானையெஞ் சற்கரையா
மணியார் நகுலை நகர்க்கண் டதிகனி வாயவன்பாற்
பணியாரந் தோசயி லம்போன் மனத்தர் பரவிநின்றே. (உஉ)

(பொ—ரை.) வண்டுகள் மொய்க்கின்ற மலர்களை ஆபரணமாகக் கொண்ட கூந்தலையுடைய உமாதேவியைத் தோய்தலையுடைய சர்ப்பாபரணரும், துன்பத்தால் மோதப்படுகின்ற மனதைத் தாழ்த்தாது தாபரிப்பவருமாகிய சிவனை எமது நற்றுறையாகிய அழகு நிறைந்த நகுலேச்சரத்திற் தரிசித்து அவர் பக்கத்தில் நின்று மிகவும் உருகித் துதித்துப் பணிகின்றிலர், ஐயோ! மலைபோலும் மனத்தையுடையவர். இச்செய்யுளிலே பக்ஷணப் பெயர்கள் தொனித்தல் உணர்க.

ஈடாரக் கைப்பற்றிச் சீட்டு டன்படிக் கைக்கியைந்தே
நாடார் வறுதி செயப்போ றையானந் நன்கொடையான்
சேடாரக் குத்தகை யாளெற்றி யூர்ப்பரைச் சீதனஞ்சேர்
பீடார் புடையான் முதுசொ நகுலைப் பெருநகரே. (உங)

(பொ—ரை.) வலிமை பொருந்தத் திருக்கரத்தே முறிச்சீட்டைப்பிடித்து அப்பொழுதே (அதை) வாசித்தற்கு முடன்பட்டு (ச்சுந்தரமூர்த்தி) விரும்பிய விருப்பத்தை அழிக்கப்போன பிராமணரும், அழகிய நல்ல கொடையினையுடையவரும், திரட்சிபொருந்திய உருத்திராக்கமணி அணிந்த தகைமையினரும், திருவொற்றியூரையுடைய—உமையாகிய பெண்ணின் ஸ்தனங்களைச் சேருகின்ற—பெருமை நிறைதலையுடையவரும் ஆகிய சிவனது பழைய உரிமைப்பொருளாயுள்ளது, நகுலையாகிய பெரிய நகரம். இச்செய்யுளிலே சாதனப்பெயர்கள் தொனித்தல் தெளிக.

எண்சீர் (க்கழிநெடிலடி ஆசிரிய) விருத்தம்.

சீரோங்கு கல்வியொடு செல்வ நீதி
சிவபத்தி யதிகாரந் தேசு வாய்மை
பேரோங்கு கொடையருள்கொண் டோன்கொ ழும்பு
பிரபுசிகா மணியரசர் பேணுஞ் சீமா
ஞரோங்கு பஞ்சலிங்க தலத்து ளொன்றிற்
கலதுசிவப் போங்கற்கிங் கமைந்த பேரைக்
காரோங்கு பெயராகப் பெற்றோன் போற்றுங்
கடவுளையா நகுலையிடைக் காணலாமே. (உச)

பஞ்சலிங்கதலத்துளொன்றென்றது திருவண்ணாமலையாகிய அருணாசலத்தை. சிவப்பு-அருணம்; ஓங்கல்-அசலம்; ஆகவே, அருணாசலமென்க. இங்குக் காட்டிய சிறப்புகள் வாய்ந்த அருணாசலமென்பார் போற்றும் கடவுளை யாம் நகுலேச்சரத்திற் காணலாமென்பது இதன் பொருள்.

மேடமுகைப் பவன்முதை யிடப மேறி
மிதுனவடி கடகமுழந் தாள்கொள் சிங்காத்
தேடுமெழிற் கன்னிதுலா நிகர்த்த நீதி
சிறந்தயன்றன் செய்யவிருச் சிக்கங் கொய்தா
ளுடுநலத் தன்னை தனு நிகர்கொ ணெற்றி
நவின்மகரக் குழைகும்ப முலைசேன் மீனங்
கூடுவிழி யுடையவடன் கொழுநன் யாரேற்
குலவுமெழி னகுலைநகர்க் கோயி லானே. (உரு)

மேடம் உகைப்பவன் தாதை-ஆட்[டு]வாகனத்தை உகைக்கும் கந்த சுவாமிக்குப் பிதா. இடபம் ஏறி-இட[ப]வாகனன். மிதுன அடி-உபய பாதம். சடகம்-ஞெண்டு. சிங்கா-குறை[யா]த. கன்னி-பெண். துலாம்-கோல். செய் அவிர் உச்சிக் கம் கொய்தான்-செவ்விய, பிரகாசிக்கின்ற, உச்சித்தலையைக் கொய்த வயிரவன். தனு-வில். மகரம்-சுறு. கும்பம்-குடம். மீனம்-மீன். கந்தசுவாமிக்குத் தந்தையாய், இடபவாகனராய், அழகு குறையாத கன்னியும் வயிரவக்கடவுளுக்கு அன்னையுமாகிய நெற்றி முதலியவற்றையுடையாரது நாயகராயுள்ளவர் யாவரென்னில், (அவர்) நகுலைநகர்க் கோயிலாரென முடிக்க. இச்செய்யுளிலே இராசிப் பெயர்கள் தோன்ற அமைந்தவாறு காண்க.

ஆறுடனே சிகரமுதற் றளிக ளன்றி
யணிநகுலை நகரிடத்து மமரு மீசா
வீறுறுமெண் பானைந்து வடிவ மாகி
மிளிருமிரு பானைந்து வடிவ மாகிக்
கூறுமவை யிரண்டொடுகால் வடிவ மாகிக்
குலவுமர பன்னைந்து வடிவ மாகி
[நா]றுமுடற் சுமைநீக்கி நயந்த பேறு
நமக்கருள்வ தென்றுகொன்மெய்ஞ் ஞான தேவே. ()

(ஆறு-சு, சிகரம்-சி)=காசி. தளி-கோயில். எண்பானைந்துவடிவம்-அருவடிவம். இருபானைந்து வடிவம்-உருவடிவம். அவை இரண்டொடுகால் வடிவம்-அருவுருவவடிவம். பன்னைந்துவடிவம்- கருவடிவம். இச்செய்யுளிலும் அடுத்த செய்யுளிலும் அனேக எழுத்துகள் எண்களாக மறைத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

(இ—ள்.) ஆறுடனே சிகரம் முதல் தளிகள் அன்றி-காசி முதலியக்ஷேத்திரங்களிலேயன்றி, அணி நகுலை நகரிடத்தும் அமரும் ஈசா-அழகிய நகுலேச்சரத்தும் எழுந்தருளிய கடவுளே! வீறு உறும் எண்பான ஐந்து வடிவம் ஆகி-பெருமை மிக்க அருவடிவமாகியும், மிளிரும் இருபானைந்து வடிவம் ஆகி- விளங்குகின்ற உருவடிவமாகியும், கூறும் அவை இரண்டொடு கால் வடிவம் ஆகிக் குலவும் அர-அருவுருவ வடிவமாகியுந் திகழுகின்ற சிவனே! மெய் ஞான தேவே-மெய்ஞ்ஞான தேவனே! பன்னைந்து வடிவம் ஆகி நாறும் உடல் சுமை நீக்கி-கருவடிவமாய்த் தோன்றும் (நமது) சரீரபாரத்தை நீக்கி, நமக்கு நயந்த பேறு அருள்வது என்று-நமக்கு நல்ல பேற்றைத் தந்தருள்வது என்றைக்கு!!

நகரமுதற் குலைவதியோ[illegible] கார ரூபா
நரைபூமி சேர்யா[illegible]த் தான்றனக்கு
மொகரமெண்பத் தொன்றேகான் மகிழ வேறி
யொளிரவற்கு மத்தனென வுரைக்கு மேலோய்
மகரதுவ சன்றனுவம் பகத்தெ ரித்தோய்
மருவரையிற் பாதியனுக் கவனாய் நின்றோய்
தகரநறுங் குழற்சத்தி பாதி யானேய்
தருகுதியெட் டைந்தொடுளச் சார்ந்து தானே. (உஎ)

நகரம் முதல் குலை—(நகரத்தை முதலிலேயுடைய குலை)—நகுலை. நரை பூமி சேர் யானம் (நரை-ஆ, பூமி-கு, யானம்-வாகனம்)—ஆகுவாகனம். ஒகரம்-மயில். எண்பத்தொன்றேகால்-அகவ—கூத்தாட. அரையில் பாதியன் (அரையிற்பாதி- கால்)—காலன். எட்டு ஐந்தொடு ளு (எட்டு-அ, ஐந்து-ரு,ளு-ள்)—அருள்.

(பொ—ரை.) நகுலையில் எழுந்தருளிய ஓங்கார ஸ்வரூபியே! ஆகுவாகனருக்கும் மயில் கூத்தாட (அதின்மீது) மகிழ்ந்தேறி விளங்குபவருக்கும் தந்தையென்று சொல்லப்படும் மேன்மையையுடையவ[illegible] மீனக்கொடியையுடைய மன்மதனது சரீரத்தைக் கண்ணால் எ[illegible]வரே! காலகாலரே! நறிய மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய உமாதேவி பாதிவடிவாயுடையவரே! (அடியேமைச்) சார்ந்து அனுக்கிரகம் புரிந்தருள்வீர்.

அங்கணகு லேச்சரத்தெ மண்ணல் பேரா
மான்மநா யகனென்ற பொருள்கொ ணுமம்
புங்கவர்தம் மரமெனவே பொருள்கொ ணுமம்
புகழ்பதவி முத்தியெனப் பொருள்கொ ணுமந்
துங்கமுறு மூன்றுநற் றிதியி னுமஞ்
சொலினந்நான் கெழுத்தினவா மெழுதிக் கீழ்க்கீ
ழங்குநே ராய்க்குறுக்காய் வாசித் தாலு
மதுவதுவாய்த் தோன்றுமவை யறைகு வீரே. (உஅ)

"ஆன்மநாயகன்" எனப் பொருள்படும் நாமம்—				ப	சு	ப	தி.
"புங்கவர் மரம்"	,,	,,	,,	சு	ர	த	ரு.
"பதவி முத்தி"	,,	,,	,,	ப	த	க	தி.
"மூன்றுந்திதியினுமம்"		...	...	தி	ரு	தி	யை.

நேரிசைவெ[illegible]டா.

மாற்றாக்கிக் கஞ்சும் வளியுண்ணி மேற்புனேவோய்
காற்றாக்கிக் கூத்தாடுங் காட்சி[illegible] —போற்ருர்க்கு
மீசா நகுலேசா வேனுமைமுன் னீயிருந்து
மாசான துற்ற வகை. (உகூ)

மால் தூக்கி(=விட்டுணுவைத் தூக்குவது)-கருடன். வளிஉண்ணி (=காற்றையுண்ணுவது)-பாம்பு. உமைஎன்றசொல்லில், உ - சிவனென்றும், மை - மாசு என்றும் பொருள் தருவதாகக் கொண்டு இங்ஙனம் விநோதார்த்தமாய்க் கூறப்பட்டது.

அறுசீரடிவிருத்தம்.

என்னைமிகு பாவியென வியம்புவரா
லெனினுநகு லேசா நின்போன்
மன்னுபசு மீதேறி வரவறியேன்
சிசுவையுயிர் வாட்டு கென்னேன்
சொன்னசுப மணமுடிக்கத் தொடர்ந்தானைத்
தடுத்தறியேன் சூதில் வென்ற
நன்னர்மனை தோற்ருளென் னேனகர்க
ணகைத்தெரியே னயினேனே. (௩0)

இது சிவபெருமான் செய்தருளிய திருச்செயல்களின் உண்மைக் கருத்தை நோக்காமுன் சொல்லளவிற் ருேன்றியாங்குப் பாவச்செயல்களாய்க் கூறி உலகத்தாரை ஊன்றி நோக்கவைத்துக் கடவுட்டிருவருட் பெருமையை நிலைநிறுத்திற்று. இவ்வாறே அடுத்த இருசெய்யுளிலுங் கண்டுகொள்க.

கட்டளைக்கலித்துறை.

நீதிப் பெரியனென் பார்நகு லேச நினைநினது
நீதிப் பெருமையை நானறி வேன்பிற னேயமனை
மீதிற் பெருமயல் கொண்டானை தாதையை வெட்டினவன்
மீதிற் பெருமருள் வைத்தனை யெத்தனை வேறுமுண்டே. (௩க)

இச்சித்தது இயற்பகை நாயனர் மனைவியை. அனுக்கிரகித்தது பிதாவை வெட்டிய சண்டேசுர நாயனருக்கு.

தண்டடி மிண்டர்க்குத் தான்சுப காலந் தசையருத்திக் [தாற்
கொண்டுதைந் தாற்கெறிந் தாற்கிகழ்ந் தாற்குவிற் கொண்டடித்
கண்டி வரங்கள பலவளித் தாய்பூப்பெய் தானைவிழி
கொண்டெரித் தாய்முறை போலுங் நகுலைக் குருபரனே. (௩௨)

தசையருத்தி உதைந்தவர் கண்ணப்பநாயனர். எறிந்தவர் சாக்கியநாயனர். இகழ்ந்தவர் சுந்தரமூர்த்திநாயனர். விற்கொண்டடித்தவன் அருச்சுனன். பூப்பெய்தவன் மன்மதன்.

எண்சீரடிவிருத்தம். (திருப்புகழிசை)

நாகமனை யாகமனை நாகமக ளாக
நாகமது வாகவிலு நாகமணி யாக
நாகவணை மேகநிற னாகவுகை யூர்தி
நாகமுக னாகமக னாகமிலை யாயு
நாகவுரி தேகமுறு நாகடிகொள் கிரி
நாககிரு பாகரவ நாகதநி வாச
நாகர்பிறர் யோகர்தம நாகனிய வோது
நாகரிக வேகபர நாயெனெனை யாளே. (௩௩)

(இ—ள்.) மனை நாகம் ஆக-வீடு மலையாகவும், மனை நாகமகள் ஆக-மனைவி மலைமகளாகவும், விலும் நாகமது ஆக-வில்லும் மலையாகவும், அணி நாகம் ஆக-ஆபரணம் பாம்பாகவும், உகை ஊர்தி நாக அணை மேகநிறன் ஆக-செலுத்தும் வாகனம் சர்ப்பசயனத்தையுடைய மேகவண்ணனாகிய திருமாலாகவும், மகன் நாகமுகன் ஆக-புத்திரன் யானைமுகனாகவும் (பொருந்தி), ஆகம் இலையாயும் நாகஉரி தேகம் உறுநா-திருமேனி இல்லையாகவும் யானைத்தோல் திருமேனியிற் பொருந்தப் பெற்றவரே!, கடிகொள் கிரிநாக-சிறப்பைக்கொண்ட கிரிமலையையுடையவரே!, கிருபா ஆகர-கிருபைக்கு ஆகரமாயுள்ளவரே!, அநாகத நிவாச-இருதயஸ்தானத்தில் வசிப்பவரே!, நாகர் யோகர் பிறர்தம நா கனிய ஓதும் நாகரிக-நாகரும் யோகரும் பிறரும் தமது நாவினற் கனியத் துதிக்கின்ற சாதுரியரே!, ஏகபர-ஒரேகடவுளே!, நாயென் எனை ஆள்-நாயினேனாகிய என்னை ஆண்டருள்க. இது சொற்பொருட்பின் வருநிலையென்னும் அலங்காரம்.

நேரிசைவெண்பா.

கண்ணகன்பூக் கண்ணகுலைக் கண்கய... கண்ணனுதற்
கண்ணனுக்குக் கண்ணனொரு கண்ணிட்டான்—கண்ணினுடற்
கண்பாதி கண்ணுட்டி கண்ணிகர்கோ லூர்தியுமாங்
கண்ணூரக் கண்டதுநூற் கண். (௯௪)

(பொ-ரை) இடம் அகன்ற பூமியின்கண்ணே நகுலேச்சரத்தின் கண் (எழுந்தருளிய) கண்கள் கயன்மீன்களையொத்த உமாதேவிக்கு இறைவராகிய நெற்றிக்கண்ணையுடைய சிவனுக்குத் திருமால் (தமது) ஒருகண்ணையிட்டு அருச்சித்தார்; (அன்றியும்) ஆராயுமிடத்து (ச்சிவனது) திருமேனியிற்பாதியும், தேவியும், கண்போலும் அம்பும், வாகனமுமாவர்; இது கண்கூடாக நூல்களிற் கண்டது. இதுவும் மேலையணி.

அறுசீரடிவிருத்தம்.

அரியிணை யரிக்குத் தந்தோ னரியிடை யவத ரித்தோ
னரிநிற வரிவை காந்த னரியரி யரிமுக் கண்ணு
...ரி...மக் கரிபொ ருட்டா லரிசுலா நகுலை மந்த்ரத்
... யமர்த லூற்று னரிதரி யரியோன் றானே. (௯௫)

அரியிணை அரிக்கு-சக்கரத்தை விட்டுணுவுக்கு. அரியிடை-மூங்கி ...ன்கண். அரிநிறம்-பச்சைநிறம். அரிவை-பெண். அரி அரி அரி முக் ...ண்-சூரியன் சந்திரன் அக்கினி என்னுந் திரிநேத்திரம். அரி எமக்கு அரி ...பொருட்டு-எமது குற்றத்தை அழிக்கும்பொருட்டு. அரி சுலாம்-கடல்சூ ...ந்த. அரிஅணை-சிங்காசனம். அரிதரி-பாம்பு அணியும். அரியோன்-அரியவன்.

பதினைந்துசீரடிவிருத்தம்.

ஓத வாரி நகுலை மேன்மை யோத வாரி னுகுமா
லோங்கன் மீது மேக மூரு மோங்கந் நாட்டு நாதனே
சீத நேர வீவை யென்பர் சீத நேய மின்றிநீ [டுழலவுந்
சீவன் மைப்பட் டிருந்த தென்னென் சீவன் மைப்பட்
தாத னுனென் றுதை நீபொற் றுத கிச்செந் தாமச
தாசி வம்பெற் றுறைய வேச தாசி வாவிங் கேழைநின்
பாத நாடிப் பிறிதின் மேனம் பாத தென்றன் பாணிநிற்
பரசு பாணி யாக நிற்றல் பரசு பாணி தேவனே. (௯௬)

ஓத வாரி-வெள்ளத்தையு[illegible]டைய கடல். ஓத ஆரின்-யாரால் சொல்ல ஓங்கல்-மலை. ஓங்கு அம்-உயர்[illegible] அந்த. சீதம் நேர-மேகம் போல. சீத நேயம்-குளிர்ந்த அன்பு. சீ[illegible]ன் மைப்பட்டு-சிச்சி!(மனம்) வயிரமுற்று. என் சீவன் மைப்பட்டு-எனது சீவன் மயக்கமுற்று. தாதன்-அடியன். தாதகிச் செம் தாம-செவ்விய ஆத்தி மாலையைஉடையவரே! சதா சிவம் பெற்று-எப்போதும் நன்மையைப் பெற்று. சதாசிவா-சிவபிரானே! நின் பாதம் நாடிப் பிறிதின்மேல் நம்பாதது-நினது பாதங்களை நாடி மற்றொன்றையும் நம்பாதது. என் பாணி நின் பரசு பாணி எனது பாட்டு நின்னைப் பரவும் பாட்டு. பரசுபாணி-சிவன். இது மடக்கு. மேலைச் செய்யுள் சொற் பின்வருநிலை.

எழுசீரடிவிருத்தம்.

நின்கூட்டம் பேய்க்கூட்ட நின்னாட்டம் பித்தாட்ட
நெற்றிமிசை நிற்கு நாட்ட
மின்னீட்டந் தானோட்டம் மெல்லாட்குன் மேனாட்டம்
வெம்பொயுனை யொன்றி னோட்ட
முன்பாட்டங் கென்றேட்ட முன்கோட்ட மின்றீட்டு
மொண்ணகுலை தன்ம நாட்ட
நன்கீட்ட நன்றோட்ட நன்றோட்ட மாறோட்ட
நன்றுரைசெய் நம்பி ரானே. (௬எ)

(பொ—ரை) தேவரீருடைய கூட்டம் பூதக்கூட்டம்; தேவரீருடைய ஆட்டம் பித்தாட்டம்; தேவரீருக்கு நெற்றியிலும் கண்; மின்னற் கூட்டத்தை ஓட்டுகின்ற, அந்த மெல்லிய இடையையுடைய உமாதேவிக்குத் தேவரீர் மீது விருப்பம்; தேவரீரைச் சேரின், கொடிய பொய் ஓட்டம்(எடுக்கும்); தேவரீரைப் பாடும் பாக்களே தமியேனது சம்பாத்தியம்; தேவரீருடைய கோயில் அழகு தீட்டப்பட்ட ஒள்ளிய நகுலேச்சரம்; (அது) தருமத்தை நாட்டவும், நன்மையை விருத்திபண்ணவும், நல்ல தோட்டம்; எம்பெருமானே!(நமது)மாறாட்டத்தை நன்கு ஓட்டுவதற்கு (அவ்விடத்து) நன்மையானவற்றை உபதேசித்தருள்க. இதில் இயைபுத்தொடை மிக்கு வந்தது.

எண்சீரடிவிருத்தம்.

என்னெஞ்சப் பித்தளையா மலையில் வாழு
மெழினகுல மெனுங்கல்லு மலையின் பாங்கர்
மின்னஞ்சும் வெள்ளிமலை யொன்று மேவ
மேலொருசெம் பவளமலை விளங்க வாங்கே

மன்னுஞ்சீர்ப் பச்சைமலை யொ... சார்ந்து
வாமமுறு வதுகண்டு பின்ப்புணர்ந்தே
னின்னுஞ்சொற் புலவர்மொழி பிழையி லாரா
யினத்துடனே யினஞ்சேரு மென்றாரே. (௩அ)

பித்து அளை நெஞ்சம் ஆம் மலை-பித்தமாகிய அளையைக்கொண்ட மன மாகிய மலை. கல்லு எனும் நகுல மலை-கல்லாலாய கிரிமலை. வெள்ளிமலை இடபத்தையும், பவளமலை நகுலேசுரரையும், பச்சைமலை நகுலாம்பிகையையும் குறிக்கின்றன.

வரங்கேட்க நடந்தேகா றேய்ந்த தென்றும்
வந்திரந்து நீட்டியகை சலித்த தென்றுங்
கரங்கூப்பி நின்றுதலை வலித்த தென்றுங்
கண்டவர்க ளேசிமன நொந்த தென்று
மருங்கீர்த்தி நகுலையரற் குரைத்து நிற்போ
ரவர்பாவை யிடநடந்த பிச்சை கேட்ட
ரங்கோட்டிச் சுமைதரித்த விகழப் பெற்ற
செய்தியெலா நன்கறியாச் செயரு னென்னே. (௩௯)

இது தம் குறை அறியாது அநுக்கிரகித்தற்கென் றிருப்பவர் மீது குறை கூறல் குறையாமென்று கூறிற்று.

தாயொடுநற் றந்தையிலாத் தன்மை யாலுந்
தாருவனத் தெய்தியமு தேற்ற தாலுங்
காயமிசை யானைத்தோல் போர்த்த தாலுங்
கடியபுலித் தோலரையிற் கட்ட லாலும்
வாயில்வந்த படியிகழ்ந் தடித்து தைத்தார்
வரனகுலை யரனுரை யவர்ச கிக்கார்
நேயவுமைக் கொருபாதி மற்றோர் பாதி
நெடுமாலுக் கீந்துடல நீத்தார் தாமே. (௪0)

இது புராண சம்மதமான காரணங்களை விட்டுப் போலிக் காரணங்களை எடுத்துக் கூறிற்று.

பிள்ளைபெறும் வயிற்றினுக்கா யிரந்தா னித்தம்
பெண்டுபலர் சண்டையினாற் பித்த னானன்

வெள்ளநதிக் குளிரகல தீக்கை யிட்டான்
விடமிழுக்கு மோசயினுற் பாம்பு பூண்டான்
பிள்ளைமதி யுமைநுதலிலன் றெண்ணி வேய்ந்தான்
பேயுறவு கொண்டுநட மாடி நின்றான்
வெள்ளைநிறச் சாம்பராணி நகுலை யாளன்
விகடகவி கேட்டுமருண் மிளிரு வோனே. (சக)

இதிலும் போலிக் காரணங்கள் கற்பித்துக் கூறப்பட்டன.

அறுசீரடிவிருத்தம்.

பொருந்தாத பொய்யுரைத்துப் புண்டரிகத்
துண்மறைந்தார் போதர் மாலுந்
திருந்தாத களவெடுத்துத் திரைக்கடலுட்
சென்றொளித்தார் திக்கா ரிங்ங
னிருந்தாலு மிறப்புவரு மிறந்தாலும்
பிறப்புவரு மென்ன செய்வே
னருந்தாதை நகுலையுறி னவர்பலியேற்
றொருவேய்க்கு ளடங்கி னாரே. (சஉ)

பிரமா பொய் சொன்ன காரணத்தால் (வெள்கித்) தாமரை மலரினுள்ளும், விட்டுணு களவெடுத்த காரணத்தால் (வெள்கித்) திருப்பாற்கடலினுள்ளும் மறைந்துகொண்டனர். (பின்னை) யார் (எனக்குப்) புகலிடம்! இருந்தாலோ இறப்பு வருகின்றது; இறந்தாலோ பிறப்பு வருகின்றது. (ஐயோ! இங்ஙனம் மாறி மாறி வருகின்ற இதற்கு) என்னசெய்வேன்! (நமது) அரிய பிதாவாகிய சிவனது நகுலேச்சரத்துக்குப் போகலாமோவென்றால், அவரும் பிச்சையெடுத்த காரணத்தால் (வெள்கி) ஓர் மூங்கிலினுள் மறைந்துகொண்டார்! இதுவும் போலிக் காரணங்களைப் புனைந்து கூறிற்று.

வேறு.

புல்லைமெய்ப் புணர்ச்சி யென்பர் பூவையோர் பறவை யென்ப
ரல்லியைக் காயா வென்ப ரனிச்சமே சுள்ளி யென்பர்
வில்லையே மூல மென்பர் வேரையே வெயர்வை யென்பர்
மல்லலார் நகுலைச் செம்மல் வரதனு மறைவே யன்றோ. (சங)

இது, பல பொருள் தரும் சில சொற்களை எடுத்து அவற்றிற்கு வழக்கமாகக் கொள்ளும் பொருட்களை விட்டு அரிதாகக் கொள்ளும் பொருட்களைச் சொல்லி இங்ஙனம் ஒன்றை மற்றொன்றாகக் கொள்வார்க்குக் கடவுளும் மறைவுதானென்று அச் சத்தியத்தை வேடிக்கையாய் வலியுறுத்திற்று.

வேறு.

தெய்வநகு லேச்சரத்து வேலைதனைத்
தொழிலென்றோந் திகழுந்தி யென்பமெனின்
மெய்வயிற்றுக் கொப்பூழெ ஞேமத்தி
யென்பமெனின் வெள்ளெலும்பு மென்றுசொலோம்
வையகமே லாழியென்போ மோதிரமாய்
மதித்துமிரோம் வாரணமென் றுரைப்பமெனிற்
கையுடைய யானையெனோஞ் சக்கரமென்
றுரைப்பமெனிற் கையிலெடோஞ் சில்லுமன்றே.

இங்கே வேலை, உந்தி, அத்தி, ஆழி, வாரணம், சக்கரமென்பன யாவும் கடலாகிய ஒரு பொருளையே குறித்தலின், ஒரு பொருட்கிளவிகள். இனி, வேலை கடலையேயன்றித் தொழிலையும், அவ்வாறே உந்தி கொப்பூழையும், அத்தி எலும்பையும், ஆழி மோதிரத்தையும், வாரணம் யானையையும், சக்கரம் சக்கராயுதத்தையும், சில்லையும், கருதலுமுண்டாதலான், வினோதார்த்தமாய் அவற்றைச்சொல்லி அவை யல்லவென மறுத்துக் கடலை நிச்சயப்படுத்திய வாறாயிற்று.

நேரிசைவெண்பா.

காலி லிடாச்சிலம்பு கையிலிடாக் காப்புலக
மேலொருவர் செய்யாத வேலைதலை—யாலெடுக்காப்
பாரமரந் தூங்காப் பரியகுலை யாகுமிவை
நீர்நகுலை யிற்காண்மி னின்று. (சரு)

இது வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தியவாறு. சிலம்பு-மலை. காப்பு-மதில். வேலை-கடல். பாரம்-நீர்க்கரை, குலை-செய்கரை.

எண்சீரடிவிருத்தம்.

தங்குமலர்ச் சுண்ணமதைச் சோறே யென்றுந்
தவிர்வரிய மிளகுதனைக் கறியே யென்றும்
பொங்குநறு மமிழ்துதனைப் பாலே யென்றும்
போர்ப்படைபெய் கூட்டினைத்தா னுறையே யென்றும்
பங்கமுறு சேறுதனைக் குழம்பே யென்றும்
பயிரதனைக் கூழென்றுங் காஞ்சி தன்னைத்
துங்கமுறு கஞ்சியென்றுஞ் சொல்வே னனை
சுகிர்தநகு லாம்பிகையா டுணைவர் மீதே. (சசு)

இது சோறு, கறி, பால், உறை, குழம்பு, கூழ், கஞ்சியென உணாப் பெயர்கள் அமைத்து யாக்கப்பட்டது. மலர்ச்சுண்ணம் முதலியவற்றிற்குச் சோறு முதலியவை பரியாயபதங்களே.

நகுலமுனி வாசமெதென் றிரந்து கேட்ட
நாயகிக்கு நாயகனா நாக மென்றான்
பகையொடது கடியாதோ வென்றாள் பெண்ணே
பகரரிய சிலம்பென்றான் காலைப் பார்த்தா
ணகையொடது வரையென்றான் கையைப் பார்த்தா
ணகமென்றான் விரற்பார்த்தாள் குத்ர மென்றான்
றகுதியதோ கபடமென்றாள் கோத்ர மென்றான்
றானெதிர்ந்த ழைப்பனென்றான் மலையென் றானே. ()

நாசம், சிலம்பு, வரை, நகம், குத்திரம், கோத்திரம், மலையென்னும் எழும் ஒருபொருட் சொற்கள். நாயகனொருவன் நாயகியைப் பார்த்து மலை யாகிய ஒரு பொருளையே பல சொற்களால் விளக்கியும், அவள் விளங்காதவளாயினாள்; அவன் வினோதார்த்தம் வேறு பொருளையும் தரும் சொற்களால் விளக்கினமையின். நாகமென்றதனாற் பாம்பெனக் கருதியும், சிலம்பென்றதனாற் சிலம்பணியும் காலையும் வரையென்றதனால் வரையையுடைய கையையும் நகமென்றதனால் நகத்தையுடைய விரலையும் பார்த்தும், குத்திரமென்றதனாற் கபடம் ஆகாதென்றும், கோத்திரமென்றதனால் இனத்தார் வரிற்றான் எதிர்போய் அழைத்துவருவேனென்றும் கூறினளென முடிக்க.

கலைஞானக் கட்குடித்த மயக்க மன்றோ
கவிவாணர் நகுலையான் றன்னை யேத்திப்

பலர் தாழுஞ் சூரன்சேய் சண்ட னந்தப்
பகர்சண்டன் சேய்கரிய வன்கா ணந்த
வுலகோதுங் கரியவன்சேய் கஞ்ச னந்த
வுயர்கஞ்சன் மருகன்மைத் துனன்கி ருட்ண
னிலமீதிற் பாசுபதாத் திரம வன்ற
னெடுந்தவம்பார்த் தீந்திலையோ நிகழ்த்தென் பாரே. ()

சூரன் - சூரியன். சண்டன் - இயமன். சண்டன் - சூரியன். கரியவன் - சனி. கரியவன் - விட்டுணு. கஞ்சன் - பிரமா. கஞ்சன்- ஓர் அரசன். கஞ்சன் மருகன் - கிருட்டிணன். (கஞ்சன் மருகனுக்கு மைத்துன னாகிய) கிருட்டிணன் - அருச்சுனன்.

காயமின்றி யிருகூறுங் கொண்டான் கண்டீர்
கண்டமட்டுங் கறுப்பாக நின்றான் கண்டீர்
தேயநின்ற குழந்தைமதிப் பித்தன் கண்டீர்
சேராரைத் தலைவைத்த மாடன் கண்டீ
ராயவந்த விதிதலைமே லிரந்தான் கண்டீ
ரழகியநற் றையலிட வல்லான் கண்டீர்
நேயமொன்றித் தொண்டருளத் துறைதல் போல
நீங்காம னகுலைவதி நேயன் றானே. (சக)

காயம் இன்றி-திருமேனி இல்லாதிருந்தும் தழும்புபடாமல்). கண்டமட்டும்-கழுத்துமாத்திரம் (கண்ட அவ்வளவும்). கறுப்பாக-கறுப்பாய் (கறுப்படைய). குழந்தை மதிப் பித்தன்-பால சந்திரனை அணிந்த சிவன் (குழந்தைப் புத்தியையுடைய பித்தன்). சேராரைத் தலைவைத்த மாடன்-ஆத்திப் பூமாலையைத் தலையில் அணிந்த இடபவாகனன் (பகைவரைத் தலைவைத்த மடையன்). விதி தலைமேல் இரந்தான்-பிரம கபாலத்தில் யாசித்தவன் (யாசித்தான் தலையில் விதி). தையல் இட-தையலை இடப்பாகத்தேயுடைய (தையல் செய்வதில்). வல்லான்-நாயகன் (வல்லவன்).

பார்த்தநெடு மலைந்தானை மலையா னென்றும்
பார்ப்பதியை வரைந்தானை வரையா னென்றும்
பூர்த்தியுறக் கற்றானைக் கல்லா னென்றும்
புகழோங்கி தனையோங்க லானென் றந்து

ரார்த்திபகை விள்ளானை விண்டா னென்று
மணிச்சார லானையருள் சார்ந்தா னென்று
மேத்துமிசை சேர்நகுல் யேகன் பாத
மிறைஞ்சுநர்மற் றோர்தமையிங் கிறைஞ்சா ரன்றே. ()

மலையான், வரையான், கல்லான், ஓங்கலான், விண்டான், சாரலான் என்பன யாவும் மலையிலிருப்பவனென ஒரு பொருளையே குறிக்கின்றன. மலைந்தான் மலையான், வரைந்தான் வரையானென்றிவ்வாறு ஒன்றுக்கொன்று விரோதமான சொற்களால் இச்செய்யுள் அமைக்கப்பட்டிருத்தலின் சொல்விரோதவணியாம். அச்சொற்கள் ஒன்றுக்கொன்று எதிர்மறைப்பொருள் தாராமையும் காண்க.

ஞானமெனப் புகலுறுமா காய மொன்றி
நாடுதிருக் கிரிமலைப் படிந்து முன்னு
லீனமுற வருகடனீர் புயலா னுண்டே
யெழிலுருவ மின்னநிலாத் துடிமு ழங்கக்
கானமறை மொழியிடிக்க வடியர் யார்க்குங்
கனவரமா மழைபொழியு மளியி னானைத்
தூநிலவு தொண்டருண் மேக மென்றே
சொன்னவகை யென்னதகை சூழ்ந்து பார்ம்மே. ()

(பொ—ரை.) ஞானம் என்று சொல்லப்படும் ஆகாயத்திலே பொருந்தி, விரும்பப்படுகின்ற திவ்விய நகுலமலையிலே தங்கி, முன்னுளில் (வருணன் அனுப்ப) வந்த கடலின் நீரை (அவன்) இழிவு அடையுமாறு (தமது சடையில் இருக்கிற நான்கு) முகில்களாற் குடித்துத் திருமேனி ஒளியினால் மின்னத், துடிப்பறை முழங்க, இசையையுடைய வேதமொழிகள் இடிக்க, அன்பர் யாவருக்கும் கனத்த வரமாகிய மழையைப் பொழியும் கிருபையுடையவரைப், பரிசுத்தம் விளங்கிய அடியார் கிருபாமேக மென்று சொல்லியவாறு (ஆஹா!) என்ன தகைமை! ஆராய்ந்து பாருங்கள். இடித்தல்=ஒலித்தல்.

இதிலே, ஆகாயத்திற் பொருந்தலும், மலையிற் படிதலும், நீர் குடித்தலும், மின்னலும், முழங்கலும், இடித்தலும் மழை பொழிதலும் ஆகிய மேகத்தின் செயல்கள் யாவும் தோன்ற அமைத்தவாறுகாண்க.

நஞ்சாரு மணிக்களத்து நகுலை யீசா
　　நாயெனினைக் கேட்டவர நான்முக ன்மாற்
கெஞ்சாத மயலறுத்த குன்றப் பெரி
　　னெழிற்சார்பு பற்றிக்கொ லேழை யேற்குத்
துஞ்சாம லுறுகிருபை நாக்கு நீராய்ச்
　　சொலுமூன்றின் பேர்ப்பேரான் மூல மீந்தாய்
நெஞ்சானு நினைப்பருநின் கிருபை நாக்கு
　　நீர்மைத்தோ சொல்லவரு ணீடு வோனே. (ருஉ)

பிரம விட்டுணுக்களின் மயக்கம் அறுத்த மலை-திருவண்ணுமலை. திருவண்ணுமலைக்கு அருணுசலமென்பதும் ஒருபெயர். கிருபை-அருள், நாக்கு-நா, நீர்-சலம்; அருள்+நா+சலம்=அருணுசலம். நகுலேஸ்வரரே! அடியேன் கேட்ட வரத்தைத் திருவண்ணுமலையின் பெயர்ச்சார்பு பற்றி அருணுசலம் என்னும் பேரையுடையார் மூலமாகத் தந்தருளினீர்; மனத்தாலும் நினைத்தற்கரிய தேவரீரது கிருபையைத் தமியேனது நாவா சொல்லுந் தன்மைத்து!

முதலெழுத்தலங்காரம்.

நேரிசைவெண்பா.

கூத்திளமை நொய்மைமதி கூருநய மங்குலொடே
வாய்த்தசம்பை யென்றேழு மாண்பெயர்க்குஞ்—சார்த்துபதி
லேய்ந்தமுன்கள் சேர்ந்துநகு லேச சுவாமியெனு
வாய்ந்தபெய ரென்பாம் வழுத்து. (ருங)

1. கூத்து ... (ந) டனம்.
2. இளமை ... (கு)ழவு.
3. நொய்மை... (லே) சு.
4. மதி ... (ச) ந்திரன்.
5. நயம் ... (சு) கம்.
6. மங்குல் ... (வா) னம்.
7. சம்பை ... (மி) ன்னல்.

"நகுலேசசுவாமி"

இதுவுமது.

கட்டளைக்கலித்துறை.

புடையிற் கடலொலி நீங்கா நகுலைப்பொ ளுலயத்துக்
கடவுட் குரிய குணமா றெருங்குறக் காட்டுமொழி
யொடுநற் கிளியொரு கட்பறை தேம லுவைக்கியல்பே
ரடியிற் பசுபதி நாற்சிர மெஞ்சின வாய்ந்தறியே. (ருச)

1. கடவுட்குரிய குணம் ஆறு ஒருங்குறக் காட்டுமொழி (ப) கம்.
2. கிளியின் பெயர் ... ... (சு) கம்.
3. ஒருகட்பறையின் பெயர் ... ... (ப) தலை.
4. தேமலின் பெயர் ... ... (தி) தலை.

இவற்றின் முதலெழுத்துகள் சேர்ந்து "பசுபதி" என்றுவதும், எஞ்சியவை, 'கம்' 'கம்' 'தலை' 'தலை' எனநின்று நான்கு சிரமாவதும் காண்க.

நடுவெழுத்தலங்காரம்.

நெஞ்ச மதிகம் புனமுருக் கத்திர நீடுதெய்வ
வெஞ்ச லிலாப்பசு வோடு விரோத வியல்புபண்ணை
விஞ்சுநெற் போர்நிகழ் வொன்பான் பரியாய மேவிடையி
னஞ்சிவன் பாக நகுலாம் பிகையம்மை நண்ணிடுமே. (௫௫)

1. நெஞ்சம் ... ம (ந) ம்.	6. விரோதவியல்பு ... ப (கை) மை.
2. அதிகம் ... மி (கு) தி.	7. பண்ணை ... வ (ய) ல்.
3. புனமுருக்கு... ப(லா)சு.	8. நெற்போர் ... சு (ம்) மை.
4. அத்திரம் ... அ (ம்) பு.	9. நிகழ்வு ... அ(மை) தி.
5. தெய்வப்பசு... க (பி)லை.	"நகுலாம்பிகையம்மை".

இதுவுமது.

எண்சீரடிவிருத்தம்.

நெஞ்சுநடிப் போடுமைநா ளிகமென் றிந்த
நீணான்கு மொழியிடையுந் தானே யாகி
யெஞ்சியவை தாமுறையிற் சென்னி சேர்த்து
மெழுந்தருளி யுபதேச நிழற்கீழ்ச் செய்துங்
குஞ்சிடவன் றுரியீர்த்தும் விண்டு செய்த
துதிக்கிரங்கி யீந்துநின் றவனு ரென்னி
னஞ்சுதொழி லாநந்த தாண்ட வஞ்செய்
தருள்கடவுள் சீர்நகுலை யமர்வா னன்றே. (௫௬)

ஈடுஊரீ:

நெஞ்சு ... அ (க) ம்.	'அம்'-நீர், (சென்னி சேர்த்தது.)
நடிப்பு ... ஆ (ட) ல்.	'ஆல்'-கல்லால்,(நிழற்கீழ் உபதேசம் செய்தது.)
உமை ... க (வு) ரி.	'கரி'-யானை, (உரி ஈர்த்தது.)
நாளிகம்... வ (ள்) ளை.	'வளை'-சக்கரம், (விண்டுவுக்கு ஈந்தது.)

கடையெழுத்தலங்காரம்.
நேரிசைவெண்பா.

கள்ளுடனே பன்றிசங்கு கஞ்சனிவைக் கக்கரமூன்
றுள்ளசொல்லு ளிவ்விரண் டோர்ந்தெடுத்தாங்—குள்ளகடை
யெட்டெழுத்தில் வேதனரி யேத்துபிதா வின்பொருள்கண்
டிட்டுநகு லேச்சுரனை யெண். (௫௭)

கள்ளு ... { மற (வி). குந் (தி).   சங்கு ... { நந் (து). சுத் (தி).
பன்றி ... { மைம் (மா). கேழ (ல்).   கஞ்சன்... { விதா (தா). தந் (தை).

கடையெழுத்தெட்டும் "விதிமால்துதிதாதை" என்றாய் "வேதனரியேத்துபிதா" வின் பொருளாதல் காண்க.

இதுவுமது.
எண்சீரடிவிருத்தம்.

செந்நீர்கா டுகிழாள்பா டலத்திற் கேய்ந்த
செழியமொழி மூன்றனினீற் றக்க ரத்தாற்
றன்னேரி னகுலையிடை மேவு தெய்வச்
சங்கர னுந் தேவியுந்தோற் றிடந்தான் கண்டோ
முன்னீரெ ரக்கரத்தாற் கண்டோ மீசன்
முழங்குமணி வாசகர்க்காக் கொண்ட மூர்த்த
மன்னன்மார் பகத்துமையா டனத்தி ழைத்த
தவரிருவர் திருமேனி யளவு மாதோ. (௫௮)

செந்நீர் ...குரு (தி).
காடுகிழாள் ...வடு (கி). "திகிரி"... { மூங்கில் - சிவன் தோற்றிடம். மலை - உமை தோற்றிடம்.
பாடலம் ...பாதி (ரி).

'குரு' - சிவன் மாணிக்கவாசகர்க்காக் கொண்ட மூர்த்தம்.
'வடு' - சிவன் மார்பில் உமை தனத்தால் இழைத்தது.
'பாதி' - சிவன் உமை திருமேனி அளவு.

கோமூத்திரி.

அது, பசுவின் மூத்திர வடிவாகச் சமைக்கப்பட்ட ரேகையிலே எழுத்துகள் அமைத்துப் பாடுவது.

கலிவிருத்தம்.

நகுலை யாதி யடிமல ரோதவே
மிகுதி யாநு மவாகழி சாயுமே

தொகுதி யாகிய மாமய ரோடவே
தகுதி யான மகாகதி சாருமே. (ருகூ)

(பொ—ரை.) நகுலேச்சரத்துத் தலைவரது திருவடித் தாமரைகளைத் துதிக்க மிகுதியாகிய நுமது அவா பெரிதும் நீங்கும்; கூட்டமாகிய பெருமயல் நீங்கத் தகுதியாகிய மகாகதி (வந்து) சேரும்.

கூடசதுர்த்தம்.

அது, நான்காம் வரியிலுள்ள எழுத்துகள் மற்றைய மூன்று வரிகளிலும் ஆங்காங்கு மறைந்துநிற்கப் பாடுவது.

வேறு.

நீணலம் வாய்த்திட நின்மல மேவவ்
வேணுறு வாழ்க்கையி லேகுபு வாழ்வேந்
தாணுவை யீசனை மாமயல் சாரா
மாணகு லேசனை வாழ்த்திட வம்மே. (சுO)

அர்த்தகூடம்.

அது, பொருளை மறைத்துப் பாடுவது.

நேரிசைவெண்பா.

செற்றார்போ னோக்கிச் செருச்சிறுசொற் றானுரைத்துப்
பற்றாக மாலைதனிற் பற்றினளா—யற்றார்போ
லுற்றானை யாவி யுறவளித்தா ளோரணங்கு
கற்றார்சொல் கீரிமலைக் கண். (சுக)

(பொ—ரை.) கற்றோர் புகழும் கீரிமலைக்கண்ணே ஓர் பெண்ணானவள் இறந்தார் போல இருந்தானொருவனை (அகத்துப் பகையாதிருந்தும் புறத்துப்) பகைவர் போலப் பார்த்து, பின்னினிதாய் முன்னின்னாதாய வார்த்தைகளைப் பேசித், தான் (அணிந்திருந்த) மாலையைப் பற்றாகப் பிடித்து (அவனை) இறவாது காத்தனள். இதிற் காணும் குறிப்புகளால் அவள் அவனை மாலைக் காலத்திற் கூட நேர்ந்தமை அனுமானிக்கப்படுதலின், இது நுட்பவணி.

பதகூடம்.

அது, சொல்லை மறைத்துவைத்துப் பாடுவது.

அலம்பு திரைநகுலை யானைநினைந் தாற்கே
வலம்புகுத லாகும்மற் றென்பீர்—நிலம்புகலு

மன்னர் சுரர்போகி மாலயன்சீர் வாழ்வுகளு
மென்னு மதற்கென் றியம்பு. (௬௨)

இங்கு மறைந்துள்ள பதங்கள், 'கேவலம்' 'பீர்' என்பன. நகுலேசுரரை நினைந்தாற் பரகதி அடையலாம்; வேறென்ன பயம்! அரசர் தேவர் இந்திரன் பிரமா விட்டுணு முதலியோருடைய பதவிகளும் பரகதிக்கு எத்துணைத்தாமென்க.

ஆமந்திரிதகூடம்.

அது, விளியை மறைத்துவைத்துப் பாடுவது.

ஆவா நனிபலவு மாக்கினையே பாவமுனெஞ்
சேவான் கதியடையத் தேர்ந்தனையே—னீவான்மேற்
போயநகு லாசலஞ்சேர் புண்ணியனை யேத்துதிரை
பாயகடற் றீர்த்தம் படி. (௬௩)

இங்கு மறைந்துநிற்கும் விளி 'நெஞ்சே' என்பது. நெஞ்சே, ஆ! ஆ! பாவங்கள் பலவற்றையும் செய்துவிட்டனை; நீ பரகதி அடைய விரும்பினையேல், கீரிமலைக்குப் போ; அங்கே சிவனைத் துதி; அங்குள்ள கடற் றீர்த்தத்திலே ஸ்நானம்செய்.

எழுவாய் பயனிலை மறைப்பு.

கட்டளைக்கலிப்பா.

அந்த நன்முனி வோருறை பாழிக
ளாய வானகு லாசலப் பாங்கரிற்
சிந்து தெண்டிரைத் தீரநற் கேத்திரந்
தேடி யேதிரு மேனித ரித்துமே
யெந்தை யோடுநற் சத்தியம் வாழ்வினை
யீந்து வீற்றிருந் தாண்மக னல்லனோ
வந்து காத்திடு கென்றடி போற்றினோன்
மருவு கீரி முகத்தினன் வாழவே. (௬௪)

இதில், எழுவாய்-சத்தி; பயனிலை-வீற்றிருந்தாள். "நான் உமது புத்திரன் அல்லனோ! என்னை வந்து காத்திடுக" என்று பாதம் போற்றிய நகுலமுனிவர் உய்யும்பொருட்டு அவர்க்கு அழகிய வாழ்வினைக் கொடுத்துக் கீரிமலைப் பாங்கரிற் சமுத்திர தீரத்தே திருக்கோயிலின் கண்ணே திருமேனி தரித்துக்கொண்டு எமது பிதாவாகிய சிவபெருமான் சகிதராய் வீற்றிருந்தனர் உமாதேவியார்.

மாலைமாற்று.

அது, முதலிலே நின்று படித்துப் போனாலும் இறுதியிலே நின்று படித்து வந்தாலும் ஒரே செய்யுளாய் முடியுமாறு எழுத்துகளை அமைத்துப் பாடுவது.

குறள்வெண்பா.

காயாதி யாதிநீ காநாத வேதநா
காநீதி யாதியா கா. (௬௫)

ஆதி! வேத நாத நாகா! நீதியா! தியாகா! நீ காயாதி கா எனப் பிரித்துக் கூட்டிப் பொருள்கொள்க. வேத நாத நாகா - வேதத் தொனி (நிறைந்த கிரி) மலையையுடையவரே! காயாதி கா - கோபியாது காத்தருள்க.

இதுவுமது.

வஞ்சிவிருத்தம்.

வேக மாகமு னோடிவா
வான வாகன மேறுநா
நாறு மேனக வானவா
வாடி னேமுக மாகவே. (௬௬)

(இ—ள்.) ஆன் அ வாகனம் ஏறுநா - இடபமாகிய அந்த வாகனத்தில் ஏறுபவரே! நாறும் மேல் நக வானவா - காணப்படுகின்ற மேலாகிய (கிரி) மலையில் (எழுந்தருளிய) கடவுளே! வாடினேம் முகமாக - வாடினேமாகியஎம்மை நோக்கி, முன் வேகமாக ஓடிவா - எதிரே விரைவாக ஓடிவந்தருள்க.

எழுத்துவருத்தநம்.

அஃது, யாதேனும் ஓர்பொருளைத் தருகின்ற சொல்லொன்றை எடுத்துக்கொண்டு, அதுதானே வெவ்வேறு சொல்லாய் வெவ்வேறு பொருள் படுமாறு எழுத்துகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து வளர்ப்பது.

நேரிசைவெண்பா.

வேத னிழந்தபொருள் விண்டுமுன்னா ளுண்டபொரு
ளேதினகு லேசனையிங் கீந்தபொரு—ளோதி
னலைநதியொன் றீறற் றடைந்தெழுத்தொவ் வொன்றாந்
தலையுலகு மூங்கிலெனச் சாற்று. (௬௭)

இங்கே, ஒருநதியின் பெயராகிய கம்பை என்பதிலே, பிரமா இழந்தாகிய தலையெனப் பொருள்படும் 'கம்' என்பதை எடுத்து அதன்

மேல் 'ச' என்னும் எழுத்தினைச் சேர்க்க அது தானே விட்டுணு உண்டதாகிய உலகு எனப் பொருள்படும் 'சகம்' என வேறொரு சொல்லாயும், அதன்மேல் 'கீ' என்னும் எழுத்தினைச் சேர்க்கச் சிவன் தோன்றிய இடமாகிய மூங்கில் எனப் பொருள்படும் 'கீசகம்' என மற்றொரு சொல்லாயும் வருதல் காண்க.

இதுவுமது.

நம்மையெடுத் தோரெழுத்து நாட்டிமுனர்ச் சீவவஸ்து
தம்மையறி வேறென்று சார்த்தியெந்தஞ்—சும்மையதாய்க்
கூடுறவைப் பாரினென்று கூட்டிநகு லேசுரனை
நாடுவழி பாட்டையறி நன்கு. (௬௮)

நம ... எடுத்துக்கொண்டமொழி.
சநம ... சீவவஸ்து=பிராணி.
பாசநம ... உறவு.
உபாசநம ... வழிபாடு.

நாகபந்தம்.

அஃது, இரட்டை நாகபந்தமாயின் இரண்டு பாம்புகளும், அட்ட நாகபந்தமாயின் எட்டுப் பாம்புகளும், தம்முட் பின்னிப் புணர்ந்து விளையாடுவனபோலத் தோன்றுமாறு, முறைப்படி சித்திரிக்கப்பட்ட அறைகளிலே எழுத்துகளைத் தொகையிற் சுருங்கிப் பொதுவாக நிற்கும்படி அமைத்துப் பாடுவது.

இரட்டைநாகபந்தம்.

கலிவிருத்தம்.

ஆறு தாங்கு சடாத ராகமா
வீறு வீங்குறு வேத வாசக
தேறு நேசருட் டேங்கு வானவா
கூறு நீதக வானகு லேசனே. (௬௯)

(பொ—ரை.) (கங்கா) நதியைத் தாங்கிய சடையை உடையவரே! ஆகமங்களைத் தந்தருளினவரே! பெருமை மிக்க வேத வாக்கியங்களைத் திருவாய்மலர்ந்தருளியவரே! தெளிந்த அடியாரது உள்ளத்திலே நிறைந்த கடவுளே! பெருமை பொருந்திய நகுலேஸ்வரரே! (அடியேன்) தகுதியடையுமாறு தேவரீர் உபதேசித்தருள்க.

இச்செய்யுளை முறையானே சித்திரிக்கப்பட்ட பாம்பு இரண்டிலும் தனித்தனி தலைமுதல் வாலீறாக எழுதிவரச் செய்யுள் முடிவது

மன்றிப் பாம்புகள் பொருந்துமிடத்து எழுத்துகள் ஒத்திருத்தலும் பிறவுங்காண்க. எழுத்துகள் தொண்ணூறு; அறைகள் அறுபத்தெட்டு.

இதுவுமது.
நேரிசைவெண்பா.

1. நகுலைப் புரமவாவு நச்சுரகக் கச்சுத்
தகுவெண் ணிறவிடையாய் தாயாய்—மிகுமற்புப்
பூணணியு மாது புணரு மணவாளா
வேணுதவி யீக மதி. (௭0)

2. மிகுதி யுறுகுடம்பை விட்டுவியன் வீட்டுட்
புகுவெனவே மாநகுலைப் பூவை—மகரமேற்
றேயுமா மாலையே சூடுநீ மாதெய்வம்
பூணின் புரையீ புகல். (௭௧)

(பொ—ரை.) (1) விடம் பொருந்திய சர்ப்பக் கச்சையுடைய, தக்க வெள்ளிய நிறம்பொருந்திய இடபவாகனத்தையுடைய, நகுலேச்சரத்தை விரும்புகின்ற, சிவனே! (அகிலலோக) ஜநநியாகி மிக்க அன்பாகிய ஆபரணத்தை அணிகின்ற உமாதேவியார் புணரும் மணவாளரே! (அடியேற்கு) வலிமை ஈந்து புத்தியும் தந்தருள்க.

(2) பெருமைபொருந்திய நகுலேச்சரத்தில் (வீற்றிருக்கும் மொழியால்) நாகணவாயை ஒத்தவரே! பூந்தாது மேற்பரந்த அழகிய மாலையைச் சூடுகின்ற நீரே பெரிய தெய்வமாதலின், "அநேகமாய சரீரங்களை (எடுத்தலை) விட்டுப் பெருமையாய மோக்ஷத்தை அடைவாய்" என்று (அடியேற்கு) இனிமையாய வார்த்தைகளைத் திருவாய்மலர்ந்தருள்க; தஞ்சம் அருள்க.

ஒரு செய்யுளை ஒரு பாம்பிலும் மற்றச் செய்யுளை மற்றப் பாம்பிலும் எழுதி இருசெய்யுளிலுமுள்ள நூற்றுப்பதினெட்டெழுத்துகளும் (சில எழுத்துகள் பொதுமையாய் வருதலின்) தொகையிற் சுருங்கித் தொண்ணூற்றூறு எழுத்துகளாய் நிற்றலும் பிறவும் காண்க.

அஷ்டநாகபந்தம்.
நேரிசைவெண்பா.

நகுலா புரமே நமதுதுறை கோல
நகுலேச கோனெமது நாத—னகுலா
புரநாக மீனப் புணரியுமே லாநாங்
கரிலா னகறு மினி. (௭௨)

(பொ—ரை.) நகுலேச்சரமே நமது துறை; அழகிய நகுலேசப் பெருமானே நமது தலைவர்; நகுலேச்சரத்து மலையும் (அங்குள்ள) மற்சம் (நிறைந்த) கடலும் மேலானவை; (ஆதலின்) இனி நாம் குற்றத்தினின்றும் நீங்குவோம்.

இந்த ஒரு கவியைத்தானே தனித்தனி ஒவ்வொரு பாம்பிலும் எழுதி எழுத்துக்கள் தொகையிற் சுருங்குதலும் பிறவும் காண்க.

வினவுத்தரம்.

அது பலவகைப்படும். பின்னுற் காணும் பதின்மூன்று கவிகளும் வினவுத்தரக் கவிகள்.

வியஸ்தசமஸ்தசாதி.

அது, தனித்துநின்று உத்தரமான சொற்கடாமே ஒருங்கு கூடி நின்றும் உத்தரமாகுமாறு பாடுவது.

வியத்த சமத்தகவி மேவழகிற் கென்பேர்
நயத்தகையார் மாளிகைக்கென் னுமம்—பயத்திரைக்கிங்
கானபெய ரென்செம்மற் காம்பெயரென் கீரிமலைக்
கோன்பெயரென் சொல்க குறித்து. (௭௬)

உத்தரம்—நகுலமலைநாதன்.

1. அழகு ... ... ந.
2. மாளிகை ... ... குலம்.
3. திரை ... ... அலை.
4. செம்மல் ... ... நாதன்.
5. கீரிமலைக்கோன் ... நகுலமலைநாதன்.

ஓசச்சுவி.

அது, நீண்ட கவியில் வினவும் மிகச் சிறிய சொல்லில் விடையும் வரப் பாடுவது.

கட்டளைக்கலிப்பா.

வெய்ய செய்கைநி சாசரர் வேந்துமுன்
வேற்கை யேந்துவி சாகற் கடல்கெடஇத்
துய்ய தெண்டிரைக் கொண்டதெத் தொல்லுரு
தோன்று மண்டத் தொகைமுழு தீன்றவ
ளைய தோட்பிறந் தாதிபெண் ணனதா
ரல்ல தொள்ளணங் கோடுபுட் பேரெவை

செய்ய வொண்ணகு லேசமா தேவனின்
செல்வ நாயகி யானவள் யாவளே. (௭௪)

உத்தரம்—"மாதேவி."

1. சூரன் கடலிடைக் கொண்ட உரு ... ... மா.
2. உமை தோளிற் பிறந்து சிவன் மனை ஆனவள்... தேவி-காளி.

அல்லது { அணங்கின் பெயர் ... ... தே.
புள்ளின் பெயர் ... ... வி.

3. மாதேவன் நாயகி ... ... மாதேவி.

சகௌதுகசாதி.

அது, குறட் கவியில் வினவும் நீண்ட சொல்லில் விடையும் வரப் பாடுவது.

குறள்வெண்பா.

கூட்டுதலென் வல்லினமெய் கொள்ளா தகஞ்சிரங்க
ளீட்டுவிழைச் சென்னகுலே யேத்து. (௭௫)

உத்தரம்—"இடந்தலைப்படுத்தல்."

1. கூட்டுதல் ... இடந்தலைப்படுத்தல்.
2. அகம் ... இடம்.
3. சிரம் ... தலை.
4. கள் ... படு.
5. விழைச்சு ... தல்.

பிரச்சினோத்தரம்.

அது, வினா அமைந்த பாகத்திற்றுனே விடையும் அமைந்து மறைந்து கிடக்கப் பாடுவது.

நேரிசைவெண்பா.

வையம் பணியடியார் மாநகுலே யத்தருக்குச்
செய்யவிடை யென்னாந் திகழரவ—மையரவர்க்
கெப்படியாம் யாரவரை யேத்துவா ரிவ்வினாவிற்
செப்பிடுமெ வுத்தரமுந் தேர். (௭௬)

வையம் பணி அடியார் - உலகத்தார் வணங்கும் பாதங்களையுடையவராகிய.

உத்தரம்.

1. சிவனுக்கு விடை என்ன? ... வையம் (வாகனம்).
2. ,, அரவு ,, ... பணி (ஆபரணம்).
3. சிவனை எத்துவார் யார்? ... அடியார் (தொண்டர்).

கதிதாபநுதி.

அது, வேறு பொருளியைபினாலே வ[illegible]று உணர்த்தும் சொல்லிற் றானே விடையும் மறைந்து கிடந்து அரிதின் உணரப் பாடுவது.

காரியமுன் னேதுளது காணிகழ்ச்சி யோர்சொலென்னான்
சாரிரண்டாம் வேற்றுமைச்சொற் றானென்னை—சேரோரைய
வார்த்தையெவன் கிரிமலை வானவனை யேத்தியுரை
யார்த்தகதி தாபநுதி யாய். (௭௭)

உத்தரம்.

1. காரியத்தின் முன் உளது எது? ... ... எது (காரணம்).
2. ஓர் இகழ்ச்சி வார்த்தை என்? ... ... என்! (சீச்சீ!)
3. நான் என்பதின் உ-ம் வேற்றுமை என்னை? ... என்னை.
4. ஓர் ஐய மொழி எவன்? ... ... எவன்!

விடமசாதி.

அஃது, உத்தரத்திலே வேண்டும் எழுத்தை விலக்குதலாலே வேறு உத்தரம் வரப் பாடுவது.

நகுலே சுரர்மகிழு நாரிபரி சுத்தை
தகுபேரெ ணெண்டரங்கந் தானென்—றிகிரிபெயர்
யாதா மழகின்பே ரென்னகட ணுமமெவ
ஞேதாய் விடமமிதை யுய்த்து. (௭அ)

உத்தரம்—"அமலை."

1. பரிசுத்தை ... அமலை.
2. தரங்கம் ... அலை.
3. திகிரி ... மலை.
4. அழகு ... அம்.
5. கடல் ... அலை.

வர்ணேத்தரம்.

அது, தனித்தனி எழுத்தாகப் பிரிந்து உத்தரமாகப் பாடுவது.

ஒவ்வோ ரெழுத்தாலா யொண்ணகுலை வாழ்சிவனை
மைவா ணிறவரிக்காம் வண்மனையை—யவ்வானிற்
றெய்வமதைப் பக்கிதனைச் செப்புசொற்க டாமிசைந்தே
மைவிழியாள் பார்ப்பதிபேர் மற்று. (௭௯)

உத்தரம்—"உமாதேவி."

1. சிவன் ... ... உ.
2. அரிமனை (இலக்குமி) ... மா.
3. தெய்வம் ... ... தே.
4. பக்கி (பறவை) ... ... வி.
5. பார்ப்பதி ... ... உமாதேவி.

சிருங்கலாசாதி.

அஃது, உத்தரமாய் நின்ற ஒரு சொல்லின் இறுதி எழுத்துப் பின் வரும் உத்தரத்தின் முதல் எழுத்தாகவும், அதன் இறுதி எழுத்தே அடுத்த உத்தரத்தின் முதல் எழுத்தாகவும் வந்து இங்ஙனமே சங்கிலிபோலத் தொடராகப் பாடுவது.

வேதாவின் பேரென்னை வேண்டிவட்ட மாயோடற்
கேதாகும் பேர்திசைக்கங் கென்னபெயர்—மூதூரா
மாநகுலை யேத்தா மதிகெட்டாட் கென்னபெயர்
தூநிலவு சங்கிலியாய்ச் சொல். (அ0)

உத்தரம்—"பிரமாதிகை."

1. வேதா ... ... பிரமா.
2. வட்டமாயோடல் ... மாதி.
3. திசை ... ... திகை.
4. மதிகெட்டாள் ... ... பிரமாதிகை.

நாகபாசபேதம்.

அஃது, எழுத்துகள் இரு பக்கத்திலும் நாக பாசம் போலத் தழுவியும், யாதாயினும் கெட்டும், மாலை மாற்றாகியும், முறை முறையே உத்தரமாகுமாறு பாடுவது.

கட்டளைக்கலித்துறை.

பாரார் தொழுநகு லேசருக் கின்பு பயக்குமுனி
வாரார் மகதி முறுக்காணி நாமமென் வாழ்மனைக்குக்
காரார் திருமகட் காமாவுக் கெண்கணற் காம்பொனுக்குப்
பேர்தா மெவையசைச் சொல்லொன் றெதுதகப் பேசுகவே.

உத்தரம்—"மாடகமாடம்மா."

1. முறுக்காணி ... ... மாடகம்.
2. மனை (வீடு) ... ... மாடம்.
3. திருமகள் (இலக்குமி) ... ... மா.

4. ஆமா (காட்டுப்பசு) ... ... கடமா.
5. எண்கணன் (பிரமா) ... ... க.
6. பொன் ... ... மாடு.
7. ஒரு அசைச் சொல் ... ... அம்மா.

சௌத்திரசாதி.

அஃது, உத்தரமாய் நின்ற சொற்கள் யாவும் சேர்ந்து ஓர் இலக்கண சூத்திரமாய் வரப் பாடுவது.

நேரிசைவெண்பா.

நக்கர்நகு லேசரெனு நங்கடவுள் பேரொருப
சர்க்கமெவை நீர்சுரபி தம்பெயரென்—புக்ககடை
யற்றகும்பி யாதிங் கறிவுறுதொல் காப்பியத்தோர்
சிற்றுரிச்சொற் சூத்திரமென் செப்பு. (அஉ)

உத்தரம்—“ஐவியப்பாகும்.”

1. கடவுள் ... ... ஐ.
2. ஒரு உபசருக்கம் ... ... வி.
3. நீர் ... ... அப்பு.
4. சுரபி (பசு) ... ... ஆ.
5. கடையற்ற கும்பி ... ... கும்.
6. தொல்காப்பியத்து ஓர் உரிச்சொற் சூத்திரம் ... ... ‘ஐவியப்பாகும்’.

மத்தியவர்த்தமானுக்கரசாதி.

அது, சில எழுத்துகளை இடையிற் சேர்த்தலால் வேறு ஓர் உத்தரமாக வரப் பாடுவது.

கீரி முகமகல்வான் கேடிலலை வீசிமறி
வாரி யிடைப்படிந்த வண்முனியார்—தேருமன்பிற்
சாரவற்கு வேண்டுவரந் தந்தவனுர் நள்ளிடையி
லீரெழுத்துக் கூட்டி யிசை. (அரு)

உத்தரம்.

1. கீரி முகம் அகல வாரியிடைப் படிந்த முனி ... நகுலன்.
2. அம் முனிக்கு வரம் தந்தவன் ... ... நகுலாசலன்.

காகபாதசாதி.

அது, காகத்தின் பாதம் போல அமைக்கப்பட்ட சித்திர தளத்திலே எழுத்துகள் நின்று முறையே உத்தரமாகப் பாடுவது.

கட்டளைக்கலித்துறை.

பாருல குய்ந்து கடைத்தேறு மாறிடப் பாகமதி
ஞரியை வைத்து நகுலேச ரென்னநன் ஞமமுற்ருர்
சீரிய கண்ணுடைச் செய்யாட்கெ ஞமமத் தென்றிக்குவாச்
சார்விளி யென்னை நிறங்குறு மேனியுந் தாமெவையே. ()

உத்தரம்.

1. பெண்ணை இடப்பாகத்தே இருத்திச் சிவன் பெற்றபேர்...வாமதேவன்.
2. சீரிய கண்ணுடை (ச்செய்) யாள் ... ... வாமலோசனை.
3. தென்திசை யானையின் விளி ... ... வாமன!
4. நிறம் ... ... உரு.
5. குறுமேனி ... ... வாமனஉரு.

அட்டதளபதுமபந்தம்.

எட்டிதழ்த் தாமரை வடிவமாக வரையப்பட்ட சித்திரத்தின் பொகுட்டாகிய நடுவில் நின்ற எழுத்தே எட்டு விடைக்கும் முதல் எழுத்தாக வரப் பாடுவது.

குந்தந் திறல்கலை யானத்தி கச்சுக் குவலயமோ
டிந்தனங் கோழி விதிர்ப்பெனும் பேர்கட் கியல்பெயரெ
னந்தண் ணகுலேச் சுரர்புலி யூரெ னவரில்மெ
னெந்தை சொரூபமென் சொல்வாய் பதுமத் திலையவைத்தே.

உத்தரம்.

1. குந்தம் ... வியாதி.
2. திறல் ... விறல்.
3. கலையானத்தி... விமலை.
4. கச்சு ... விசிகை.
5. குவலயம் ... விபுலை.
6. இந்தனம் ... விறகு.
7. கோழி ... விட்டி.
8. விதிர்ப்பு. ... விதலை.

இவற்றின் இறுதி எழுத்துகளைக் கூட்டி வாசிக்கப் பின்னைய மூன்று விஞவுக்கும் விடையாகும்.

1. சிவனது புலியூர் ... தில்லை
2. ,, இல்லம் ... கைலை.
3. ,, சொரூபம்... குடிலை.

சொற்பிரேளிகை.

எண்சீரடி விருத்தம்.

வாரணமாய் முழங்கிடினும் யானை யன்று
வான்கிளர்நீர்த் தெனினுமொரு பற[illegible] யன்று

சீரியதாய் வரும்போங்கா லுடைய தன்று
செந்நாவா யுறினுமுண வுண்ப தன்று
மாரிபெயச் செய்திடினுந் தேவு மன்று
வண்மகர ராசியுறு மங்கு லன்று
தேருமெவர் தோய்ந்திடினும் வேசை யன்று
தென்னகுலை யூருளதென் செப்பு வீரே. (அசு)

உத்தரம்—"கடல்."

நீர்த்து ... 1. தன்மையை உடையது; 2. நீரை உடையது.
நாவாய் ... 1. நாவும் வாயும்; 2. மரக்கலம்.
மகரராசி ... 1. பன்னிரண்டு இராசியின் ஒன்று; 2. சுறுக் கூட்டம்.

பொருட்பிரேளிகை.

நேரிசைவெண்பா.

கோதினகு லேச்சரத்தே கொங்கைபற்றி வாய்ப்புகுத்திச்
சாதிவய தோடுபயஞ் சார்முறைநா—ணீதியின்றி
யெல்லினும்யார் நின்றாலு மெவ்வுறப்புந் தொட்டுநகைத்
தல்லசொலிக் கொஞ்சுவரே யார். (அஎ)

உத்தரம்—"குழந்தைகள்."

காதைகரப்பு.

அஃது, யாதேனும் ஒரு செய்யுட்கு உரிய எழுத்துகளெல்லாம் தேடி எடுக்கத்தக்கனவாய் ஆங்காங்கு வைத்து அச்செய்யுளை மறைத்துப் பாடுவது.

அவிர்புன் னகைவா யருள்விழிபொற் றாள்க
டவிர்வரிதா நீற்றணிசேர் தன்மைக்—கவிரிதணல்
வாய்ந்த வறலளகி வாழிநகு லாம்பிகையாள்
வேந்து மருந்து வினைக்கு. (அஅ)

(பொ—ரை.) புன்னகை ஒளிரும் வாயும் கிருபைக் கண்களும் பொற் பாதங்களும் நீங்காத திருநீற்றின் அணியும் அழகிய முருக்கலர் போலும் இதழும் நல்ல வாய்ந்த கருமணல் போலும் கூந்தலும் உடையவராகிய நகுலாம்பிகைக்கு நாயகரே! (நமது) வினைக்கு மருந்து (ஆவர்). தன்மை - அழகு.

இச்செய்யுளிலே, "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்—பிறவாழி நீந்த லரிது" என்னும் திருக்குறட் கவியின் எழுத்துகளெல்லாம் ஆங்காங்கு அமைந்திருத்தல் காண்க.

சக்கரபந்தம்.

அது, வண்டியின் சில்லுப் போல அமைக்கப்பட்ட சித்திரத்திலே சிற்சில உறுப்பின்கண்ணே எழுத்துகள் பொதுவாக நிற்கும்படி அமைத்துப் பாடுவது. அது நான்காரச் சக்கரம், ஆறாரச் சக்கரம், எட்டாரச் சக்கரம் என மூவகைப்படும். ஆரம் - அரம்=சில்லுக்கம்பு.

நான்காரச் சக்கரபந்தம்.

வஞ்சிவிருத்தம்.

காயு மாலழி மேதகா
காத மேமலை நீளகா
காள நீடுமை நாயகா
காய நாமன மாயுகா. (அகூ)

(பொ—ரை.) காய்கின்ற மயக்கத்தை அழிக்கின்ற மேதகைமையினை உடையவரே! காத (தூர) ம் நீண்ட (கிரி) மலையாகிய வீட்டை உடையவரே! கருமைநிறம் மிக்க உமாதேவிக்கு நாயகரே! (எனது) மனம் வாக்குக் காயங்களையும் ஆயுளையும் காத்தருளும்.

முப்பத்திரண்டு எழுத்துக்களை உடைய இச்செய்யுளை நான்காரச் சக்கரத்திலே அமைக்கும்போது ஒவ்வோர் அடியினதும் முதல் ஈற்று எழுத்துகள் குறட்டிலுள்ள ஒரே எழுத்தாதலும், அரத்திலுள்ள எழுத்துகள் இவ்வீர் முறை வாசிக்கப்படுதலும் பெற்று, எழுத்துகள் பதினேழாகச் சுருங்குதல் காண்க.

ஆறாரச்சக்கரபந்தம்.

கட்டளைக்கலித்துறை.

நன்ன ருணுங்கடுப் போநகப் பண்ணவ நாம்விளைத்த
பன்னகம் பூண்சிவ வீருக பத்தி பரிந்துதொண்டர்
தின்மை யகழ்ந்தோர் நிலைகதி யாக்கருட் சீலவுச்ச
நன்மைப் பழங்கதி யாய்ந்தவர் சார்நகு லேசவந்தே. (கூ0)

(பொ—ரை.) நன்கு உண்டருளிய நஞ்சாகிய உணவை உடைய கடவுளே! அச்சத்தை உண்டாக்கிய பாம்புகளை (ஆபரணமாக) அணியும் சிவனே! அடியார்க்கு வரும் தீமைகளை விரும்பிக் களைந்து (அவர்களுக்கு) ஒப்பில்லாத நிலைத்த கதியை ஆக்குகின்ற தயா சீலரே! உயர்ச்சியாகிய நன்மையையுடைய தொல் கதியை ஆராய்ந்தவர் (கதியெனச்)சாருகின்ற நகுலேச்சுரரே! வந்து (தமியேற்குப்) பத்தி தந்தருள்க.

தொண்ணூற்றுமூன்று எழுத்துகளை உடைய இச்செய்யுளை ஆறு ரச் சக்கரத்திலே அமைக்கும்போது எழுத்துகள் எண்பத்தைந்தாகச் சுருங்குதலும், குறட்டிலே "நகுலைப்பதி" என்பது தோன்றுதலும் பிறவும் காண்க.

எட்டாரச்சக்கரபந்தம்.

நிலைமண்டிலஆசிரியப்பா.

நழுவகல் காஞ்சி கழுமலம் வடகூர்
பழமலை யாதிய வகமுறச் சிறப்பாய்
நணுகருட் பரனே கதலிகை யார்த்தந
முகில்வரி கெழுமு கல்லுயர் மதிலார்
நகுலைப் பதிவதி நம்பெரு முதல்வர்
தகுமெய்ப் பதநடச் சார்பி னரே. (கூக)

காஞ்சி முதலிய ஸ்தலங்களிலே எழுந்தருளியிருக்கும் தயா பரரே, நமது நகுலேச்சரத்துத் தலைவராகிய தாண்டவ பாதர் என்க. நழுவு-வழுவுதல். கதலிகை - துகிற்கொடி. வரி - நிரை. கெழுமு - பொருந்திய.

நூறு எழுத்துகளை உடைய இச்செய்யுளை எட்டாரச் சக்கரத்தில் முறையே அமைக்கும்போது, எழுத்துகள் எண்பத்தொன்பதாய்த் தொகையிற் சுருங்குமாறும், குறட்டிலே "சிவனே முழுமுதல்" என்னும் வாக்கியம் தோன்றுமாறும் பிறவும் உணர்க.

சுழிகுளம்.

அஃது, எவ்வெட்டெழுத்துக் கொண்ட நான்கு அடியாய் மேல் நின்று கீழ் இழிந்தும், கீழ்நின்று மேல் எறியும் புறஞ்சென்று உள்முடியப் படிக்கத்தக்கதாகப் பாடுவது.

வஞ்சித்துறை.

தகுநகு லேசுரங்
குலவிவ யச்சிர
நவிறல முறைச்சு
குவலயம் முயலே. (கூஉ)

(பொ—ரை.) தகுந்த நகுலேச்சரம் என்னும், விளங்கி வலிமை பொருந்திய பிர[illegible]ன (தல) மாகச் சொல்லப்படும் தலத்தின் முன்னர் உலகம் உய்தல[illegible]ற்று.

சருப்பதோபத்திரபந்தம்.

அது, நான்கு புறத்தும் வாயில்களை உடையதாய் நினைத்த வழியாற் செல்லத்தக்கதாய்ச் சமைக்கப்படும் வீடுபோல, எப்பக்கத்திலே தொடங்கிப் படித்துச் சென்றாலும் அச்செய்யுளே ஆகும்படி (எவ்வெட்டெழுத்து உடைய நான்கு அடிகளை உடையதாய்) அறுபத்துநான்கு அறைகளிலே முதல் அறை தொடங்கி ஒரு முறையும் இறுதி அறை தொடங்கி ஒரு முறையுமாக இருமுறை எழுதி இயையுமாறு பாடுவது.

கலிவிருத்தம்.

தேவா நாதா தாநா வாதே
வாரா தேதா தாதே ராவா
நாதே னாகா கானா தேநா
தாதா காயா யாகா தாதா. (௯௩)

(இ—ள்.) தேவா - பிரகாசம் உடையவரே! நாதா - தலைவரே! தாநா - வலிமையினை உடையவரே! தாதா - பிதாவே! வாநா - ஆகாயமானவரே! தேன் நாகா - தேன் (கூண்டுகள் தூங்கும் கிரி) மலையை உடையவரே! கானா - கீதப் பிரியரே! தே - தெய்வமே! காயா - திருமேனியை உடையவரே! யாகா - யாகங்கட்கு உரியவரே! தாதா-கொடையாளரே! வாது வாராதே - வாது வாராதபடி, தேரா - தேர்ந்து, நா தா தா - நா வன்மை தந்தருள்க.

அக்கரசுதகம்.

அது, முழுதாய் நின்று ஒரு பொருள் பயந்தும், ஒவ்வோர் எழுத்தாக நீக்க வெவ்வேறு மொழியாய் வெவ்வேறு பொருள் பயந்தும் நிற்கும் ஒரு மொழியை எடுத்துப் பொருள்கள் காட்டிப் பாடுவது.

தரவுகோச்சகக்கலிப்பா.

மாலகல வெங்நாளு மாநகுலை யேத்துதிரு
மாலுலகு கொம்பேந்த மன்னுமவ தாரநெடு
மாலெனுமம் மோகினிமேன் மாலவுணர் கொண்டதயன்
மாலகலக் கிள்ளியதும் வராகம்ரா கங்கமெனே. (௯௪)

1. பூமியைக் கொம்பால் ஏந்திய மால் பிறப்பு ... பன்றி = வராகம்.
2. மோகினிமேல் அவுணர் கொண்டது ... ஆசை = ராகம்.
3. பிரமாவின் மால் அகலக் கிள்ளியது ... தலை = கம்.

இதுவுமது.
கலிவிருத்தம்.

மாதுநகு லாம்பிகை மணாளனரு ளாலே
யாதவனெ னுழிகொ டளந்துவிடு நாளு
மோதுபெரு மாட்சியு மொடுங்கிடு பிறப்பும்
வாதகல வோதுதி வசம்வசஞ்ச மென்றே. (௬௫)

1. நாள் ... திவசம்.
2. ஆட்சி ... வசம்.
3. பிறப்பு ... சம்.

நிரோட்டம்.

அஃது, இதழ் முயற்சியாற் பிறப்பனவாகிய உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ என்னும் எழுத்துகள் வாராமற் பாடுவது.

நேரிசைவெண்பா.

சாரறநீள் சத்திரங்க டண்ணியசா ரற்றிகிரி
நீர்நிறைநற் காரளக்கர் நேயநலச்—சீரடியார்
தண்டே னிறையலர்க்கா சால்கீரி நாகநகர்
கண்டாரே நற்கதியர் காண். (௬௬)

ஒற்றுப்பெயர்த்தல்.

அஃது, ஒருமொழியும் தொடர்மொழியுமாய் நின்று கருதிய பொருளன்றி வேறு பொருளும் பயக்கத்தக்கதாகப் பாடுவது.

கட்டளைக்கலித்துறை.

நிலமேற் சிறந்தது வானத்து முள்ளது நீருடைசூழ்
தலமேற் றுடக்கத்து முள்ளதெம் மீசன் றருதகைத்தா
னிலமேற் பெரியவர் யாகத்து மேய்வது நீணகுலைத்
தலமேற் பொழிந்திடு மாரிய மாமெனச் சாற்றுதியே. (௬௭)

இங்கே, 'பொழிந்திடு மாரியம்' என்பது, பொழிந்திடும் சம்ஸ்கிருதம் எனவும், பொழிந்திடு முகில் நீர் எனவும் பொருள் பட்டு ஒருமொழியும் தொடர்மொழியுமாய்க் கருதிய பொருளன்றி வேறு பொருளும் பயத்தல் காண்க. ஆரியம் - சம்ஸ்கிருதம். மாரி-முகில், மேகம். அம்-நீர்.

மாத்திரைச்சுருக்கம்.

அஃது, யாதேனும் ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல்லின்கண் உள்ள எழுத்தின் மாத்திரையைச் சுருக்குதலால், அச்சொல் வேறு சொல்லாகி வேறு பொருள் பயக்கும்படி பாடுவது.

நேரிசைவெண்பா.

தீர்வைதனி லோர்மாத் திரைகுறைய வெற்புவெற்பிற்
சாரளபொன் றஃகுமெனிற் றுனுகிரா—நீர்நகுலை
சேர்கருட னென்றருகிற் சேந்தனின்னு மொன்றுகெடிற்
சார்புதரு பட்டினமாஞ் சாற்று. (கூஅ)

1. தீர்வை ... கிரி, இதில் ஒருமாத்திரை குறைய, கிரி (வெற்பு).
2. வெற்பு ... நாகம், ,, ,, ,, நகம் (உகிர்).
3. கருடன் ... நாகாரி, ,, ,, ,, நகாரி(சேந்தன்).
4. நகாரி, ,, ,, ,, நகரி (பட்டினம்).

மாத்திரைவருத்தநம்.

அஃது, யாதேனும் ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல்லின்கண் உள்ள எழுத்திற்கு மாத்திரையைக் கூட்டுதலால் அச்சொல் வேறொரு சொல்லாகி வேறு பொருள் பயக்கும்படி பாடுவது.

தரவுகோச்சகக்கலிப்பா.

மாத்திரையொன் றுறுமலையே வண்ணகுலை மேவுமரன்
மாத்திரையொன் றுறுமனத்தின் மன்னியசீர்ப் பூஷணமா
மாத்திரையொன் றுறுகறுப்பே மங்கலமாய்ச் சூடுகின்ற
மாத்திரையொன் றுறுநகமா மதிக்கலைநூல் வல்லுநரே. ()

1. மலை ... நகம், இஃது ஒருமாத்திரை கூட, நாகம் (பாம்பே),
2. மனம் ... அகம், ,, ,, ,, ஆகம் (மார்பில்).
3. கறுப்பு... தமம், ,, ,, ,, தாமம் (கொன்றையே),
4. நகம் ... மலை, ,, ,, ,, மாலை (மாலையாம்).

முரசபந்தம்.

அது, நான்கடி உடையதாய் மேல் இரண்டு [அடி]களும் தம்முட் கோமூத்திரி ஆகவும், கீழ் இரண்டு அடியும் தம்முட் கோமூத்திரி ஆகவும் சிறு வார் போக்கி, முதல் அடி மற்றை மூன்று அடிகளிலும் கீழு ற்று மீண்டு மேலே போய்க் கீழே இறங்கி முடியவும், இவ்வாறே இறுதி

அடியும் மேலே போய்க் கீழே இறங்கி மேலே போய் முடியவும் தக்க தாகப் பெருவார் போக்கி எழுத்துகள் அமைத்துப் பாடுவது.

கலிவிருத்தம்.

ஆழி யோதை யுறைநகு லாநகர்
பாழி யோதை யுறைநகு லாநகர்
வாழி யோதை யுறைநகு லாநகர்
தாழி யோதை யுறைநகு லாநகர். (கOO)

(இ—ள்.) பாழி ஓதை உறை நகுல அநகர் ஓது ஐ உறை நகுல அநகர் - பாழியைக் கொண்ட மலையில் வசித்த நகுல முனிவராற் துதிக்கப்பட்ட அழகிய பொருளாகிய நகுலேஸ்வரரது, தாழி உறை ஓதை ந குல அ நகர்-பரணி (மண்டலம் வரையும் உயர்ந்த) நீளத்தை உடைய மதில் பொருந்திய சிறந்த மேன்மையான அந்த ஸ்தலமே, உறை ஓதை ஆழி நகுலாநகர் - நீர்த்துளியையும் பேரொலியையும் கொண்ட கடல் (புடை சூழ்ந்த) நகுலாபுரமாம். வாழி - அசைச் சொல்.

திரிபாகி.

அது, மூன்று எழுத்துகளைச் சேர்க்க ஒரு மொழியாகியும், அதன் கண் உள்ள முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்க்க மற்றொரு மொழியாகியும், இடை எழுத்தையும் கடை எழுத்தையும் சேர்க்கப் பின்னொரு மொழியாகியும் வருவது.

நேரிசைவெண்பா.

மூன்றக் கரமெம் முதல்விபெயர் முன்னிறுதி
தோன்றக் கரம்விற்றல் சூழிடையீ—மூன்றிங்
கமர்பிறங்க லென்ப வவைநகுலை மேவும்
விமலை விலைமலையாய் விள். (கOக)

'மூன்று அக்கரம் எம் முதல்வி பெயர்' என்றது, மலரகிதை எனப் பொருள்படும் விமலை என்னும் சொல்லினை. அதன்கணுள்ள முதலாம் மூன்றும் எழுத்துகள் சேர்ந்து 'விலை' என்னும் சொல்லாய் விற்றல் எனப் பொருள் படும். இரண்டாம் மூன்றும் எழுத்துகள் சேர்ந்து 'மலை' என்னும் சொல்லாய்ப் பிறங்கல் எனப் பொருள்படும்.

திரிபங்கி.

அஃது, யாதொன்றும் ஒரு செய்யுளாய் நின்றே ஒருபொருள் பயப்ப தன்றி, அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறு பொருள் பயக்கத்தக்கதாகவும் பாடுவது.

கட்டளைக்கலித்துறை.

தந்தையென் பேனன்னை தானுமென் பேன்சற் குருவுமென்பேன்
சிந்தையன் பாய்நின்னை நாடிநிற் பேனற் றிருநகுலை
வந்துறச் சீர்மன்னு வாழ்வளிப் பாய்மற் றருணிறையத்
தந்திருப் பாய்வன்னி சேர்கரத் தாய்தற் பரமுதலே. (௧0௨)

இச்செய்யுள் மூன்று வஞ்சித்துறை யாமாறு அடியிற் காண்க:—

1. தந்தை யென்பேன்
சிந்தை யன்பாய்
வந்து றச்சீர்
தந்தி ருப்பாய்

2. அன்னை தா னுமென்பேன்
நின்னை நா டிநிற்பேன்
மன் னுவாழ் வளிப்பாய்
வன்னிசேர் கரத்தாய்.

3. சற்குரு வுமென்பேன்
நற்றிரு நகுலை
மற்றரு ணிறையத்
தற்பர முதலே.

இதுவுமது.

நேரிசைவெண்பா.

கங்கரா பன்னகக் கச்சார் வியனிடையாய்
பங்கதனின் மின்னாள் பயில்வடிவா—வெங்கயிலை
மன்னா வியனகுலை வானவா விங்கஞ்ச
லென்னா யியைபயனு மீ. (௧0௩)

இவ்வெண்பாவும்,

பன்னகக் கச்சார் வியனிடையாய் பங்கதனின்
மின்னாள் பயில்வடிவா வெங்கயிலை—மன்னா
வியனகுலை வானவா விங்கஞ்ச லென்னா
யியைபயனு மீகங்க ரா, என வேறொரு வெண்பாவும்,

பயனுமீ கங்கரா பன்னகக் கச்சார்
வியனிடையாய் பங்கதனின் மின்னாள்—பயில்வடிவா

வெங்கயிலை மன்னு வியனகுலை வானவா
விங்கஞ்ச லென்னு யிமை, என மற்றொரு வெண்பாவுமாய்த் திரிபங்கி ஆயிற்று.

துவிபங்கி.

பத்திதா புத்திதா பாங்காய்ப் பொலியுமியற்
சித்திதா முத்திதா சீர்நகுலை—முத்தநகை
யுத்தமியாள் பங்கா வுயர்கயிலைப் பண்ணவா
பத்தியுளார் தங்கோ பரா. (௧௦௪)

இவ்வெண்பா,

புத்திதா பாங்காய்ப் பொலியுமியற் சித்திதா
முத்திதா சீர்நகுலை முத்தநகை—யுத்தமியாள்
பங்கா வுயர்கயிலைப் பண்ணவா பத்தியுளார்
தங்கோ பராபத்தி தா, என வேறொரு வெண்பாவாய்ப் படித்தற்கு இயைந்து துவிபங்கி ஆனமை காண்க.

பிறிதுபடுபாட்டு.

அஃது, அடி தொடைகளை வேறுபடுத்தலால் முன்னைய நிலை மாறி வேறொரு செய்யுள் ஆகும்படி பாடுவது.

கட்டளைக்கலித்துறை.

அரிபிர மேந்திர ரன்புட னேத்து மணிநகுலைப்
புரியமர் வான்கங்கை பொங்கிளந் திங்கள் பொலிசடையான்
விரிமறை யேயுரு வாய்வரு வான்றன் மிளிரடியைப்
பரிவுட னெண்ணுநர் பாறுப் பரகதிப் பாங்கரன்றே. (௧௦௫)

இக்கட்டளைக்கலித்துறை,

அரிபிர மேந்திர ரன்புட னேத்து
மணிநகுலைப்புரி யமர்வான் கங்கை
பொங்கிளந் திங்கள் பொலிசடை யான்விரி
மறையே யுருவாய் வருவான் றன்மிளி
ரடியைப் பரிவுட னெண்ணுநர்
பா[illegible] பரகதிப் பாங்க ரன்றே, என ஓர் நேரிசை யாசிரியப்பா ஆவதும் காண்க.

இதுவுமது.

தாங்கி யெனைக்காத்த றப்பாது நின்பாரந் தாங்கிலையே
னீங்கிச் சரணென்று பாங்காகி யாரை நிலைக்களமா
யாங்குப் புகல்செய்வ னேர்கொள் விடையா யிசைநகுலைப்
பூங்கமழ் சோலை புடையார் சினகரப் புங்கவனே. (கO௬)

இக்கட்டளைக்கலித்துறையின் மூன்றும் அடியில் உள்ள "இசை" என்பது ஈறாக வாசிக்க,

தாங்கி யெனைக்காத்த றப்பாது நின்பாரந்
தாங்கிலையே னீங்கிச் சரணென்று—பாங்காகி
யாரை நிலைக்களமா யாங்குப் புகல்செய்வ
னேர்கொள் விடையா யிசை, என ஓர் நேரிசைவெண்பா

ஆவது காண்க.

சதுரங்கபந்தம்.

அது, நிரைக்கு எவ்வெட்டாக எட்டு நிரை கொண்ட அறுபத்து நான்கு அறைகளிலே, நான்கு பக்கத்து ஈற்று நிரைகளிலும் நான்கும் அடி தோன்ற, எழுத்துகள் பொதுவின்றி அமையப் பாடுவது.

வெண்பா.

நீதா சதாபயனே நீபலர்க்குஞ் சாலமயற்
றீதார் மனமகற்றச் சீர்நகுலை—யேகலாற்கொன்
னீடார் மிடற்றகலா நீலா கமலபதா
நீதா பலமகலா நீ. (கO௭)

(இ—ள்.) கொன் நீடு ஆர் மிடற்று அகலா நீலா - பெருமை நீடுதல் பொருந்திய கண்டத்தினிடத்தே நீங்காத நஞ்சக் கறையை உடையவரே! கமலபதா - தாமரைமலர் போன்ற பாதங்களை உடையவரே! நீதா - நீதியை உடையவரே! நீ பலர்க்கும் சால மயல் தீது ஆர் மனம் அகற்றச் சீர் நகுலை ஏகலால் - தேவரீர் பலர்க்கும் (அவர்களுடைய) மனத்திற் பொருந்திய மயக்கமாகிய தீமையை மிகவும் நீக்கும்பொருட்டுச் சிறப்பாகிய நகுலேச்சரத்தின்கண் எழுந்தருளுதலால், பலம் அகலா நீ-பேறு நீங்காத தேவரீரே! நீ சதா பயனே தா - தேவரீர் எப்பொழுதும் பேற்றினைத் தந்தருள்க.

வேலாயுதபந்தம். (மாலைமாற்றுமாம்.)

அது, வேலாயுதம் போல அமைக்கப்பட்ட சித்திரத்திலே, காம்பின் அடி தொடங்கி வாசித்துப் போய்ப், போயவழியே மீண்டும் வாசித்துத் தொடங்கிய இடத்திற்கு வரச் செய்யுளும் முடியத்தக்கதாய் எழுத்துகள் அமைத்துப் பாடுவது. அப்படி வாசிக்குங்கால், காம்பும் இலையும் பொருந்துமிடத் தெழுத்து ஆறு முறையும், நுதியெழுத்து நான்கு முறையும் மற்றவை இவ்வீர் முறையும் வாசிக்கப்பட்டு நிற்கும் என்றறிக.

வஞ்சிவிருத்தம்.

மாக லாநய னுகிவா
வான மாகக னுகவா
வாக னுசக மானவா
வாகி னுயந லாகமா. (௧0அ)

(இ—ள்.) வானம் ஆகு அகல் நாக - மழை உண்டாதற்குக் காரணமாகிய அகன்ற (கிரி) மலையை உடையவரே! ஆ வாகன - இடபவாகனத்தை உடையவரே! ககம் ஆனவா - (சிம்புட்) பறவை ஆனவரே! வாகின் ஆய நல் ஆகமா - அழகோடு பொருந்திய நல்ல ஆகமங்களை உடையவரே! மாகலா நயன் ஆகி வா - பெருமை பொருந்திய கல்விப் பயனாய் வந்தருள்க.

முப்பத்திரண்டு எழுத்துகளை உடைய இச்செய்யுளை வேலாயுத சித்திரத்திலே அமைக்கும் போது எழுத்துகள் பதின்மூன்றாகத் தொகையிற் சுருங்குதல் காண்க.

இரதபந்தம்.

அது, தேர்போலச் சமைக்கப்பட்ட சித்திரத்திலே, முதல் மூன்றடி எழுத்துகளையும் நான்காமடி முதல் எழுத்தையும் அமைக்க, நான்காமடி எழுத்துகள் நடு நிரையிலே ஒழுங்கு அமைந்திருக்கத்தக்கதாய்ப் பாடுவது.

நேரிசைவெண்பா.

கூறுதனிற் பார்ப்பதியாய்க் கோணை விடையூர்வா
னேறுவிய ஞர்நகுலக் கேந்தன்முத்திப்—பேறுதருந்
தாதா பா[illegible]ருவித் தையல்சிர மேவைத்தான்
பாதார விந்தவிணை பற்று. (௧0௯)

(க—ரை.) உமாதேவி பாகராய் இடபத்தைச் செலுத்துபவரும், நகுலேச்சரத் தலைவரும், முத்திப்பேறு தரும் பிதாவும், கங்கையைச் சிரசிலே தரித்தவரும் ஆகிய சிவபெருமானது பாதம் இரண்டுமே (நமக்குப்) புகலிடம்.

இச்செய்யுளின் முதல் மூன்றடி எழுத்துகளாலும் நான்காமடி முதல் எழுத்தாலும் அறைகள் எல்லாம் நிரம்புதலும், நான்காமடி எழுத்துகள் இரதத்தின் முடி தொடங்கி அடிவரையும் உள்ள நடுநிரை எழுத்துகளாய் விளங்குதலும், ஆதலின் எழுத்துகள் எழுபத்துமூன்றும் அறுபத்துமூன்றாகத் தொகையிற் சுருங்குதலும் காண்க.

பதுமபந்தம்.

அது, முறையே எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு என்னும் இதழ்களை உடைய மூன்றடுக்குத் தாமரைமலர் போல இயற்றப்பட்ட சித்திரத்திலே பொகுட்டில் உள்ள எழுத்து எண்முறையும் மூன்றடுக்கிலும் உள்ள முதல் எழுத்துகள் இவ்விர் முறையும் வாசிக்கப்பட்டுப் பொதுவமையப் பாடுவது.

வாழி.

நேரிசைவெண்பா.

வாழிசெழி யூழிதெழி யாழிகொழி யாழிவழி
வாழிநகு லாசலஞ்சீர் மங்கையரன்—வாழியே
வாழிநகு லேச்சரந்தான் வாழிசைவம் வாழிதொண்டர்
வாழிபுயல் வாழிபுவி யே. (கக0)

(க—ரை.) நகுலேச்சரத்துக் கடலும், நகுலமலையும், நகுலாம்பிகையும், நகுலேஸ்வரரும், நகுலேச்சரமும் சைவசமயமும், தொண்டரும், புயலும், பூமியும் நீடூழி வாழுக.

செழி ஊழி - செழித்து ஊழிகாலத்துக்கு. தெழி ஆழி-சப்திக்கின்றகடல். கொழி ஆழிவழி - (திரைகள் முத்து முதலியவற்றைக்) கொழிக்கின்ற கடற்கரையின்கண். ஆழி - கடற்கரை. வழி - ஏழனுருபு. இச்செய்யுளைப் பதுமத்திலே அமைக்கும்போது [illegible]ன் எழுத்துகள் அறுபத்தேழும் ஐம்பத்தேழாய்ச் சுருங்குதல் காண்க.

இதுவுமது.

தேகசுக மாகவக யூகமிக வாகடைக
தேகமிதி லிஷ்டசித்தி தீர்க்காயுள்—போகம்
வரவிலங்கைப் பல்பதிவு வண்டலைவற் கீதை
யருளோ டுபசரிப்போற் காம். (கககக)

இலங்கைப் பல் பதிவு வண் தலைவரும், ஈதை அருளோடு உபசரிப்பவரும் ஆகிய அவருக்கு, தேகசுகம் ஆக; அகயூகம் மிக; வாகு அடைக; தேசமிதில் இஷ்டசித்தி, தீர்க்காயுள், போகம் வர என முடிக்க.

நகுலேச்சர விநோத விசித்திர கவிப் பூங்கோத்து
முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

நகுலேச ஸ்தோத்திரம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

நீர்க்கடலும் வான்மலையு நீண்டதிருக் கோவில்களும்
பார்க்கப்பார்க் கக்கவரும் பான்மையவாய்ச்—சீர்க்கிடமாய்த்
துன்னுநகு லப்பெருமான் றேத்திரநான் பாடவைங்கை
முன்னவனை யேத்திடுவேன் முன்.

கலிநிலைத்துறை.

திருவும் வாணியுங் கைப்பணி தினந்தின மியற்றி
மருவ வாணகு லாம்பிகா பதிநினை வணங்கிப்
பரவு மேழையேன் வாசகம் பரிவுட னீகேட்
டருளு மாறிலை யோதுய ரகற்றினி யரனே. (க)

பொன்னுந் தோற்றுமின் வேணியாய் பொலிநிறஞ் செக்க
ரென்ன மேவினேய் மழவிடை யேறுசே வகனே
மின்னை நேரிடை யாணகு லாம்பிகை விளங்கி
மன்னும் பாகநின் றிருவடி மலர்க்கடைக் கலமே. (உ)

பாவம் புண்ணியம் பதுக்கநற் கல்வியும் பரிவின்
மேவும் புண்ணியம் புரிதரச் செல்வமும் விழைந்தே
னுவி நின்பத மடைந்திடப் பக்தியு மருள்சேர்
தேவ ஞானமும் வேண்டினே னகுலையிற் சிவனே. (ங)

வைய மேற்பிறந் திறந்துழல் வாழ்வினின் மயங்கி
நைய வோவெனை விடுத்தனை நகுலையிற் பரனே

யைய யோகமிங் கியற்றிநின் னடியிணை மலராஞ்
செய்ய நீழலில் வாழ்வதெக் காலமோ சிவனே. (௪)

துங்க மங்கல மதங்கநன் றுந்துபி துவன்றி
யங்க ணெங்கணு முழங்கிட வம்பலத் தணைந்தே
பொங்கு மைந்தொழிற் றண்டவ நாடோறும் புரிவோ
யங்க ணன்னது லேசநின் சரணெனக் கரணே. (௫)

தேவ தேவசிற் சபேசபொற் சேண்டொழு நதலைக்
காவ லோயுமா பதீயெரிக் கரவுரி யுடையா
யாவ லாற்றெழு வோர்க்கருள் சகாயபே ரன்பிற்
பாவ லோர்புகழ் மாலையாய் பரசிவ நமவே. (௬)

சோம சேகர வங்கிநேத் திரதுண ரிதழித்
தாம வீசகங் காதர தயாளுதண் ணதலை
வாம நாயகி சமேதகார் மணிக்கள மலர்க்கோற்
காம னுநுயிர்க் கந்தக கனிந்தரு ளெனக்கே. (௭)

நாக பூஷண திரிபுராந் தகநது லேச
போக வாசவ னயனரி புங்கவ ரேத்தத்
தாக சோகநீத் தருள்புரி சங்கர தணியா
வேக மாயநு டுணையேதும் வேறெனக் கிலையே. (௮)

கால காலவெண் கபாலிமா தேவழக் கண்ண
சூல பாணிய வருட்கண சுடலையி னடிப்போய்
சீல மேவிய நதலையிற் றிகம்பர சிறியேன்
ஞால மேலுய நலம்பல நிறைக்துக நயந்தே. (௯)

போற்றி வானது லேச்சர மேவிய புனிதா
போற்றி சாம்பவி தோய்ந்திடும் புயாசலப் பகவா
போற்றி சாருமும் மலமறுத் தாள்பதிப் பொருளே
போற்றி போற்றிநின் றிருவடி யாமெழிற் புணையே. (௧௦)

சம்பூரணம்.

30-ம் 31-ம் பக்கம்

கோமூத்திரிகாபந்தம்.



இரட்டைநாகபந்தம்.



35-ம் பக்கம்

இரட்டைநாகபந்தம்.



அஷ்டநாகபந்தம்.



39-ம் பக்கம்

நாகபாசபந்தம்.

	மா	
மா	ட	க
	ம்	

41-ம் பக்கம்

காகபாதபந்தம்.



41-ம் பக்கம்

அட்டதளபதுமபந்தம்.



43-ம் பக்கம்

நான்காரச்சக்கரபந்தம்.



43-ம் பக்கம்

ஆருரச்சக்கரபந்தம்.



44-ம் பக்கம்

எட்டாரச்சக்கரபந்தம்.



44-ம் பக்கம்

சுழிகுளபந்தம்.

த	கு	ந	கு	லே	சு	ர	ங்
கு	ல	வி	வ	ய	ச்	சி	ர
ந	வி	ற	ல	மு	ஞ	ச்	சு
கு	வ	ல	ய	ம்	மு	ய	லே

45-ம் பக்கம்

சருப்பதோபத்திரபந்தம்.

தே	வா	நா	தா	தா	நா	வா	தே
வா	ரா	தே	தா	தா	தே	ரா	வா
நா	தே	ஹ	கா	கா	ஹ	தே	நா
தா	தா	கா	யா	யா	கா	தா	தா
தா	தா	கா	யா	யா	[illegible]	தா	தா
நா	தே	ஹ	கா	கா	[illegible]	தே	நா
வா	ரா	தே	தா	தா	[illegible]	ரா	வா
தே	வா	நா	தா	தா	[illegible]	வா	தே

48- பக்கம்

முரசபந்தம்.



51-ம் பக்கம்

சதுரங்கபந்தம்.

நீ	தா	ப	ல	ம	க	லா	நீ
தா	ச	நீ	ர்	ன	ற்	க	லா
ப	யு	னே	க்	ம	ற்	ற	க
ல	சா	ஞ்	கு	ர்	ச்	ற்	ம
ம	ய	ற்	றீ	தா	சீ	ட	[illegible]
க	யே	லை	கு	ந	ர்	[illegible]	ப
லா	ற்	கொ	ன்	னீ	[illegible]	ர்	தா
நீ	லா	க	ம	ல	[illegible]	கா	நீ

52-ம் பக்கம்

வேலாயுதபந்தம்.



52-ம் பக்கம்

இரதபந்தம்.

					பா				
				ன்	தா	த்			
			ல்	சி	ர	மே	வை		
		ய	தை	த்	வி	ரு	ப	ம்	
	பே	று	த	ரு	ந்	தா	தா	ப	ர
ப்	தி	த்	மு	ன்	த	ந்	[illegible]	[illegible]	[illegible]
	ர்	வா	னே	று	வி	ய	[illegible]	[illegible]	
		யூ	டை	ஷி	ணை	கோ	[illegible]		
			ர்	ப்	ய	தி	[illegible]		
				பா	ற்	ளி			
					று				
				கூ		த			

54-ம் பக்கம்

பதுமபந்தம்.